விலை 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
Viber : 076 636 3378

வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk
Valampurii

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 புரட்டாதி 08 ஞாயிற்றுக்கிழமை (24.09.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 279

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email: kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத குழுவின் வாள் வெட்டுக்கு இலக்காகி இளைஞன் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். 15

காணாமல்போனோர் அலுவலகம் நீதிமன்றமல்ல - பிரசாத் காரியவசம்

(கொழும்பு)

காணாமல்போனோர் குறித்த அலுவலகம் என்பது நீதிமன்றமல்ல எனவும் மாறாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பதனை ஆராய்வதற்கான ஒரு பொறிமுறை மாத்திரமே என வெளிவிவகார அமைச் 15

முல்லை கேப்பாப்பிலவு படையினர் வசமுள்ள மிகுதி காணிகளை விடுவிக்க நடவடிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவில் படையினர் வசமுள்ள மிகுதி காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கேப்பாப்பிலவு இராணுவ முகாம்களிலிருந்து படையினர் தற்போது வெளியேறிவருவதாக முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் குறிப்பிட் 15

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் நியமங்களை மேற்கொள்ளுங்கள்

மைத்திரியிடம் - அல் ஹுசைன் எடுத்துரைப்பு

(ஜெனிவா)

காணாமலாக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகத்தை ஸ்தாபிக்கும் போது அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விதத்தில் நியமங்களை மேற்கொள்ளுமாறும், நல்லிணக்க முயற்சியை விரைவுபடுத்துமாறும் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல் ஹுசைன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (03ஆம் பக்கம் பார்க்க)

பேரறிவாளனின் பிணை நீடிப்பு

(சென்னை)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளனின் பிணையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்க தமிழக அரசு தீர்மானித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. 15

இலங்கைக்கு 14 ஆவது இடம்

(ஜெனிவா)

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நாடுகள்பட்டியலில் 14 ஆவது இடம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐநா மனித உரிமைகள் ஆணைக்குழு மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை 15

அரசியல் அமைப்பு தொடர்பில் மக்களின் கருத்து முக்கியமானது

ஸ்ரீ தம்மதஸ்ஸி தேரர்

(கொழும்பு)

புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்படும் பட்சத்தில் அதற்காக மக்கள் கருத்துக்கணிப்பொன்று நடத்தப்படுவது கட்டாயமானதென அஸ்கிரிய பீட உபமகாநாயக்கர் ஆனமடுவே ஸ்ரீதம்மதஸ்ஸி தேரர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசியல் அமைப்பு தொடர்பிலான இடைக்கால அறிக்கை ஒன்று அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்லவினால் உபமகாநாயக்கருக்கு சமர்ப்பிக்கப்பட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

தற்போது நடைமுறையில் உள்ள அரசியலமைப்பில் 15

மாகாண சபையின் செயற்பாடுகளால் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல்

(கொழும்பு)

மாகாண சபையொன்றின் செயற்பாடுகளால் நாட்டின் இறைமைக்கு அச்சுறுத்தல் ஏற்படும்பட்சத்தில், அதில் தலையிடுவதற்கு புதிய அரசியல் அமைப்பின் மூலம் வாய்ப்பு உருவாவதாக ஐக்கிய இடதுசாரி முன்னணி கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜயம்பதி விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

ஐக்கிய இடதுசாரி முன்னணி

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் அமைப்பில் அதிகாரப் பகிர்வு தொடர்பில் ஏகீய என்ற சிங்கள பதத்தை ஆங்கில பதிப்பிலும் இடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணக்கம் 15

PSP Rent a Car
Thirunelvely
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடம் முன்பாக)
கார்கள் நாள், கிழமை, மாதம் அடிப்படையில் வாடகைக்கு
(C-9733)

- Prius hybrid - CAT
- Premio - CAB
- Premio - KF
- Axio - KM
- Axio - KL
- Axio - KI
- Nissan 16 - KD
- Nissan 15 - KD
- Alto - KI
- Indica - KI
- Dawoo -18

தொடர்பு :
0773777502
077 785 2456

மகாநாயக்கர்களை சந்திக்க சம்பந்தன் கண்டிக்கு விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், பௌத்த மக்களின் பெருந்தலைவர்களாக கருதப்படும் அஸ்கிரிய மற்றும் மல்வத்துப்பீட மகாநாயக்கர்களை சந்திக்கவுள்ளார்.

இதற்காக எதிர்க்கட்சித் தலைவர் மிகவிரைவில் கண் 15

லொறி - முச்சக்கரவண்டி விபத்து யாழ். இளைஞன் மன்னாரில் பலி

(மன்னார்)

மன்னார் - யாழ் பிரதான வீதி, மாந்தை சந்தியில் நேற்று சனிக்கிழமை மாலை 2.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் ஆத்திமோட்டை பகுதியைச் சேர்ந்த 19 வயதான சண்முகப்பிள்ளை இதுசன் என்ற இளைஞனே உயிரிழந்துள்ளார்.

திருக்கேதீஸ்வரத்தில் இருந்து 4 இளைஞர்கள் முச்சக்கர வண்டியில் பயணித்த நிலையில் பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட போது மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற லொறியுடன் மோதிக் குறித்த விபத்து 15

CNR Express & Cargo
எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.
(C-9713)

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி,
(பெருமாள் கோவில் அருகாமை)
யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:
021 5674145
077 2931062
follow us : cnrworldwideexpress

சுன்னாகம் பகுதியில் மின் ஒழுக்கு காரணமாக 3 கடைகள் தீக்கிரையானது

(யாழ்ப்பாணம்)

யாழ். சுன்னாகம் பகுதியில் மின் ஒழுக்கு காரணமாக 3 கடைகள் தீக்கிரையாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த சம்பவம் நேற்று இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். 15

இலங்கையில் பிறக்கும் 3 ஆயிரம் குழந்தைகளுக்கு இருதய புற்றுநோய்

(கொழும்பு)

இலங்கையில் வருடாந்தம் பிறக்கின்ற குழந்தைகளுள் சுமார் 3 ஆயிரம் குழந்தைகளுக்கு இயல்பாகவே இருதய நோய் இருப்பதாக தகவல் வெளியிடப்பட்டுள்ளது. 15

மனோதத்துவ வைத்தியம்

மனோதத்துவ நிபுணர் (General Psyohotheraphy)

Dr.P.ஆறுமுகம்

T.P :- 0777 569 205

27.09.2017 முதல் 04.10.2017 வரை
8 நாட்கள் மட்டுமே இருப்பார்
பதிவுக் கட்டணம் ரூபா 300/=

மீண்டும் யாழில்

ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்தின் மூலம் யாழ்ப்பாணத்தில் பலருக்கு குழந்தை கிடைத்தமைக்கு எம்மிடம் ஆதாரங்கள் உண்டு.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறப்பில் ஆண்மைக்குறைவை தவிர) எந்தமோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் மிகத்திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம்.

ஆரம்ப மனநோய், நீரிழிவு நோய், ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள், தலையிடி, முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு இயற்கை மூலிகை மருந்துகள் மூலம் சிகிச்சை.

இளைஞர்கள் ஞாபகத் திறன் குறைவு கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளை திருத்தி வாழ்வில் வெற்றிபெற

(C-9714)

இவை அனைத்துக்கும் மனோ தத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

நாதன் இன்

(பழைய கமல் லொச்) 392 / A மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலற்ரிக்கல் கடைக்கு அருகில்) பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்.

உயர்தரப் பரீட்சையின் பின்னர்...

Diploma in Spoken English Full / Part time

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your Academic / General

IELTS

Full time / Part time

Next exam date in Jaffna. 30 Sep. 2017
28 Oct. 2017

idp www. idp.com/srilanka

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு

(C-9731)

IELTS Life Skills A1 B1

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்

ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி	Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி	Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி	French

BRITISH COLLEGE of Education More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6

British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

மணமகன் தேவை

இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த அழகான 1991ம் ஆண்டு பிறந்த ஸ்கன்டிநேவியாவில் (Scandinavia) Full qualified. MBBS படித்து அரச வைத்தியசாலையில் வேலை செய்யும் மணமகளுக்கு அதே இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த Full qualified. MBBS படித்த பொருத்தமான டாக்டர் மணமகன் தேவை West ஐரோப்பா, East ஐரோப்பா Asiaஇல் படித்த மணமகன் விரும்பத்தக்கது.
Software engineering-Expert ஐரோப்பாவில் படித்தவர்களும் விரும்பத்தக்கது-பிறந்த ஆண்டு 1985-1990 இற்குள் இருப்பது நல்லது.
■ படிப்பு ■ வேலை ■ ஆங்கிலஅறிவு ■ வயது ■ நிறம் ■ உயரம் ■ நட்சத்திரம் ■ ஊர் ■ தற்போது எடுத்த தெளிவான Photo பொருத்தமானவர்கள் மேற்குறிப்பிட்ட தகவல்கள் அடங்கிய Bio Data உடன் E-mail மூலம் தொடர்பு கொள்ளவும். முழுமையான தகவல்கள் அடங்கிய விண்ணப்பங்கள் மட்டும் கவனத்தில் கொள்ளப்படும்.
E-Mail address:-Seegeer10@gmail.com

(231)

VACANCIES

ARPICO Insurance

85 வருடகால பழமை வாய்ந்த றிச்சட் பீரிஸ் குழு நிறுவனத்தின் ஆர்ப்பிக்கோ நிறுவனமானது குடாநாட்டில் தனது சேவைகளை விஸ்தரிக்கும் முகமாக நெல்லியடி மற்றும் சுன்னாகம் ஆகிய பிரதேசங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள கிளைகளுக்கு அனுபவம் மிக்க இரண்டு சந்தைப்படுத்தல் முகாமையாளர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன. தகுதியுடையவர்கள் 07 நாட்களுக்குள் விண்ணப்பிக்கவும்.

தா.யூட் பிளேவியன்
பிராந்திய முகாமையாளர்
ஆர்ப்பிக்கோ காப்புறுதி நிறுவனம்
இல.86, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே : 077 772 7721

(670)

37–வது பிறந்தநாளும் 21–வது மாத நினைவு நாளும்

திருமதி கெங்கேஸ்வரன் தீபா

எமது அன்புச் செல்வத்தின் பிறந்தநாளையும், நினைவு நாளையும் இன்று 24.09.2017 சொல்லொணா துயரத்துடன் நினைவு கூருகிறோம். எமது உயிருள்ளவரை உமது நினைவுகள் எம்மை விட்டு அகலாது. உமது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரதான வீதி,
முள்ளியவளை.

-குடும்பத்தினர்

(சி-9730)

வீடு வாடகைக்குத் தேவை

கல்வியங்காடு, கொக்குவில், திருநெல்வேலி மற்றும் கோப்பாய் போன்ற இடங்களில் சிறிய குடும்பத்துக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:
070 270 5349

(672)

கார், வான் வாடகைக்கு
Van and Car

விசேட சலுகைகளுடன் வாடகைக்கு விடப்படும்.
இல.28, ஐயனார் கோவில் வீதி, வண் மேற்கு, யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு:-0710319219

(18)

மணமகள் தேவை

யாழ்ப்பாணம், வடமராட்சி, இந்து உயர் கௌரவமுடையவர், 1985, அனுஷம், செவ்வாய்குற்றமில்லை, இஞ்சினியர் மணமகனுக்கு அழகான ஆசிரியை விரும்பத்தக்கது. சீதனம் பெரியளவில் எதிர்பார்க்கப்படமாட்டாது.

தொடர்பு:
071 841 6746

(643)

வீடு, காணி விற்பனைக்கு

நீர்வேலியில் அரசகேசரிப் பிள்ளையார் கோவில் (செம்பாட்டுப் பிள்ளையார்) அண்மையில் நற்சூழலில் அமைந்துள்ள 10 பரப்பு காணி வீட்டுடன் அமைந்தது. உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
077 639 5068

(சி-9723)

வீதி விபத்து மூவர் படுகாயம்

(கரணவாய்)

வடமராட்சியில் இடம்பெற்ற இருவேறு விபத்துக்களில் படுகாயமடைந்த மூவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 4 மணியளவில் குஞ்சர் கடைசந்திப் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில் கொழும்பைச் சேர்ந்த ஆர். விக்கிரமராட்சி (வயது27), இமையாணன் மேற்கைச் சேர்ந்த குகதாஸ் அனுசியா (வயது34) ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் மதியம் ஒரு மணியளவில் துன்னாலை தாமரைக்குளத்தடியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் புலோலி தெற்கை சேர்ந்த சி.இராமஜெயம் (வயது34) என்பவரும் படுகாயமடைந்துள்ளார்.

(மு-60)

நல்லிணக்கச் செயற்பாடுகள் படிப்படியாக முன்னேற்றம்

ஐ.நா.ஆணையர் அல்-ஹுசைனிடம் ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு என்ற வகையில் அதன் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப, மக்களின் நலனுக்காக மிகவும் பொறுப்புடன் செயற்பட்டு வருவதாகவும் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கான செயற்பாடுகள் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் செயிட் அல் -ஹுசைனிடம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



இந்தச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் போது அவசரப்பட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் கடும்போக்காளர்களே இலாபமடைவதாக குறிப்பிட்ட ஜனாதிபதி மனிதவுரிமைகள் பேரவை நிறைவேற்றிய முன்மொழிவில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை முழுமைப்படுத்துவதற்கு இரண்டு வருட காலம் தமது நாட்டுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக அடுத்த வருடம் இலங்கைக்கு விஜயம் செய்யுமாறும் ஆணையாளருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.

நேற்று முன்தினம் இரவு அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றது. இதன்போது மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து ஆணையாளருக்கு விளக்கிய ஜனாதிபதி இந்த அனைத்து நடவடிக்கைகளையும் நாட்டின் உள்ளக அரசியல் நிலவரங்களையும் சர்வதேச அரசியல் ,ஆழ்நிலைகளையும் கருத்திற்கொண்டே முன் னெடுக்க வேண்டும் என் றும் தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான வர்த்த மானி அறிவித்தலில் இந்த விஜயத்திற்கு முன்னர் தான் கையொப்பமிட்டதாகவும் அதன் நடவடிக்கைகள் செயற்றிறனாக முன்னெ டுக்கப்படும் என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி புதிய அரசியலமைப்பு தொடர்பான உத்தேச வரைபை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். பாதுகாப்பு படையினர் வசமுள்ள கிழக்கு மாகாணத்தின் அனைத்து காணிகளும் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் வடக்கில் உள்ள காணிகளில் குறிப் பிடத்தக்களவு விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் எஞ்சியவை நிர்வாக ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு முறையாக மக்களிடம் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். (இ-3)

வடக்கில் இடம்பெறும் குற்றச்செயல்களைத் தடுக்க ஆளுநர் கூரே தலைமையில் ஆலோசனைக்கூட்டம்

"ஆவா குழுவின் செயற்பாடுகள் கட்டுப்பாட்டுக்கள்" -பொலிஸார்-

வடமாகாணத்தில் இடம்பெறும் குற்றச் செயல்களை தடுப்பது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் வடமாகாண சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ரொசான் பெர்னாந்து, வவுனியா மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், கிளிநொச்சி சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி பாலித சிறிவர்த்தன, யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னாந்து, முல்லைத்தீவு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கந்தவத்த, மன்னார் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சிறிவர்த்தன மற்றும் ஆளுநரின் செயலாளர் எஸ். இளங்கோவன், பிரத்தியேகச் செயலர் ஜே.எம். சோமசிறி உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

மக்களுக்கு பீதியூட்டும் வகையில் செயற்பட்டுவந்த ஆவா குழுவின் செயற்பாடுகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்பதாக பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் மது போதையில் வீதிகளில் மக்களுக்கு இடையூறு விளைவிப்போர் மற்றும் போதை வஸ்து பாவனையாளர்களை கைது செய்து நீதிமன்றில் முன் னிலைப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. தமிழ் பேசும் பொலிஸார் குறைவாக காணப்படுவதனால் பணிகளை தமிழ் மொழியில் மேற்கொள்வதில் சிரமங்கள் நிலவுவதாகவும் ஆளுநரிடம் தெரிவித்தனர்.

மேலும் அனுமதியற்ற வகையில் வீதி ஓரங்களில் இந்து, பௌத்த, கிறிஸ்த சமயங்களின் தெய்வங்களை அமைப்பதன் காரணமாக வீண் பிரச்சினைகள் சமூகங்களுக்கு இடையில் எழுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இங்கு கருத்து வெளியிட்ட ஆளுநர் றெஜினோல்ட் கூரே தமிழ் பேசும் இளைஞர் யுவதிகளை பொலிஸ் சேவையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி வடக்கு வாழ் தமிழ் இளைஞர்,யுவதிகள் பொலிஸ் சேவையில் இணைந்து கொள்ள அனைத்து தரப்பினரும் இளைஞர் யுவதிகள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும் என வும் தெரிவித்தார்.

முக்கிய நகரங்கள் மற்றும் பொதுமக்கள் செறிந்து காணப்படும் பகுதிகளில் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களை இனங்காண்பதற்காக சி.சி.ரி.வி. கமராக்களை பொருத்துவதற்கு ஆலோசித்துள்ளதாகவும். அதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாகவும் கூறினார்.

அனுமதியற்று வீதி ஓரங்கள் மற்றும் மரங்களின் கீழ் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வரும் சிலைகள் தொடர்பில் இந்து சமய விவகார அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், கிறிஸ்தவ சமய விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க, பௌத்த விவகாரங்களுக்கான அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேரா ஆகியோருடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என தெரிவித்தார். (இ-3)

மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் கையெழுத்து



பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரிய கையெழுத்திட்டார்.

மாகாண சபைத் தேர்தல்களில் திருத்தங்களைக் கொண்டுவரும் வகையில் திருத்தச் சட்டம் ஒன்று அண்மையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது குறித்து நடத்தப்பட்ட சபை வாக்கெடுப்பில் மூன்றுக்கு இரண்டு என்ற விகிதத்தில் மேற்படி சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. நிறைவேற்றப்பட்ட இச்சட்ட மூலத்தில் சபாநாயகர் கரு ஜெயசூரிய நேற்று முன்தினம் கையெழுத்திட்டார். (இ-3)

15 இலட்சம் ரூபா பெறுமதியான தங்கம் கடத்திய பெண் கைது!

பதினைந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்கம் கடத்திய பெண் ஒருவரை கட்டுநாயக்க விமான நிலைய அதிகாரிகள் நேற்றுக் காலை கைது செய்துள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் 15 இலட்சத்து 72550 ரூபா பெறுமதியான தங்கத்தை குறித்த பெண் இந்தியாவிற்கு கடத்திச் செல்ல முயற்சித்த போது விமான நிலைய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இந்தியாவின் கோயம்புத்தூருக்கு செல்வதற்காக விமான நிலையம் சென்றிருந்த குறித்த பெண்ணிடம் நடத்திய சோதனையின் போது தங்கம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணிடமிருந்து 314.5 கிராம் எடையுடைய தங்கம் மீட்கப்பட்டுள்ளது. இந்தத் தங்கம் அரசுடைமையாக்கப்பட்டதுடன் குறித்த பெண்ணுக்கு தங்கம் கடத்தியமைக்காக ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக் கப்பட்டுள்ளது. வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த பெண் ஒருவருக்கே இவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டது. (இ-7)

கிளைமோர் குண்டு செயலிழப்பு

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் பகுதியில் மீட்கப்பட்ட அதிசக்தி வாய்ந்த கிளைமோர் குண்டை விசேட அதிரடிப்படையினர் செயலிழக்கச் செய்துள்ளனர்.

மேற்படி பகுதியிலுள்ள மலசலகூட குழியில் இருந்து கிளைமோர் குண்டு ஒன்றும் மூன்று கைக்குண்டுகளும் விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டன.

இதனை வல்வைவெளிப்பகுதியில் வைத்து கடந்த 21 ஆம் திகதி விசேட அதிரடிப் படையினர் செயலிழக்கச் செய்தனர். (இ-6)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

இனந்தெரியாதோர் தாக்குதல் முச்சக்கரவண்டி சேதம்

(கோப்பாய்)

இனந்தெரியாத நபர்களின் தாக்குதலில் முச்சக்கரவண்டி ஒன்று சேதமாக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று இரவு 8 மணியளவில் உரும்பிராய் சந்திக்கு அருகாமையில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

தாக்குதலுக்குள்ளாகிய முச்சக்கரவண்டி வாடகைப் பயணம் ஒன்றை மேற்கொண்டு விட்டு உரும்பிராய் முதலாம் ஒழுங்கையில் உள்ள தனது வீட்டுக்கு முன்பாக முச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு உரிமையாளர் வீட்டுக்குள்ளே சென்றுள்ளார்.

அவ்வேளை மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் முச்சக்கரவண்டியை இரும்புக் கம்பிகளினால் தாக்கி விட்டு தப்பிச்சென்றுள்ளனர்.

முச்சக்கரவண்டியை தாக்கும் சத்தம் கேட்டு உரிமையாளர் வெளியே வந்த சமயமே தாக்குதல் இடம்பெற்ற விடயம் அவருக்கு தெரியவந்துள்ளது. அத்தாக்குதலினால் முச்சக்கரவண்டியின் முன்பகுதி பாரியளவில் சேதமடைந்துள்ளது. (87)

தல தோனியை பாராட்டிய வோர்னர்

விராட் ஹோலியை சிறந்த அணித் தலைவராக வளர்த்து வரும் தோனியின் செயலை அவுஸ்திரேலிய துணைத் தலைவர் வோர்னர் வெகுவாக பாராட்டியுள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் இந்தியா வெற்றி பெற்று 2-0 என முன்னிலையில் இருக்கிறது.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் தோனி விக்கெட் காப்பாளராக செயல்பட்டு வருகிறார். என்றாலும் விராட் ஹோலிக்கு அதிக அளவில் உதவி வருகிறார். சில நேரங்களில் தலைவர் போன்றே செயல்படுகிறார்.

தோனியின் செயல்பாட்டிற்கு அவுஸ்திரேலிய அணியின் துணைத் தலைவர் வோர்னர் பாராட்டு தெரிவித்துள்ளார். அவர் விராட் ஹோலியை சிறந்த தலைவராக வளர்த்து வருகிறார் என்று கூறியுள்ளார்.

இதுகுறித்து வோர்னர் கூறுகையில் "தோனி தனது தலைமைத்துவ காலத்தில் மிகவும் அமைதியான வீரராக செயல்பட்டார்.

இதனால் அமைதியான தலைவர் என்ற பெயரை பெற்றார். தலைவராக பல சாதனைகளை படைத்து சிறந்து விளங்கினார். அந்த பணியை தற்போதும் செய்து வருகிறார். விராட் ஹோலியை சிறந்த தலைவராக வளர்த்து வருகிறார். முன்னாள் தலைவர் இப்படி செய்வது சிறப்பான விடயம். தோனி விராட் ஹோலியை வளர்ப்பது இருவருக்கும் சிறப்பான விடயம் என்றார்.

மணமகள் தேவை

யாழ்.இந்து 1978 ஆயிலிய நட்சத்திர முள்ள 7ஆம் இடத்தில் செவ்வாய், சுக்கிரன், சனி, 74 1/4 பாவம் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:- (671)

077 574 8095

காணி விற்பனைக்கு

கிளிநொச்சி A9 பிரதான வீதியில் இருந்து 100 M தூரத்தில் மத்திய கல்லூரிக்கு முன்பாக 30 பேர்ச்சல் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

077 698 9774
021 228 0041

(C-9728)

அமெரிக்க லொட்டறி

விசா 2018

வருடந்தோறும் 55000 பேர் தெரிவு செய்யப்படும் அமெரிக்க லொட்டறி விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

திருமுருகன் கொம் நெற் (Pvt) Ltd

216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
18, பிரதான வீதி, நெல்லியடி.

(673) Hotline: 077 755 4528

சொர்க்கம் திருமண சேவை

கனடாவில் வசிக்கும் றோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த 30 வயது பட்டதாரி மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகிறோம். மட்டக்களப்பு பகுதி மணமகள்கள் விரும்பத்தக்கது.

கனடாவில் வசிக்கும் 30 வயதான 8 இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு தகுந்த மணமகனை தேடுகிறோம். (635)

Tp & Viber 0014166661855
0016475043336

வீட்டுடன் கூடிய காணி விற்பனை

01 வட்டுக்கோட்டை செட்டியார்மடம் 04 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
02. வன்னியசிங்கம் வீதி கோண்டாவில் 02 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.
03. இராசாவின் தோட்ட வீதியில் 05 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- (675)

077 167 1174, 077 728 6061

கண்ணீர் அஞ்சலி

திருமதி **மகேஸ்வரி கேசவன்**

எனது நண்பன் லயன் **கேசவன் பிரதீபன்** அவர்களின் பாசமிகு தாயார் திருமதி **மகேஸ்வரி கேசவன்** அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு ஆழ்ந்த துயரில் இருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் உற்றார் உறவினர்களுக்கும் எமது கண்ணீர் காணிக்கைகள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

லயன் DR.K.M பத்மநாதன் குடும்பத்தினர், உரிமையாளர்-வெஸ்கோ மருந்தகம், கொக்குவில் லயன்ஸ் கழகம், புற்றுநோய் எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம், வடபிராந்திய யாழ்.ஆங்கில மருந்து வர்த்தக சங்கம், இலங்கை மனித உரிமைகள் சங்கம் (674)

மரண அறிவித்தல்

திருமதி கேசவன் மகேஸ்வரி

மீசாலை வடக்கு மீசாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கேசவன் மகேஸ்வரி (ஓய்வுபெற்ற ஆசிரியை - விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை) நேற்று முன்தினம் (22.09.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசுவாமி - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குமாரசுவாமி கேசவன் (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், சகிலா (முன்னாள் ஆசிரியை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, தற்பொழுது அவுஸ்திரேலியா), சயந்தன் (சட்டத்தரணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்), பிரதீபன் (முகாமையாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், சாவகச்சேரிக் கிளை) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாஸ்கரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), தாரணி (முன்னாள் காப்புறுதி ஆலோசகர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாவகச்சேரிக் கிளை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் தனலட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியை), திருச்செல்வம் (ஜக்கிய ராச்சியம்), ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வாமதேவன், ஜெயதேவன், மகாதேவன் மற்றும் சாரதா, ராதா, மாதவன், ஜானகி, அருணாசலம், காலஞ்சென்ற பேரம்பலம் மற்றும் மஞ்சுளா ஆகியோரின் அன்பு மைத்துனியும், சாகித்தியன், சாகித்தியா, தரிணி, தர்மீகன் ஆகியோரின் அன்புப் பேரத்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (24.09.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். (C-9734)

ஏ9 வீதி, 299-ம் மைல்கல் அருகாமை, புத்தூர் சந்தி மீசாலை வடக்கு, மீசாலை.

தகவல் : கேசவன் சஜந்தன் (சட்டத்தரணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர் - 0772602605), பிரதீபன் (முகாமையாளர் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் சாவகச்சேரி கிளை - 0773276500)

வேலையாட்கள் தேவை

எமது ஸ்தாபனத்துக்கு

பொதிசுமப்பவர்கள் தேவை

- நிரந்தரமான வேலை
- உணவுக் கொடுப்பனவுகள்
- தங்குமிட வசதி (தேவைப்படின்)

நேரில் வரவும் (676)

தேனு களஞ்சியம்

(நெஸ்லே விநியோகஸ்தர்)

மில் லேன், உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

TP: 021 492 1258, 075 642 0131

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

உயர்தரத்தின் பின் பட்டம்படிப்போ வேறு உயர்கல்வியோ அல்லது உயர்வேலைவாய்ப்பை பெற்று வாழ்வில் வெற்றிபெற ஆங்கிலக்கல்வி இன்றியமையாததாகும். இதனை கருத்திற் கொண்டு, A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு டிப்ளோமா ஆங்கிலக்கற்கைநெறியை DMI வழங்குகின்றது.

DIPLOMA IN ENGLISH
Spoken English

யாழ்ப்பாணம்	நெல்லியடி	சாவகச்சேரி	சுன்னாகம்	கிளிநொச்சி
Mon,Wed,Fri 8:00 a.m	Mon,Wed,Fri 9:30a.m	Tue, Thu 08.30 a.m.	Mon,Wed,Fri 11:00 a.m	Sat, Sun 9.30a.m
Mon,Wed,Fri 3:30 p.m	Tue, Thu 3.30 p.m.	Sat, Sun 10.30 a.m.	Sat, Sun 3.30 p.m.	Tue,Thu 9:30 a.m
Sat, Sun 3.30 p.m.	Sat, Sun 3:30 p.m.		Tue,Thu 9:00 a.m	

சர்வதேச ஆங்கிலப் பரீட்சைகள்

IELTS | IELTS Life Skills (A1,B1) திருமணம் செய்து UK செல்பவர்களுக்கு 100% விசாவை வெற்றிகரமாக உத்தரவாதம்

DMI COMPUTER EDUCATION

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையமாகும்.

DMI COMPUTER EDUCATION

No.113, கண்ணதிட்டி வீதி, (காவல்துறை தலைமை அருகாமை) யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403
M.M.V.வீதி (ஆதுல நல விடுதியருகே முன்னால்) நெல்லியடி Tel.: 021-226 2470
No. 174 கண்டி வீதி. HNB வங்கி அருகில் சாவகச்சேரி Tel.: 021-227 0775
No. 130 K. K. S வீதி, NSB வங்கி அருகில் சுன்னாகம் Tel.: 021-224 1970
No.19,A9 வீதி, ஆனந்தபுரம் (முத்திர நல விடுதியருகே முன்னால்) கிளிநொச்சி Tel.: 021-228 5655

இலங்கையில் சார்க் மருத்துவக் கல்லூரி

அமைச்சர் ராஜித தகவல்

இலங்கையில் அமைக்கப்படவிருக்கும் சார்க் மருத்துவக் கல்லூரிக்கான கட்டட வரைபடம் இவ்வாண்டு டிசெம்பர் மாதத்துக்குள் பூர்த்தியாகும் என்று சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற சார்க் நாடுகளின் சுகாதார அமைச்சர்களுக்கான கூட்டத்தின் போது, சார்க் மருத்துவக் கல்லூரிக்கான திட்டம் ஒன்றை சார்க் இயக்குநர் நாயகம் கையளித்திருந்ததாகவும் அதை நிர்மாணிப்பதற்கான சகல உதவிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, அந்தக் கல்லூரியை இலங்கையில் நிர்மாணிப்பதற்கான ஆலோசனையை அமைச்சர் ராஜித சேனாரத்ன வழங்கியிருந்தார். இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப் பட்டதுடன் அதற்கான வரைபடம் தயாரிக்கும் திட்டமும் ஆரம்பிக்கப் பட்டது.

இக்கல்லூரியை நிர் மாணிப் பதற்கான நிதி விரைவில் ஒதுக் கப்படும் என்று தெரியவருகிறது.

சார்க் நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் இக் கல்லூரியில் குறை ந்த கட்டணத்தில் மருத்துவக் கல்வியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (இ-3)

இயந்திரங்கள் விற்பனைக்கு

UK ஜெனரேட்டர் 35 KW அமெரிக்கன் பட்டறை, மர உபகரணங்கள் அலுமினிய பார்கள், உபகரணங்கள் இரும்பு வேலைப் பொருட்கள் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:- 077 133 6617

பணியாளர் தேவை

யாழ்.நகரிலுள்ள தனியார் வைத்தியசாலைக்கு 18 வயதிற்கு மேற்பட்ட பெண் வேலையாட்கள் தேவை. யாழ்நகரில் இருந்து ஐந்து கிலோ மீற்றருக்குள் இருப்பவர்கள்மட்டும்சுயவிபரக்கோவையுடன் 25.09.2017 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு 514/18, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்(யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவிற்கு முன்பாக) என்ற முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

பணிப்பாளர்

(657)

கண்ணீர் அஞ்சலி

அமரர். திருமதி.

கேசவன் மகேஸ்வரி

இலங்கை தமிழரசுக் கட்சி, சாவகச்சேரி கிளையின் செயலாளரும் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான கௌரவ கேசவன் சயந்தன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. கேசவன் மகேஸ்வரி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு துயர் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத் தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-9724) இலங்கைத் தமிழரசுக் கட்சி, சாவகச்சேரி தொகுதி.

விற்பனைக்கு/ வாடகைக்கு

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் சகல வசதிகளுடன் கூடிய முதலாம் மாடியில் 426 சதுர அடிப்பரப்பளவு கொண்ட கடை விற்பனைக்கு/வாடகைக்கு உண்டு. உரிமையாளர் வெளிநாடு செல்ல இருப்பதனால் விலை பேசி தீர்க்கலாம்.

தொடர்புகளுக்கு:- 072 777 3222, 076 871 6793

(சி-9729)

மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1992 சித்திரை (2 பாதம்) செவ்வாய் தோசம் இல்லை. சுவிசில் வசிக்கும் மணமகளுக்கு சுவிசில் PR உள்ள மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு:
சுவிஸ் -0041628223469
யாழ் -021 222 9618
0779721268

(662)

ஒரே பார்வையில் நவராத்திரி வழிபாட்டு முறைகள்

ஆறாம் நாள்

கோலம்போடும் பொருள்	பருப்பு
கோலவகை	தேவிநாமங்கள்
அபிஷேகத்திற்குரிய திரவியம்	வாசனைத்திரவியம்
திலகம் இடப்படும் திரவியம்	குங்குமம்
ராகம்	நீலாம்பரி
இசைக்கப்படும் வாத்தியம்	பேரி மேளவாத்தியம்
கனிகள்	நாரத்தம்பழம்
நிவேதனங்கள்	தேங்காய்ச்சாதம்
மலர்கள்	செம்பருத்தி
இலைகள்	சந்தன இலை

தொகுப்பு:- சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் (வீணாகான குருபீடம்)

சீரடி சாயி மூர்த்தி பிரதிஷ்டை

நல்லூர் சாயி இல்லப் பொன்விழாவை முன்னிட்டு (1967-2017), எதிர் வரும் 28.09.2017 வியாழக்கிழமை 359/32, நல்லலஷ்மி அவெனியு (கோயில் வீதி) நல்லூர் (மங்கோஸ் அருகாமை) என்ற விலாசத்தில் அமைந்துள்ள சாயி இல்லத்தில் சீரடி சாயி மூர்த்தி பிரதிஷ்டை செய்யப் படவுள்ளது.

செப்டெம்பர் 28, 29, 30 ஆகிய தினங்களில் இவ் விழாவை முன்னிட்டு அபிஷேகம், தேவபாராயணம், பஜனை, இலங்கை, இந்தியக் கலைஞர்களின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. இத் தினங்களில் அன்னதானமும் நடைபெறும். இந் நிகழ்வுகளில் பங்களிப்புச் செய்ய விரும்புவோர், எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு: ஒவ்வொரு நாளும் காலை 7.00 மணிக்கு அபிஷேகம், 8.00 மணிக்கு காலை ஆராத்தி, நண்பகல் 12.00 மணிக்கு மதிய ஆராத்தி, 6.00க்கு மாலை ஆராத்தி, இரவு 8.00க்கு இரவு ஆராத்தி, பிரதி வியாழக்கிழமை தோறும் மாலை 5.00- 6.00 வரை பஜனை நடைபெறும்.

மேலதிக விபரங்களுக்கு: 077 487 4032, 021 222 1634 www.saiillam.ca

(659)

இராசி பலன்

24.09.2017
(புரட்டாதி 08, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி பிற்பகல் 1.06 மணிவரை
விசாகம் பின்னிரவு 5.36 மணிவரை
சுபநேரம் 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் 14.32-6.02 மணிவரை

வளவன்

	கிரகநிலை சந்திராஷ்டமம் அச்சுவினி இரவு 11.15 மணிக்கு விருச்சிகம்- சந்திரன்	ராகு
கேது		செவ், சுக்
	சனி	குரு சந் / சூரி புத

மீனம் எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல்நலனில் அக்கறை தேவை.

மேடம் விருப்பங்கள் நிறைவேறும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும், புகழ்கூடும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், புதிய பொருட்சேர்க்கையுண்டு.

இடபம் எளிதில் உணர்ச்சி வசப்படுவதைத் தவிர்ப்பது நல்லது, கல்யாணக் கனவுகள் நனவாகலாம், சேமிப்பை உயர்த்தும் எண்ணம் மேலோங்கும், கௌரவமான நாள்.

மிதுனம் மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், உறவினர் வழியே இனிய சம்பவங்கள் இடம்பெறலாம், வியாபார விருத்தியுண்டு.

கும்பம் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டவேண்டிய நாள், வீண்பழிகள் அகலும், தந்தை வழி உறவில் அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம்.

மகரம் அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

கடகம் வாகன சுகமுண்டு, தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

சிம்மம் நண்பர்கள் சொல்லும் ஆலோசனை உங்களுக்கு நல்லதாகத் தெரியும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு.

தனுசு தூரதேசத்திலிருந்து அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பரக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

விருச்சிகம் பணத்தேவைகள் பூர்த்தியாகும் நாள், வீட்டுப் பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும், சயன சுகக் குறைவான நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

துலாம் நண்பர்கள் பக்கபலமாக இருப்பர், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் அகலும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

கன்னி வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், விவாதங்களை தவிர்ப்பது நல்லது, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் 23,24 ஆவது ஆண்டு விழாவும் வாணி விழாவும் அண்மையில் உரும்பிராய் இந்துக்கல்லூரி கற்பக விநாயகர் கலையரங்கில் ஓய்வுநிலை கோட் டக்கல்விப் பணிப்பாளர் அ.ஈஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.பல்கலைக்கழக கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தம்பிஐயா-கலாமணி மங்கல விளக்கேற்றுவதையும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வலிகாமம் கிழக்கு (கோப்பாய்) பிரதேச செயலர் திருமதி.சுபாஜினி மதியழகன், மாணவர்கள் கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

பாடசாலையின் பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம் உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 26ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் வாழ்வகத் தலைவர் ஆ.இரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் கோட்டக் கல்வி அலுவலர் ரி.மாதவன், வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினராக ஓய்வுநிலை கோட்டக்கல்வி அலுவலர் சு.சண்முககுலகுமாரன் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-3)

பகிரங்க அறிவித்தல்

யாழ்ப்பாணம் நீதிமன்றில் யாழ்ப்பாணப் பொலிஸாரால் பாரப்படுத்தப்பட்டுள்ள பின்வரும் சான்றுப்பொருள் இதுவரை உரிமை கோரப்படாத நிலையில் காணப்படுகின்றது. எனவே குறித்த சான்றுப்பொருளை உரிமை கோருபவர்கள் எவரேனுமிருப்பின் 02 மாத காலப்பகுதிக்குள் அலுவலக நேரங்களில் உரிய ஆவணங்களுடன் சமுகமளித்து உரிய கோரிக்கையை நிலைநாட்டும் படி குற்றவியல் நடவடிமுறைச் சட்டக் கோவையின் 431(2)ன் பிரகாரம் பகிரங்கப்படுத்தப்படுகின்றது.

தொ.இல:-01, வழ.இலக்கம்:-AR/57/17, சான்றுப் பொ.இல:-PR/166/15, சான்றுப் பொருள் விபரம்:-KLV/40 B400-129756 ,இலக்க Sony TV -01, மறுதவணை:-27.11.2017 என பதிவாளர்அறிவித்துள்ளார். (இ

யாழ். மாநகர சபையின் ஏற்பாட்டில் யாழ். சென்ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு செயலமர்வும் செயன்முறை விளக்கமும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாடசாலை அதிபர் கே.கவியுகன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி கலாநிதி எஸ்.சசிதரன், யாழ்.மாநகர சபை பொறுப்பதிகாரி இ.அசோகன், உத்தியோகத்தர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படங்கள்:-கே.பரமேஸ்வரன்)

சர்வதேச கடற்கரை துப்புரவாக்கல் வாரத்தை முன்னிட்டு நெடுந்தீவு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நெடுந்தீவு மணல்துறை கடற்கரைப் பகுதி துப்புரவாக்கல் வேலைத்திட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் சி.ஜெயகாந் வழிகாட்டலில் நடைபெற்றது. இதில் நெடுந்தீவு பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், கடற்படையினர் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:-எம்.கியூமன்)

சித்திரத்தேர் வெள்ளோட்டம்



நல்லூர் நாவலர் வீதி சீரடி சாயி மந்திரின் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் 30ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (இ-3)

பண்பாட்டுப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு இன்று

வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு உலக தவில் மேதை லயஞான குபேரபூபதி வி.தெட்சணாமூர்த்தி அரங்கில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் இ.இரவீந்திரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினராக வடமாகாண சுகாதாரம், சுதேச மருத்துவம், நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சர் வைத்திய கலாநிதி ஞா.குணசீலன், சிறப்பு விருந்தினராக கலைஞர் வேல் ஆனந்தன் ஆகியோர் கலந்து கொள்வர். இந்நிகழ்வில் நடனம்-மயில் அலாரிப்பு, மீனவ நடனம், கீர்த்தனை என்பன இடம்பெறும். (இ-3)

ஸ்ரீ மஹா சரஸ்வதி ஹோமம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ செல்லக் கதிர்காம சுவாமி ஆலய ஸ்ரீ மஹா சரஸ்வதிஹோமம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாகி இடம்பெறும். (இ-3)

கோப்பாய் முதியோர் சங்கத்தின் 6ஆவது ஆண்டு நிறைவுநாள்

கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் 6ஆவது ஆண்டு நிறைவுநாள் எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் வடக்கு முதியோர் சங்க மண்டபத்தில் இராமலிங்கம் தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் அனைத்து சிரேஷ்ட பிரஜைகளையும் கலந்து கொள்ளுமாறு செயலாளர் ந.கனகலிங்கம் அறிவித்துள்ளார். (இ-3)

சிறந்த வாழ்க்கைக்கு சிறந்த ஆரம்பம்



ரூ.960/-

உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த ஆரம்பம். இயற்கையான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும், நோய் எதிர்ப்புச்சக்தியை அதிகரிப்பதற்கும், நலமான வாழ்விற்கும் அவசியமான விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட புறோபயோட்டிக்ஸ் மற்றும் போஷாக்கு நிறைந்தது.

Nestlé
NAN GROW

2-5 வயதிற்கிடைப்பட்ட குழந்தைகளுக்கென விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.

Nestlé
Good Food, Good Life

BRITISH COLLEGE OF ENGLISH

IELTS

October 05, November 02, December 02
திகதிகளில் யாழ்ப்பாணத்தில்
நடைபெறவிருக்கும் IELTS பரீட்சைகளுக்கு
ஆயத்தப்படுத்தும் வகுப்புக்கள்

AN INNOVATIVE APPROACH TO IELTS

OUR TARGET IS BAND : 09

இன்றே எமது வகுப்புக்களில் சேர்ந்து
ஓர் Scholarship இனை வெல்லும்
வாய்ப்பினைப் பெறுங்கள்.

Six scholarships* each worth £3,000 will be awarded to students applying to any of the following countries

UK | Australia | Canada | New Zealand | USA

வகுப்புக்கள் இப்பொழுது நடைபெறுகின்றன. மேலதிக தொடர்புகளுக்கு

BRITISH COLLEGE OF ENGLISH
Palaly Road, Urumpirai. (உருமபிராய் வெற்றோல் செற்றிற்கு முன்னால்)
Tel : 021 222 0384 , 077 880 3887

JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPARTMENT
464, Hospital Road, Jaffna.

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 13
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: பட்டதாரி/ அரசதொழில்
தொ.இ: B/7094

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: செவ் 1 இல்
தகைமை/தொழில்:A/L/பிரான்ஸ்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/7095

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/விவசாயம்
தொ.இ: B/7096

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 42 செவ் 7 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:சிவில் பொறியியலாளர் லண்டன் PR
தொ.இ: B/7097

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4944

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 46 சூரி செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
தொ.இ: G/4976

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்திரட்டாதி
கி.பா: 46 சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BA/ஆசிரியர்
தொ.இ: G/4980

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 21 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L/தனியார் தொழில்
தொ.இ: G/4981

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைபேசி தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை எடுக்கச் சொன்னவர் பிரதமர் ரணிலே

அர்ஜுன் மகேந்திரன் சாட்சியம்

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்குமாறு தனக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே கூறியதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மத்திய வங்கி முறிமோசடி தொடர்பில் விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்துள்ளார்.

எனக்கு கடந்த 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 08 ஆம் திகதி மாலை வேளையில் பிரதமர் தொலைபேசியில் தொடர்பு கொண்டு என்னிடம் இந்த அழைப்பை விடுத்தார்.

சிரேஷ்ட மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் ஜனாதிபதி சட்டத்தரணி தப்புல டி லிவேராவினால் ஆணைக்குழு முன்னிலையில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில் மகேந்திரன் இதனைக் கூறியுள்ளார்.

அர்ஜுன் மகேந்திரனினால், கடந்த 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி இலஞ்ச ஊழல்கள் ஆணைக்குழுவுக்கு சிங்கள மொழி மூலத்தில் வழங்கப்பட்டிருந்த அறிவித்தலொன்றை ஆணைக்குழு முன்னிலையில் சட்டத்தரணி தப்புல டி லிவேரா வாசித்துக் காட்டியுள்ளார்.

இதில், "தான் டுபாய் நாட்டில் பணியாற்றிக் கொண்டிருக்கும் போது கடந்த 2015 ஜனவரி 09 ஆம் திகதி அல்லது அதற்கு கிட்டிய ஒரு தினத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்ற முடியுமா? என என்னிடம் பிரதமர் கேட்டார்"

இந்த அறிக்கையின் ஆங்கில மொழி பெயர்ப்பையும் சட்டத்தரணி இங்கு கூறிக் காட்டியுள்ளார். இதற்கும் அர்ஜுன் மகேந்திரன் ஒப்புக் கொண்டுள்ளார்.

தான் பிரதமரை தனிப்பட்ட முறையில் அறிந்தவன். தனக்கு வங்கியியலாளராக இருந்த நீண்டகால அனுபவத்தின் காரணமாக பிரமதமர் எனக்கு இந்தப் பணியை ஒப்படைத்திருப்பார் என தான் நம்புவதாகவும் மகேந்திரன் ஆணைக்குழு முன்னிலையில் நேற்று முன்தினம் கூறியுள்ளார்.

பிரதமரின் வேண்டுகோளின் பேரில் அதற்கு உடன்பட்டு, கடந்த 2015 ஜனவரி மூன்றாம் வாரம் இலங்கை வந்தேன். இதன் பின்னர் கடந்த 2015 ஜனவரி 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தனக்கு மத்திய வங்கி ஆளுநருக்கான கடிதம் கிடைக்கப் பெற்றது. 2015 ஜனவரி 26 ஆம் திகதி திங்கட்கிழமை மத்திய வங்கியின் ஆளுநராக பொறுப்பேற்றேன் எனவும் நேற்று முன்தினம் ஆணைக்குழுவிடம் மகேந்திரன் கூறியுள்ளார். (இ-3)

ஹற்றனில் 'காட் திருடி' கைது

தன்னியக்க இயந்திர (ஏ.டி.எம்) அட்டையை திருடி அதில், பொருட்களை கொள்வனவு செய்ததுடன், பணத்தையும் எடுத்திருந்த பெண்ணொருவரை ஹற்றன் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹற்றன் பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதான பெண்ணையே நேற்று முன்தினம் மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த அட்டையை (காட்) பயன்படுத்தி அப்பெண் 80 ஆயிரம் ரூபாய் பணத்தை எடுத்துள்ளதுடன், 30 ஆயிரத்து 790 ரூபாய்க்கு ஆடைகளை கொள்வனவு செய்துள்ளார்.

வங்கியிலிருந்து பணத்தை மீள எடுக்கும் போதும் ஆடைகளை கொள்வனவு செய்யும்போதும் சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியிருந்த காட்சிகளை அடிப்படையாகக் கொண்டே சந்தேக நபரான அப்பெண்ணை கைது செய்துள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்தனர். (இ-3)

20-வது ஆண்டு நிறைவும் நூல் வெளியீடும்

யாழ். மாவட்ட பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் 20 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று காலை 9.30 மணிக்கு கோண்டாவிலிலுள்ள பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்கத்தின் காரியாலயத்தில் சங்கத்தின் தலைவர் செ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமாகிய க.சிவகரன், யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன், வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனேஸ்வரன் மற்றும் யாழ்.மாவட்ட கூட்டுறவு ஊழியர், ஆணைக்குழுவின் செயலாளர் திருமதி இன்பராஜ் ஆகியோர் கலந்து கொள்வர்.

இந் நிகழ்விற்கான ஆசியுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்குவார். (இ-10)

2017 இல் ஒரு இலட்சத்து 41,000 பேர் வெளிநாட்டு வேலைக்குச் சென்றுள்ளனர்

பணியகம் தகவல்

கடந்த எட்டு மாதங்களில் இலங்கையரகள் ஒரு இலட்சத்து 41 ஆயிரம் பேர் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத்தேடி சென்றுள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

இதில், பெண்கள் 48, 374 பேரும், ஆண்கள் 93, 351 பேரும் அடங்குகின்றனர். ஆகக்கூடுதலாக 42, 389 பேர் மேல் மாகாணத்திலிருந்தே சென்றுள்ளனர். குறைவாக ஊவா மாகாணத்திலிருந்து 3,994 பேர் சென்றுள்ளனர்.

இக்காலப்பகுதிக்குள் வீட்டுப் பணிப்பெண்களாக, 37,002 பேர் பயணித்துள்ளனர் என்றும் அந்த பணியகம் தெரிவித்துள்ளது. (இ-3)

எந்த நாட்டின் அகதிகளுக்கும் இலங்கையில் அடைக்கலமில்லை

பிரதமர் ரணில் திட்டவட்டம்

(கொழும்பு)

எந்த நாட்டில் இருந்து வந்தாலும் அடைக்கலம் கோரும் அகதிகளை இலங்கை ஏற்றுக் கொள்ளாது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரோஹிஞ்யா அகதிகள் தொடர்பான இலங்கையின் நிலைப்பாடு தொடர்பாக நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் நேற்று முன்தினம் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"நல்லாட்சி அரசாங்கத்தின் வெளிவிவகாரக் கொள்கையில் எந்த அகதிகளையும் ஏற்றுக் கொள்ளும் முடிவு எடுக்கப்படவில்லை.

எந்தவொரு நாட்டினதும் எந்தவொரு குடிமகனும், குடிவரவு நடைமுறைகளுக்கு அமைவாக இலங்கைக்குள் நுழையலாம்.

மியன்மாரின் ரோஹிஞ்யா அகதிகள் இலகுவாக பங்களாதேஷ் அல்லது தாய்லாந்துக்குள் நுழையலாம்.

ஆனால் அவர்கள் இங்கு வருவதற்கான நோக்கம், ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முயற்சியாக தெரிகிறது. இலங்கை அரசாங்கம் அத்தகைய சூழ்ச்சிகளை அனுமதிக்காது" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

முன்னாள் போராளிகளின் நிலை குறித்து

யாழ். படைத் தளபதியுடன் சுவிஸ் அதிகாரிகள் சந்திப்பு

வடக்கில் முன்னாள் போராளிகளின் நிலை மற்றும் அவர்களுக்கான சவால்கள் தொடர்பாக, சுவிஸ் சர்லாந்தின் புலம்பெயர்தல் தொடர்பான இராஜாங்க செயலகத்தின் ஆய்வாளர் அன்ட்ரேஸ் ஸ்மிட் யாழ். படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியுடன் கலந்துரையாடியுள்ளார்.

சுவிட்சர்லாந்தின் புலம்பெயர்தல் தொடர்பான இராஜாங்க செயலகத்தின் ஆய்வாளர் அன்ட்ரேஸ் ஸ்மிட் மற்றும் கொழும்பில் உள்ள இலங்கை தூதரகத்தில் புலம்பெயர்தல் தொடர்பான முதன்மைச் செயலராகப் பணியாற்றும் கிசேலா ஸ்லூவெப் ஆகியோர் யாழ்.படைகளின் தலைமையகத்தில் மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சியைச் சந்தித்தனர்.

அதிகாரபூர்வமாக இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் புனர்வாழ்வு அளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் நிலையைப் புரிந்து கொள்வது, அவர்களின் முன்னேற்றங்கள் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் உளவியல் ரீதியாக எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது, முன்னாள் போராளிகளின் தற்போதைய வாழ்வாதார நிலை, அவர்களின் பொருளாதார மற்றும் சமூக நிலையை மேலும் உயர்த்துவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து யாழ்.படைகளின் கட்டளைத் தளபதி சுவிஸ் அதிகாரிகளுக்கு விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். (இ-3)

வாசகர் வட்ட ஒன்றுகூடல்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சங்கானை பொது நூலகத்தின் ஏற்பாட்டில் விழிப்புணர்வும் நூலக வாசகர் வட்டத்திற்கான ஒன்றுகூடலும் நாளை 25 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கானை பொதுநூலக கேட்போர்கூடத்தில் இடம்பெறும். (இ-3)

தொழில் தருநர் மற்றும் தொழில் கொள்வோரிடையே பரஸ்பர நட்புறவை வளர்க்கவும் தொழில் பிணக்குகள் குறைந்த சமூகத்தினை உருவாக்கி வடக்கு மாகாணத்தில் முரண்பாடுகள் அற்ற சமூகத்தினை உருவாக்கும் நோக்கத்துடன் வடக்கு மாகாண தொழில் திணைக்களத்தின் மாகாண மட்ட ஆலோசனைக் கூட்டம் நேற்றைய தினம் சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள தொழில் திணைக்களத்தில் நடைபெற்றது. (படங்கள்:-உ.சாளின்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நுகேகொட நாவல திறந்த பல்கலைக் கழகத்தின் பீடாதிபதி பேராசிரியர் பி.சி.பி.ஜவ்பர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன், கௌரவ விருந்தினராக பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி அதிபர் வி.கருணலிங்கம் ஆகியோரும் மற்றும் திறந்த பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள், மாணவர்கள், எனப்பலரும் கலந்து கொண்டனர். (படங்கள்:- உ.சாளின்)

புதிய 5000 ரூபா தாள் வெளியீடு

நிதியமைச்சர் மங்கள சமரவீர, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராக பதவி ஏற்ற பின்னர் முதன் முறையாக அவர் கையெழுத்திட்ட 5000 ரூபா தாள் நேற்று முன்தினம் சந்தையில் விடப்பட்டது. குறித்த விநியோக நிகழ்வு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்றது. (இ-3)

ஏழு முதியவர்களுக்கு உலருணவு வழங்கல்

கரவெட்டி பிரதேச செயலகத்தினால் ஏழு முதியவர்களுக்கு போசாக்கு மிக்க உலர் உணவுகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் இவ் உலர் உணவுகளை உதவிப் பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் வழங்கி வைத்தார்.

இவ் உலர் உண்வுப் பொருட்கள் மகளிர் விவகார புனர்வாழ்வு மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுள் ளது. (இ-60)

பூகோள கடல்சார் மையமாக அம்பாந்தோட்டையை மாற்றுவதே தமது இலக்கு என்கிறது சீன நிறுவனம்

(கொழும்பு)

பூகோள கடல்சார் மையமாக அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைக் கட்டியெழுப்புவதே, தமது நோக்கம் என்று சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தை கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்வது தொடர்பாக, சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனம் கடந்த ஜூலை மாதம், இலங்கையின் துறைமுக அதிகார சபையுடன் உடன்பாடு செய்து கொண்டது.

இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் மிகப் பெரிய நேரடி வெளிநாட்டு முதலீட்டுத் திட்டம் இதுவாகும்.

கொழும்பில் நேற்று முன்தினம் இலங்கை வர்த்தக சம்மேளனத்தில் அம்பாந்தோட்டை துறைமுக உடன்பாடு குறித்து, சீனாவின் மேர்ச்சன்ட் போர்ட்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் பிரதி பொது முகாமையாளர் ஹங் தியன் தெளிவுபடுத்தினார்.

"அண்டை நாடுகளையும் உலகின் ஏனைய பகுதிகளையும் இணைக்கும் ஒரு பிரதான மையமாக அம்பாந்தோட்டை துறைமுகத்தை மாற்றுவதற்கு நாம் இலக்கு வைத்துள்ளோம்.

இது இலங்கையின் தேசிய நோக்கு. இதனைச் செயற்படுத்தும் பணியே எம்முடையது. இலங்கையின் நோக்கிற்கு பங்களிப்பதே எமது நோக்கம்.

எம்மால் புதிய முதலீட்டை, புதிய முகாமைத்துவ முறைமையை, சீன மேர்சன்ட் போர்ட்ஸ் நிறுவனத்தின் பூகோள வலையமைப்பின் மூலம், புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு வர

முடியும். இந்த கூட்டு முயற்சி வெற்றி பெறுவதற்கு உள்ளூர் முதலீட்டாளர்களும் எம்முடன் இணைந்து கொள்ள வேண்டும்.

இலங்கையின் கடல்சார் தொழிற்றுறை மற்றும் பொருளாதார மாற்றங்களில் அம்பாந்தோட்டைத் துறை முகத்துக்கு முக்கியமான பங்காற்றும் வாய்ப்பு இருப் பதாக நாம் நம்புகிறோம்.

கொழும்புத் துறைமுகத்தை விடவும் பிரதான கடல் பாதைகளுக்கு நெருக்கமாக, அம்பாந்தோட்டை துறைமுகம், அமைந்துள்ளது. இது குறைவான அபிவிருத்தி அடைந்த பகுதியாகவும் இருக்கிறது.

இதனால், நன்றாகத் திட்டமிட்டு, திறமையாக செயற்படுத்தினால் நீண்டகாலத்துக்கு இந்த துறைமுகத்தை நிச்சயமாக செயற்படுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-3)

ரத்துபஸ்வலவில் துப்பாக்கிச் சூடு சார்ஜன்ட், கோப்ரலுக்குப் பிணை

சுத்தமான குடிநீர் கேட்டு, ரத்துபஸ்வலவில் மக்கள் நடத்திய போராட்டத்தின் மீது துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த இராணுவ சார்ஜன்ட் மற்றும் கோப்ரல் ஆகிய இருவரும் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தலா 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் இரண்டு மில்லியன் ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலுமே அவ்விருவரும் கம்பஹா மேல் நீதிமன்ற நீதிபதி ஜயந்த பெர்னாண்டோவினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவ சார்ஜன்ட் டிங்கிரி அருணகே சிறிசேன மற்றும் கோப்ரல் ஜெயசுந்தர திலகரத்ன ஆகிய இருவருமே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். (இ-3)

சந்தைகளில் நேற்றைய விலை

மரக்கறி வகைகள்	திருநெல்வேலி	நெல்லியடி	கொழுவாமம்	சாவகச்சேரி	கிளிநொச்சி	மருதனார்மடம்
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
கத்தரிக்காய்	160	100	80	120	120	100
உருளைக்கிழங்கு	120	120	85	100	100	110
பச்சைமிளகாய்	260	300	300	300	300	200
தக்காளி	200	250	100	140	160	200
மரவள்ளிக்கிழங்கு	60	60	60	80	50	70
கோவா	80	120	70	100	100	80
கரட்	80	200	100	140	160	70
பூசணி	60	30	35	50	60	40
புடோல்	100	100	.60	60	80	80
வாழைக்காய்	80	100	70	100	100	100
சின்ன வெங்காயம்	220	250	180	200	240	250
பெரிய வெங்காயம்	100	120	110	100	100	130
பாகற்காய்	250	400	300	200	400	180
வெண்டிக்காய்	80	100	60	60	80	70
கருணைக் கிழங்கு	80	100	70	120	100	100
பயற்றங்காய்	140	100	90	80	120	80
லீக்ஸ்	100	120	100	120	140	100
பீற்றூட்	50	40	40	60	60	60
கறிமிளகாய்	120	250	120	140	160	150
முருங்கைக்காய்	160	180	350	150	120	200
போஞ்சி	200	250	160	180	200	140
கத்தரிதம்புள்ள	120	100	80	120	120	100
கீரை-1பிடி	40	50	40	40	40	30
தேசிக்காய்	300	200-230	250	300	400	260
தேங்காய் ஒன்று	80	100	70	75-80	60-80	60
இராசவள்ளி	300	500	180	–	400	100
வெங்காயப்பூ	250	150	120	160	200	–
முள்ளங்கி	60	100	35	70	60	60
பொன்னாங்காணி	40	50	30	40	30	25
வல்லாரை	15	20	10	20	20	15
ஈரப்பலா	60	60	20	–	10	70

மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



விமானப்படையின் குண்டு வீச்சில் பலியான மாணவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவினை முன்னிட்டு மாணவர்களுக்கு உதவித் தொகையும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

மருதங்கேணிப் பிரதேச செயலர் கே. கணேஸ்வரன் தலைமையில் நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வின் பின்னர் இவை வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவிலுள்ள கனன் கேம்ஸ் நிறுவனத்தின் அனுசரணையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் 50 மாணவர்களிற்கு ஆறு இலட்சம் பெறுமதியான உதவித் தொகையும் 1,500 ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. (இ-60)

புதிய அரசியல் அமைப்புக்கான இடைக்கால அறிக்கை வெளியீடு

(நேற்றைய தொடர்ச்சி)

4. சொல்லப்பட்ட அதிகாரப்பகிர்வு தொடர்பாக மாகாணம் அதன் ஆட்சித்துறை அல்லது நிர்வாகத் தத்துவங்களை (நடைமுறைப்ப டுத்துகைத் தத்துவங்கள்) தக்க வைத்துக் கொள்ளும்.

5. மத்திய அரசாங்கம் தேசிய கொள்கையை விதிக்கக் கூடியதுமான சூழமைவுகளை அரசியலமைப்பு வழங்குதல் வேண்டும். ஜேர்மன் அரசியலமைப்பின் 72 ஆம் உறுப்புரையின் பின்வரும் தமுவல் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

தேசிய கொள்கை எம் தேவையேற்படின் பகிர்ப்பட்டவிடயம்பற்றிய தேசியகொள்கையைமத்தியஅரசாங்கம் உருவாக்கலாம். ஏனெனில்

i. அத்தகைய விடயம் தனியொரு மாகாணத்தின் சட்டம் அல்லது கொள்கையினால் பயனுறுதி மிக்கதாக மேற்கொள்ளப்பட முடியாது. அல்லது.

ii. சட்ட அல்லது பொருளாதார ஒருமைப்பாட்டின் பேணுகை குறிப்பாக மாகாணத்தின் ஆட்புலத்திற்கு அப்பால் சமத்துவமான வாழ்க்கை நிலைமைகளின் பேணுகையை அது இன்றியமையாததாக்குகிறது.

6. மாகாண நிரலிலுள்ள விடயங்கள் தொடர்பாக தேசிய கொள்கை மாகாண சபையினால் சட்டமாக்கப்பட்ட நியதிச்சட்டங்களை அலட்சியம் செய்ய முடியாது.

வழங்கப்பட்ட பகிர்ந்தளிக்கப்படும் விடயத்தில் சட்டம் (அத்தகைய தேசிய கொள்கைக்கு யாதிப்படை ஏற்படுத்தும்) தொடர்பாக அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு இணங்க மத்திய அரசாங்கம் சட்டம் இயற்றும் வெளிப்படையான் மாகாணச் சட்டங்கள் அத்தகைய தேசிய சட்டத்திற்கு உட்படும்.

6.உள்ளூராட்சி–தெரிவு செய்யப்பட்ட மாகாண நியதிச் சட்டங்களை நடைமுறைப்படுத்து தல்

மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் ஆகியவற்றினால் குறித்துரைக்கப்பட்ட சட்டங்கள் தொடர்பாக சிலமுகவராண்மைப் பணிகளைக் கையாளுவதற்கு அல்லது நடைமுறைப்படுத்தும் முகவராண்மையாக செயற்படுவதற்கு உள்ளூர் அதிகார சபைகள் அரசியலமைப்பு ரீதியாக வலுவூட்டப்படல் வேண்டுமென மத்திய – சுற்றுப்புற உறவுகள் தொடர்பான (CPR) உபகுழு அறிக்கை விதப்புரை செய்கிறது. உதாரணம் சுற்றுப்புறச் சூழல் சட்டம், கரையோரப் பாதுகாப்பு சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம், முன்பள்ளி போன்றன மத்திய அரசாங்கத்தினால் நிர்வாகத் தத்துவங்கள் கையளிக்கப்படுவது போல் மாகாணங்கள் அதே தத்துவங்களை அவையமாவை எனக்கருத்தும் பட்சத்தில் உள்ளூர் அதிகார சபைகளுக்கு நிர்வாகத் தத்துவங்களை கையளிப்பதற்கென மாகாணங்களுக்கு, அதிகாரமளிக்கப்படல் வேண்டுமென்பது எழிப்படுத்தற் குழுவின் கருத்தாக இருந்தது.

7. ஆளுநர்

ஆளுநர் பெரும்பாலும் ஒரு வைபவ ரீதியான வகிபாகத்தை வகித்து நிறைவேற்று அதிகாரம் அமைச்சர்கள் சபைக்கு உரித்தாக்கப்பட வேண்டுமென்ற கருத்தை வழிப்படுத்தும் குழுவின் முன் சமர்ப்பிப்புக்களை முன்வைத்த பல முதலமைச்சர்கள் கொண்டிருக்க ஆளுநர் பதவியை முற்றாக நீக்க வேண்டு மென்று ஒரு முதலமைச்சர் கேட்டுக் கொண்டதும் குறிக்கப்படுகிறது.

அரசியலமைப்பினால் அவருக்கு குறிப்பாக அதிகாரமளிக்கப்பட்ட விடயங்களில்தவிர அமைச்சர்கள் சபையின் மதியுரையின் மீது ஆளுநர் தொழிற்படுதல் வேண்டும் என்ற கருத்தை வழிப்படுத்தும் குழு கொண்டிருந்தது.

ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தை வழிப்படுத்தும் குழு கொண்டிருந்தது.

7.1. ஆளுநர், அரசியலிருந்து விலகியிருத்தல்

ஆளுநர் பதவியிலிருக்கும் போது கட்சி அரசியலில் ஈடுபடுவதிலிருந்து தடுக்கப்படுதல் வேண்டும் என்ற கருத்தை வழிப்படுத்தும் குழு கொண்டிருந்தது.

8.மாகாண நியதிச்சட்டங்கள் அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் மட்டுமே தீர்மானிக்கப்படவுள்ளது பற்றிய அரசியலமைப்புத்தன்மை

ஆளுநர் நியதிச்சட்டம் ஒன்றிற்கு இசைவுற வேண்டியது அல்லது அதை மறுபரிசீலனைக் கென திருப்பியனுப்ப வேண்டியது பற்றிய குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியொன்று (உ+ம்:– இரண்டு வாரங்கள்) அவருக்கு வழங்கப்படல் வேண்டும். குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியில் ஏதேனுமொன்று மேற்கொள்ளப்படாவிடின் நியதிச்சட்டம் ஆளுநரின் சம்மதம் பெற்றுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

மாகாண சபை அத்தகைய விதப்புரைகளைக் கூட்டிணைத்து அல்லது கூட்டிணைக்காமல் சட்டமாக்குமிடத்து ஆளுநர் நியதிச்சட்டமொன்றிற்கு சம்மதம் வழங்க வேண்டியது அல்லது அதன் அரசியலமைப்புச் செல்லுபடியாகுந்தன்மை பரிசீலிப்புக்கென அதை அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு ஆற்றுப்படுத்துவது பற்றிய குறித்துரைக்கப்பட்ட காலப் பகுதியில் (உ+ம்: இரண்டு வாரங்கள்) அவர் இசைவுறல் வேண்டும். குறித்துரைத்த காலப்பகுதியில் ஏதேனுமொன்று மேற் கொள்ளப்படாவிடின் நியதிச் சட்டம் ஆளுநரின் சம்மதம் பெற்றுள்ளதாகக் கருதப்படல் வேண்டும்.

மாகாண நியதிச் சட்டங்கள் நீதித்துறை மீளாய்விற்கு உட்படுத்தப்படுதல் வேண்டுமென்ற கருத்தையும் வழிப்படுத்தும் குழு கொண்டிருந்தது. பொது மக்களுக்கு கிடைக்கப்பெறக் கூடிய

சகல சட்டங்கள் மற்றும் நியதிச் சட்டங்களின் மத்திய தரவுத்தளமொன்று இருப்பதை உறுதி செய்யும் பொருட்டு சகல சட்டமாக்கப்பட்ட மாகாண நியதிச் சட்டங்களின் பிரதிகளை ஆளுநர் பாராளுமன்றத்திற்கு அனுப்பி வைப்பது தேவைப்படுத்தப்படல் வேண்டுமெனவும் விதப்புரை செய்யப்பட்டிருக்கின்றது.

9. சுயாதீன மாகாண பகிரங்கச் சேவை ஆணைக்குழுக்கள் தாபிக்கப்படவுள்ளன. அத்தகைய ஆணைக்குழுக்களுக்கான நியமனங்கள் அரசியலமைப்பு பேரவையின் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்படவுள்ளது.

9.1. மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு

(அ) மாகாண பகிரங்க சேவையின் ஒழுக்காற்று மற்றும் மனித வளவிடயங்களைக் கையாளுவதற்குத் தேவையான அறிவு, அனுபவம் ஆகியவற்றுடனான அதிக எவு ஒருமைப்பாட்டை மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) மாகாண சபையின் முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் ஒன்றிணைந்து மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படவுள்ள ஆட்களை பெயர் குறித்து நியமித்தல் வேண்டும். அத்தகைய பெயர் குறித்த நியமனங்களை அரசியலமைப்புப் பேரவை அங்கீகரித்தல் வேண்டும். அவை அரசியலமைப்புப் பேரவையினால் அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆளுநர் அந்த நியமனங்களை வழங்குதல் வேண்டும்.

(இ) முதலமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் இணங்க முடியாதவிடத்து முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனங்களிலிருந்து அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுகளின்பேரில் நியமனங்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

(ஈ) பொருத்தமான ஆட்கள் நியமிக்கப்படுவதற்கு பொதாமல் உள்ளனர் என அரசியலமைப்புப் பேரவை கருதுமிடத்து முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனங்களிலிருந்து பரிசீலனைக்கென பெயர்கள் மீள் சமர்ப்பிக்குமாறும் அது அவர்களைக் கோரலாம்.

(உ) முதலமைச்சர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட பெயர் குறித்த நியமனங்களிலிருந்து அரசியலமைப்புப் பேரவை சிபாரிசுகளை மேற்கொள்ளல் வேண்டும். அல்லது அந்த ஆட்கள் நியமனத்திற்குப் பொருத்தமற்றவர்களென அது கருதுமாயின் மாற்று ஆட்களை நியமனத்திற்கு அது சிபாரிசு செய்தல் வேண்டும். அவை அரசியலமைப்புச் சபையினால் சிபாரிசு செய்யப்பட்டதும் ஆளுநர் அந்த நியமனங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

(ஊ) மாகாண பகிரங்க சேவை ஊழியர்களின் நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு, பதவியிலிருந்து விலக்குதல் ஆகியன மாகாண பகிரங்கசேவை ஆணைக்குழுவின்விடயங்களாயிருத்தல்வேண்டும்

(எ) நியமனம், இடமாற்றங்கள், பதவி உயர்வு, ஒழுக்காற்றுக் கடப்பாடு ஆகியன உட்பட பிரதம செயலாளர், அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் தவிர்ந்தசகல மாகாணபகிரங்கசேவையிலுள்ள ஊழியர்கள் தொடர்பான பகிரங்க ஆளணிக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதில் மாகாண பகிரங்க சேவை ஆணைக்குழு பொறுப்புடையதாயிருத்தல் வேண்டும்.

(ஏ) முதலமைச்சரின் இணக்கத்துடன்ஜனாதிபதியால்பிரதமசெயலாளர் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஐ) அமைச்சர்கள் சபையின் சிபாரிசின் பேரில் அமைச்சுகளின் செயலாளர்கள் ஆளுநரால் நியமிக்கப்படல் வேண்டும். (பகிரங்க சேவை ஆணைக்குழுவினால் குறித்துரைக்கப்பட்ட அளவுகோள்களுக்கு உட்பட்டு மற்றும் உரிய மாகாண சபையின் உயர் பதவிகள் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு.

(ஒ) அமைச்சர்கள் சபை மாகாணபகிரங்கசேவை ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து அத்தகைய சிபாரிசுகளை மேற்கொண்டு அமைச்சர்கள் சபையின் சிபாரிசின் பேரில் திணைக்களத் தலைவர்கள் ஆளுநரால் நியமிக்கப்படல் வேண்டும்.

10.மத்தியரசுக்கும் மாகாணங்களுக்கிடையேயும் ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கு முதலமைச்சர்களின் மாநாடொன்று உருவாக்கப்படவுள்ளது.

பொதுவான கரிசனைக்குரிய விடயங்களை கலந்துரையாடுவதற்கும் மாகாணங்களுக்கிடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும் அனைத்து மாகாணங்களினதும் பிரதம அமைச்சர் மற்றும் முதலமைச்சர்களை உள்ளடக்கிய முதலமைச்சர்களின் மாநாடொன்று கிரமமான இடைவேளைகளில் கூடுவதற்கு முதலமைச்சரின் மாநாட்டுக்கு பிரதம அமைச்சர் தலைமை தாங்குவார்.

III அரச காணி

தேசிய நிரல் –அரச காணி

1. அரசியலமைப்பினால் ஏற்படுத்தப்பட்டவாறு அரச காணி.

2.தேசிய நிரலிலுள்ள ஏதேனும் விடயத்தின் நோக்கங்களுக்காக தனியார் ஆதனத்தைக் கோருதல்.

3. நட்டஈடு கொடுப்பனவிற்கு மாத்திரம் உட்பட்டதாக தேசிய நிரலிலுள்ள ஏதுனும் விடயத்தின் நோக்கங்களுக்காக தனியார் ஆதனத்தைச் சுவீகரித்தல்

மாகாண நிரல் –அரச காணி

1. அரசியலமைப்பினால் ஏற்படுத்தப்பட்டவாறு தேசிய காணி, நீர்ப்பாவனைக் கொள்கையின் பிரகாரமும் அரச காணியும் அதன் பயன்பாடு பாரதீனப்படுத்துதல் அல்லது கையுதிர்தல்.

2.மாகாண நிரலிலுள்ள ஏதேனும் விடயத்தின் நோக்கங்களுக்காக தனியார் ஆதனத்தைக் கோருதல்.

3. நட்டஈடு கொடுப்பனவிற்கு மாத்திரம் உட்பட்டதாக மாகாண நிரலிலுள்ள ஏதேனும் விடயத்தின் நோக்கங்களுக்காக தனியார். ஆதனத்தைச் சுவீகரித்தல்.

பின்னிணைப்பு:

அரச காணி

1. அரச காணி அனைத்தும் குடியரசுக்கு உரித்தாதல் வேண்டும்.

"அரச காணி" என்பது அரசியலமைப்பு ஆரம்பிப்பதற்கு உடனடுத்து முன்னராக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசிற்கு உரித்தாக்கப்பட்ட இலங்கையிலுள்ள அனைத்துக் காணிகளுமாகும்.

2. இலங்கையின் சகல காணிகள், சுரங்கங்கள், ஆட்புல நீர்ப்பரப்பினுள் சமுத்திரத்திலுள்ள கனியவளங்கள் மற்றும் ஏனைய பெறுமதியுடைய பொருட்கள், கண்டமேடை தொடர்பான உரிமைகள் மற்றும் பிரத்தியேக பொருளாதார வலயம் தொடர்பான உரிமைகள் ஆகியன தொடர்ந்தும் குடியரசிற்கு உரித்தாதல் வேண்டுமென்பதுடன் மத்திய அரசாங்கத்தின் கீழ் வைக்கப்படல் வேண்டும்.

(தொடரும்)

தியாக பயணத்தின் பத்தாம் நாள் இன்று

நல்லூரின் வீதியில் நடந்தது யாகம் - நாலு நாள் ஆனதும் சுருண்டது தேகம். தியாகத்தின் எல்லையை மீறிய பிள்ளை - திலீபனைப் பாடிட வார்த்தைகள் இல்லை - பாடும் பறவைகள் வாருங்கள்...

பெற்றோர் - பிள்ளைகள் - சகோதரர்- உற்றார்- உறவினர்- நண்பர்கள்.இவர்களில் யாராவது நம் கண் முன்னாலே இறக்க நேரிடும்போது மனம் துன்பத்தில் மூழ்கிவிடுறது.

ஆனால், ஒருவன் அணு அணுவாகச் செத்துக் கொண்டிருப்பதைப் பார்க்கும்போது துயரத்தின் எல்லைக்கே நாம் போய் விடுகின்றோம்.

உலகமே சில விநாடிக்குள் வெறுத்துப்போய்விடும். கண்களில் அழுவதற்குக் கண்ணீர்கூட எஞ்சியிருக்காது.

ஒருசொட்டு நீர் கூடஅருந்தாமல் 10 நாட்களாக கண் முன்னால் அணு அணுவாகச் சாவின் விளிம்பில் நின்று தத்தளிப்பதைப் பக்கத்தில் இருந்து பார்த்துக் கொண்டிருக்கும் போது ஏற்படும் மன வேதனை இருக்கிறதே- அப்பப்பா!... அதை வாய் விட்டுச் சொல்ல முடியாது. அத்தனை கொடுமை. அது அனுபவித்தவர்களுக்கு மட்டுமே புரியும். அதைத் தமிழீழ மக்கள் அனுபவித்தனர்.

இந்தியா ஒரு பழம்பெருமை மிக்க ஜனநாயக நாடு. காந்தி பிறந்த பொன்னான பூமி. அஹிம்சையைப் பற்றியும் - உண்ணாவிரதத்தைப் பற்றியும் உலகில் பெருமைப்படக்கூடிய அளவுக்கு காந்தியடிகள் மூலம் புகழ்பெற்ற நாடு. அப்படிப்பட்ட ஒரு நாட்டிடம் நீதிகேட்டு அஹிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தான் திலீபன்.

மற்றவர்களுக்கு வழிகாட்டியாக இருந்த நாடு நிச்சயமாக திலீபனுக்கும் ஒரு நல்ல வழியைக் காட்டத்தான் செய்யும் என்று அவன் முழுமையாக நம்பினான்.

என் தோழர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலர்வதைப் பார்ப்பேன்-திலீபன்

அதன் மூலம் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஓரளவாவது இந்திய அரசு நிறைவேற்றத்தான் போகின்றது என்று எதிர்பார்த்தான்.

ஆனால், பாரத தேசம் எத்தனை பெரிய ஏமாற்றத்தை கொடுத்ததோடு தமிழ் மக்களைத் தவிக்கவும் விட்டுவிட்டது .

பத்தாம் நாளில் திலீபன் இருந்த நிலையைப் மார்த்த போது நம்பிக்கையே அற்றுவிட்டது.

இனி ஒரு நல்ல தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, அதன் பிறகு திலீபனை வைத்தியசாலையில் அனுமதித்தாலும் காப்பாற்ற முடியுமா? என்பது கேள்விக்குறிதான்.

கடவுளே! மனிதர்மத்துக்கு கிடைக்கப் போகும் பரிசு இதுதானா? என்று மக்கள் ஏங்கினர்.

நேற்று சிறிதளவாவது அசைந்து கொண்டிருந்த திலீபனின் கை, கால்கள் இன்று அசைவற்று சோர்ந்து விட்டன. உள்மூச்சு மட்டும் பலமாக இழுத்துக்கொண்டிருக்கின்றது. கண்கள் உச்சியிலே குத்திவிட்டு நிற்கின்றன. உடலின் நிறம் சிறிது நீலமாக மாறத்தொடங்கி விட்டது.

இனித் திலீபனுக்கு எந்த நிமிடமும் எதுவும் நடக்கலாம். திலீபன் கிட்டுஅண்ணாவைப் பார்க்க வேண்டும் என்றாரே? இதற்காகத்தானா? இந்திய அரசு தன் கோரிக்கைகளை நிறைவேற்றாது என்பதை அவர் உள்ளுர அறிந்தவர் போல் அன்று உண்ணாவிரத மேடையிலிருந்து எவ்வளவு தீர்க்கதரிசியாக இதைக் கூறினார்.

"நான் இறப்பது நிச்சயம்... அப்படி இறந்ததும் வானத்திலிருந்து என் தோழர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலர்வதைப் பார்ப்பேன்..."

இந்த வார்த்தைகளை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

திலீபன், கிட்டு அண்ணா மீது எவ்வளவு பாசம் வைத்திருந்தாரோ அதைப் போல் அவரும் திலீபன் மீது உயிரையே வைத்திருந்தார்.

கிட்டு அண்ணா யாழ். மாவட்ட தளபதியாக இருந்த காலத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டை புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்காக அரும் பாடுபட்டு உழைத்தவர். திட்டமிடும் சாதுர்யம் அதை நிறைவேற்றுவதில் மிகச் சாதுர்யம்.. எதிரியைப் பந்தாடுவதில் இராஜதந்திரம். இவற்றுடன் குறிதவறாமல் சுடுவதிலும் தன்னிகரற்றவரான தளபதி கிட்டுவும் , யாழ்.மாவட்ட அரசியல் பிரிவுத் தலைவன் திலீபனும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிசம் என்று தான் கூற வேண்டும். இவர்களை உறுப்பினர்களாகப் பெற்ற உறுதி மிக்க தலைவனை தமிழ் மக்கள் பெற்றுள்ளனர்.

இனவிடுதலைப் போராட்டத்தில் மற்றவர்களை விட தன் வழி மிகவும் வேறுபட்டதாக இருக்கட்டும் என்பதற்காக திலீபன் இந்த முடிவிற்கு வந்தார்.

பத்தாம் நாள் மாலை வசாவிளானைச் சேர்ந்த ஒரு ஆதரவாளர் அங்கிருந்து உண்ணாவிரத மேடை வரை தூக்குக் காவடியுடன் அழுதழுது வந்தது எல்லோரையும் உணர்ச்சிவசப்படுத்தியதோடு கண்ணீர்விட வைத்தது.

வட்டுக்கோட்டை சிவன்கோவிலடி, அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக மற்றும் சாவகச்சேரி, கொடிகாமம், எழுதுமட்டுவாழ் போன்ற இடங்களிலெல்லாம் அடையாள உண்ணாவிரதமும் மறியல் போராட்டமும் பரந்தளவில் நடைபெற்றது.

பளையிலிருந்து நாவற்குழி வரையுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 6000 மாணவ, மாணவிகள் கண்ணீர் சிந்தியபடி ஊர்வலமாக வந்து நல்லூர் மைதானத்தை நிறைத்தனர். அவர்களின் ஊர்வலத்தில் பார்க்குமிடமெல்லாம் புலிக்கொடி தான் பறந்தது. முல்லைத்தீவு மாவட்டத்தில் உண்ணாவிரதமும் மறியலும் நடக்காத இடமே இல்லை என்று கூறிவிடலாம்.

'திலீபன்' என்ற இந்தச் சிறிய கூட்டிற்குள் இருக்கும் இதயத்துக்காக எத்தனை கோடி தமிழர்கள் கண்ணீர் சிந்திக் கொண்டிருக்கின்றார்கள்.

(தியாகவேள்வி தொடரும்...)

இந்தியாவின் ஆந்திர மாநில அரசின் கைத்தொழில் நடைக்கூடம் இலங்கையில்

யாழ்ப்பாணம் அல்லது திருகோணமலையில் அமையும்

இந்தியாவின் ஆந்திர பிரதேச மாநில அரசாங்கம் இலங்கையில் கைத்தொழில் நடைக்கூடம் (industrial corridor) ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக இந்தியன் எக்ஸ்பிரஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது தொடர்பாக, ஆந்திர மாநில கைத்தொழில் அமைச்சர் அமர்நாத் ரெட்டி இலங்கை அரசாங்கத்துடன் ஏற்கனவே பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

அடுத்த சில வாரங்களில் இலங்கை அரசாங்கத்துடன் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு கையெழுத்திடப்படும் என்று அதிகாரபூர்வ வட்டாரங்கள் தெரிவித்தன.

கடல்வழிப் போக்குவரத்து வசதிகளைக் கொண்ட இலங்கை, கடலுணவு, மருந்து மற்றும் சுற்றுலா போன்ற துறைகளில் வர்த்தகத்தை மேற்கொள்வதற்கு ஆந்திர மாநிலத்துக்கு சிறந்த இடமாக உள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக ஆந்திர மாநில அரசாங்கத்துக்கு யாழப்பாணம் அல்லது திருகோணமலையில் அரசாங்கம் நிலங்களை ஒதுக்கிக் கொடுக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

அதேவேளை, பரஸ்பர வர்த்தக உடன்பாட்டின் மூலம், ஆந்திரப் பிரதேசத்தில், ஆடை மற்றும் விமானப்பயணத் துறைகளில் அரசாங்கம் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது.

"இலங்கையில் ஆந்திர பிரதேசத்தின் சிறப்பு பொருளாதார வலயத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு விரைவில் கைபெழுத்திடப்படும்.

மருந்து மற்றும் சுற்றுலாத் துறைகளில் இலங்கையில் முதலீடு செய்வதற்கு நல்ல வாய்ப்புகள் உள்ளன என்று ஆந்திர மாநில கைத்தொழில்துறை அமைச்சர் அமர்நாத் ரெட்டி தெரிவித்துள்ளார். (இ-3)

முல்லைத்தீவில் சுனாமி ஒத்திகை

முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் சுனாமி ஒத்திகை நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.

சுனாமி ஒன்று நிகழும் போது சுனாமி ஒலிபரப்பு கோபுரத்தினூடாக எவ்வாறு தகவல் வழங்கப்படுகிறது. அதன்பின்னர் மக்கள் எவ்வாறு பாதுகாப்பான இடங்களுக்கு செல்வது என்பது தொடர்பான தகவல்களை மக்களுக்கு வழங்கி அவர்களைப் பாதுகாப்பாக வெளியேற்றியதோடு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டதும் கடற்படை, தரைப்படை, விமானப் படை, பொலிஸார் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மக்களுக்கு எவ்வாறு தமது சேவைகளை வழங்குவது என்பது தொடர்பான நடவடிக்கைகளும் ஒத்திகை பார்க்கப்பட்டது.

தொடர்ந்து பாதுகாப்பான இடமாக அறிவிக்கப்பட்ட இடத்தில் ஒன்றுகூடிய மக்களுக்கு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு உதவிப் பணிப்பாளர் காமினி பிரியந்த மக்களுக்கு சுனாமி தொடர்பில் விழிப்புணர்வு கருத்துக்களை வழங்கினார். (8-281)

வீதி புனரமைப்பு

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் மலையாளபுரம் வேற்பிள்ளையார் வீதி பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் ஆகிய பகுதி மக்களின் போக்குவரத்து தேவைகளுக்குரிய பிரதான வீதிகளில் ஒன்றாகக் காணப்படும் வேற்பிள்ளை கோவில் வீதியை புனரமைத்துத் தருமாறு கோரிய இப்பகுதி மக்கள் கோரிக்கைகளையடுத்து பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதனின் விசேட நிதி ஒதுக்கீட்டின் கீழ் சுமார் ஆயிரத்து 200 மில்லியன் ரூபா செலவில் நிரந்தர வீதியாக புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறு புனரமைக்கப்பட்டு வரும் குறித்த வீதியின் புனரமைப்புப் பணிகளை கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் சென்று பார்வையிட்டதுடன், குறித்த வீதியை புனரமைத்து வரும் ஒப்பந்தக்காரர் மற்றும் பிரதேச மக்களுடனும் கலந்துரையாடியுள்ளார். (8)

யானைகளால் அழியும் விவசாயம்

வேலி அமைத்துத் தருமாறு கோரும் விவசாயிகள்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் மாங்குளம் ஒட்டுசுட்டான் வீதியில் மீண்டும் யானைகளின் அட்டகாசம் அதிகரித்து வருகிறது. நேற்றும் மாலை 3 மணியளவில் வீதியோரம் யானைகளின் நடமாட்டம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது

இரண்டு போக நெற் செய்கையை இழந்து வரட்சி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட தாம் பல்வேறு கடன்களைப் பெற்று இந்தபோக நெற்செய்கை விவசாயம் மேற்கொண்டுள்ளதாகவும் இம்முறையும் பல்வேறு அச்சத்தின் மத்தியில் எமது விவசாயத்தை மேற்கொள் ளும் எமக்கு யானையால் ஏற்படும் அழிவை தடுக்க யானை வேலிகளை அமைக் குமாறு ஒட்டுசுட்டான் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (8-281)

முள்ளியவளை-நீராவிப்பிட்டி பிரதான வீதியை புனரமையுங்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு முள்ளியவளை- நீராவிப்பிட்டி பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முள்ளியவளை -நீராவிப்பிட்டி பிரதான வீதி கடந்த பல ஆண்டுகளாக புனரமைக்கப்படாத நிலையில் பாரிய குண்டும் குழியுமாக காணப்படுவதனால் இவ்வீதியை பயன்படுத்துகின்ற மக்கள் அன்றாடம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

அதாவது நீராவிப்பிட்டியில் இருந்து வற்றாப்பளை வரை செல்லும் வீதியும் இவ்வீதியில் காணப்படும் பாலமும் சேதமடைந்து காணப்படுகின்றது.

இவ்வாறு குறித்த வீதி காணப்படுவதனால் தண்ணீருற்று மகா வித்தியாலயத்திற்கு செல்லும் மாணவர்கள், பிரதேச மக்கள் ஆகியோர் பெரும் துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே இவ்வாறு புனரமைப்பின்றிக் காணப்படும் இவ்வீதியை புனரமைத்துத் தருமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளதுடன், இது தொடர்பில் பல்வேறு தரப்புக்களுக்கும் பல மகஜர்களையும் கையளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (2-315)

துடுப்பாட்ட சங்கத்தின் அலுவலகம் திறந்து வைப்பு

வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் அலுவலகம் துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் வை.றதீபனால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொண்டு வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் தலைவர் கருத்து தெரிவிக்கையில்,

எமது மாவட்டத்தின் துடுப்பாட்ட துறையை பாடசாலை மட்டத்திலும் மற்றும் கழக மட்டத்திலும் விருத்தி செய்து தேசிய மட்டத்திற்கு வீரர்களை கொண்டு செல்லும் நோக்கோடு இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்தில் தனியொரு விளையாட்டுத் துறைக்கு அலுவலகம் திறப்பது இதுவே முதற் தடவை என சுட்டிக்காட்டியுள்ளார்.

இந் நிகழ்வில் வவுனியா மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தின் செயலாளர் விஜிதுலன், பாடசாலை துடுப்பாட்ட அபிவிருத்தி குழுத் தலைவர் சுந்தராங்கன் உட்பட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (3-8)



வாழ்வாதார உதவிகள்

வெளிச்சம் அறக்கட்டளையின் வேண்டுகோளுக்கு இணங்க சுவிஸ் நாட்டிலுள்ள நண்பர்களூடாக சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் வலுவிழந்தோரைத் தாங்குவோம் எனும் வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் விசேட தேவைக்குட்பட்டோருக்கும் உதவி வழங்கும் நிகழ்வில் பூவரசங்குளம் தாலிக்குளம் கிராமத்திலுள்ள விசேட தேவைக்குட்பட்ட ஒருவருக்கு 25 ஆயிரம் ரூபாவும் மற்றும் மடுப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட கல்மடு படிவம் - 02 இல் யுத்தத்தின் போது கால் ஒன்றை இழந்த பெண் ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக 30 ஆயிரம் ரூபாவும் இந் நிகழ்வில் வழங்கப்பட்டது. (8)

பெண் தலைமைத்துவ குடும்பங்களின் அமரர் ஒன்றியத்தினால் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளை ரிஷி தொண்டுநாத சுவாமிகளின் தாயார் திருமதி சிவமோகினி கனகரத்தினம் தேவிபுரம் குருதேவர் அறநெறிப்பாடசாலையில் வைத்து வழங்கினார்.

எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில் சக்கடத்தாரும் ஏறி சறுக்கி விழுந்தாராம்.

~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

தமிழ்ப் புத்திஜீவிகளே! மௌனம் கலையுங்கள்

தமிழ்ப் புத்திஜீவிகளுக்கு அன்பு வணக்கம். தமிழர்கள் புத்திஜீவிகளாக இருந்தால் அவர்கள் மௌனமாக இருப்பதுதான் புத்திசாலித்தனத்துக்கு அடையாளம் என்று வகுத்துக் கொண்டு வாழப் பழகியாயிற்று.

அது உங்கள் தவறன்று. நியாயத்தைக் கதைத்தால் ஆபத்து என்ற நிலையில் உங்கள் மௌனம் புத்திசாலித்தனமாக இருந்திருக்கலாம்.

ஆனால் தற்போது இருக்கின்ற சூழ்நிலையில் தமிழ்ப் புத்திஜீவிகளாகிய நீங்கள் மௌனம் கலைக்க வேண்டும்.

பேச வேண்டிய இடத்தில் பேசாமல் இருப்பது பெரும் பிழை இடம்பெற வழிவகுக்கும் என்பதை நாம் சொல்லி நீங்கள் யாரும் தெரிய வேண்டியதில்லை.

இப்போது அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் இடைக்கால வரைபு வெளிவந்துள்ளது.

இடைக்கால வரைபுக்கு இரா.சம்பந்தர் அவர்கள் தனது ஆதரவைத் தெரிவித்துள்ளதுடன் அதனை நியாயப்படுத்த மாவட்டங்கள் தோறும் பிரசாரம் செய்யவும் தயாராகியுள்ளார். அதில் நாம் குறைகூற விழையவில்லை. அது அவரைப் பொறுத்தது.

ஆனால் வெளிவந்திருக்கக்கூடிய வரைபுகள் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கானது.

எனவே கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அதில் கையொப்பமிட்டு ஏற்றுக் கொண்டு ஐ.நா சபைக்கு அனுப்பி வைத்தால்,

தமிழ் மக்கள் இடைக்கால வரையில் குறிப்பிடப்பட்டவற்றை அப்படியே ஏற்றுக் கொள்வதாகப் பொருள்படும். கூடவே சர்வதேச போர்க் குற்ற விசாரணை என்பதும் இல்லாமல் போய்விடும்.

ஆகையால்தான் நீங்கள் மௌனம் கலைக்க வேண்டும். இடைக்கால வரையில் கூறப்பட்டவை தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக அமைகின்றதா? அது தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுகிறதா?

இந்த நாட்டில் இனிமேலாவது தமிழ் மக்கள் அச்சமற்ற வாழ்வு வாழமுடியுமா என்பன தொடர்பில் நீங்கள் ஆராய்ந்து உண்மையை தமிழ் மக்களுக்கும் இலங்கைத் தீவின் ஒட்டுமொத்த குடிமக்களுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் தெரியப்படுத்த வேண்டும். இது உங்களின் தார்மீகக் கடமை.

இடைக்கால வரைபை எதிர்க்க வேண்டும் என்ற நியதி தமிழ் மக்களுக்கு இல்லை. அதற்காக எதுவும் இல்லாத ஒரு வரைபை அப்படியே ஏற்க வேண்டும் என்ற விதியும் தமிழ் மக்களுக்கு இல்லை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்.

ஆகையால் மரியாதைக்குரிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினரே! தமிழ் சட்டத் தரணிகளே! தமிழ் அரசியல்வாதிகளே! வடக்கு கிழக்கு மாகாண சபையின் உறுப்பினர்களே! தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களே! ஒட்டுமொத்த தமிழ்ப் பற்றாளர்களே! வந்திருக்கக் கூடிய இடைக்கால வரைபு பற்றி ஆராய்ந்து அறிக்கை இடுங்கள்.

தமிழ் மக்களின் உரிமை; வடக்கு கிழக்கு இணைப்பு, காணி மற்றும் பொலிஸ் அதிகாரம், பௌத்தம் தவிர்ந்த ஏனைய மதங்களுக்கான முன்னுரிமைகள் இவைபற்றியெல்லாம் ஆராயுங்கள். உங்கள் கருத்துக்கள் வெளிவரும் போதுதான் உண்மை துலங்கும்.

சரி என்றால் சரி என்போம் பிழை என்றால் பிழை என்போம். இதற்காக நீங்கள் அத்தனை பேரும் மௌனம் கலைத்து தமிழ் மக்களின் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும்.

தமிழ் அரசியல் கைதிகளை தண்டிப்பதே அரசின் நோக்கம்

ஐ.நாவில் கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு

(ஜெனிவா)

தமிழ் அரசியல் கைதிகளைக் குற்றவாளிகளாக்கித்தண்டித்துவிட வேண்டுமென்ற நோக்கிலேயே இலங்கை அரசு செயற்படுகின்றது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் பிரதான அவையில் குற்றஞ்சாட்டியுள்ளார். ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரின் பொது விவாதத்தில் விடயம் 5 இன் கீழ் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ.நாவின் விசேட செயற்குழுக்கள் ஐ.நா. உடன்படிக்கைகளை கண்காணிக்கும் அமைப்புகள் மற்றும் விசேட பிரதிநிதிகள் ஆகியோர் தமக்கிடையே ஒருங்கிணைக்கப்பட்ட வினைத்திறனுடைய செயற்றிட்டமொன்றுடன் இலங்கையை அணுக வேண்டும் என நாம் அவர்களை வேண்டிக்கொள்கிறோம். இல்லாவிடின் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் இந்த அமர்வின் ஆரம்ப உரையில் குறிப்பிட்டிருந்தது போன்று இலங்கை அரசாங்கமானது தன் மீதான மனிதவுரிமைக் கடப்பாடுகளுக்கு வெறுமனே பெயரிற்காக செய்யப்படும் நடவடிக்கைகளையே பதிலாக வழங்கும் ஆபத்து இருக்கிறது.

குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் பற்றிய விடயங்களை அணுகும்போது இப்படியான ஒருங்கிணைக்கப்பட்ட அணுகுமுறை மிகவும் பொருத்தப்பாடுடையதாக அமையும்.

ஐ.நாவின் 2015 ஆம் ஆண்டு 30/1 தீர்மானத்தின் பிரகாரம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதாக உறுதியளித்திருந்த போதிலும் இலங்கை அரசு அதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இன்னமும் ஆட்களைத் தடுத்துவைத்திருப்பதையும் அச்சட்டத்தின்கீழ் வழக்குகளை நடத்துவதையும் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகின்றது.

இப்படியான தடுப்புக்களிலுள்ள அனைவர் மீதுமுள்ள ஒரேயொரு குற்றச்சான்றானது மிகவும் சர்ச்சைக்குரிய சூழ்நிலையில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலங்கள் மட்டுமேயாகும்.

இவ் ஒப்புதல் வாக்குமூலங்கள் நம்பிக்கையற்ற பலவந்தப்படுத்தப்பட்ட சூழ்நிலைகளில் பெறப்பட்டதன் காரணமாக அநேக சந்தர்ப்பங்களில் எந்தவித ஆதாரமற்ற; ஏற்புடையதல்ல என விலக்கப்பட்டிருக்கிறது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துடன் தொடர்புபட்ட வழக்குகளைக் குற்றம் இழைத்ததாக கூறப்படும் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்கு வெளியேயுள்ள நீதிமன்றங்களுக்கு மாற்றுவதற்கான முயற்சிகளில் நியாயமான காரணங்கள் எதுவுமின்றி அரசாங்கம் ஈடுபட்டுள்ளது.

இலங்கை நீதித்துறையானது ஊழல் நிறைந்ததும் கட்டமைப்புசார் சிதைவைகொண்டதும் என்ற குற்றச்சாட்டை ஐ.நா. மனிதவுரிமை பேரவை ஆணையாளர் இலங்கை மீதான ஐ.நா.ம.உ.அலுவலக அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த நிலையில், இவ்வாறான (இட)மாற்றங்கள் மூலம் (போலியாக) சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களினடிப்படையில் சந்தேக நபர்களை திட்டமிட்டு குற்றவாளிகளாக்கிவிட வேண்டும் என்ற நோக்கில் செயற்படுவதற்கான சாத்தியப்பாடுகள் உள்ளதை எவரும் மறுதலிக்க முடியாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-4)

கரிகாற்சோழன் விருது-2017 நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன

(கொழும்பு)

தஞ்சாவூர் பல்கலைக்கழகமும் முஸ்தபா அறக்கட்டளை அமைப்பும் இணைந்து நடத்தும் கரிகாற்சோழன் விருது-2017ற்காக இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து நூல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. எல்லாத்துறை சார்ந்த நூல்கள் வரவேற்கப்படுவதுடன் ஒவ்வொரு நூல்களிலும் மூன்று பிரதிகள் அனுப்பப்பட வேண்டும். நூல்கள் யாவும் எதிர்வரும் 15.10.2017இற்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக பேராசிரியர் வ.மகேஸ்வரன், தமிழ்த்துறைத் தலைவர், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(இ-3)

திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

இவளுக்கு மணமாகியிராது. மணமாகியிருந்தால் இவளை என் மனம் நாடியிராது என்றெல்லாம் எண்ணமிட்டபடி அவளை நோக்கி ஓடினான்.

வேடன் ஒருவன் வேழம்போல் தன்னை நோக்கி நடந்து வருவதைப் பார்த்துப் பதைத்தாள் பத்மாவதி.

அவளை விரட்டியடிக்கும்படி தன் தோழிகளிடம் உத்தரவிட்டான்.

பத்மாவதியின் கட்டளைப்படி பாங்கியர் பஞ்சாய்ப் பறந்து சென்று ஸ்ரீநிவாசனை அணுகினர்.

அந்தச் சோலையும் அதன் சுற்றுப்புறமும் ஆண்கள் வரக்கூடாத இடம் என்பதால் அவனும் அணுகக்கூடாது என மிரட்டி விரட்டிப் பார்த்தனர். (தொடரும்)

மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை யாழ்.பிரதேசத்தில் மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குளாய், ஆழியவளை, வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக் கேணி இராணுவ முகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

முன்னோர் வழிபாடு

மணமக்கள் மேடைக்கு வந்தவுடன் நாந்தி சோபனம், மணப் பொங்கல் என்றழைக்கப்படும் முன்னோர் வழிபாட்டினை செய்ய வேண்டும். மணமக்களது மறைந்த முன்னோர்களின் உருவப் படத்தையோ அல்லது அருவரமான மஞ்சள் கூம்பையோ வைத்து மங்கல பொருட்கள் கொண்டு அலங்கரித்து மணமக்கள் உதிரிப்பூக்கள் கொண்டு தமிழ் மந்திரம் சொல்லி வழிபட வேண்டும். (தொடரும்)

தொடரை வெல்லுமா விராட்டின் இந்தியா? ஆஸியுடன் இன்று இந்தூரில் பலப்பரீட்சை

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் மோதும் மூன்றாவது ஒருநாள் போட்டி இந்தூரில் இன்று நடக்கிறது. இதில் இந்திய அணி அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி தொடரை கைப்பற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியா வந்துள்ள அவுஸ்திரேலிய அணி, ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. இரண்டு போட்டிகளின் முடிவில், இந்தியா 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது. மூன்றாவது ஒருநாள் போட்டி, மத்திய பிரதேசத்தில் உள்ள இந்தூரில் இன்று நடக்கவுள்ளது.

'ஹட்ரிக்' வாய்ப்பு

சென்னை, கொல்கத்தாவில் நடந்த முதலிரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற உற்சாகத்தில் இந்திய அணி உள்ளது. இதே உத்வேகத்துடன் இன்றும் அசத்தினால், 'ஹட்ரிக்' வெற்றியுடன் தொடரை கைப்பற்றலாம். இரண்டாவது போட்டியில் அரைசதம் கடந்து எழுச்சி கண்ட ஆரம்ப வீரர் ரகானே, அணித் தலைவர் ஹோலி மீண்டும் சாதிக்கலாம். ஏனெனில் கடந்த ஆண்டு இந்தூரில் நடந்த நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்டில் ஹோலி (211), ரகானே (188) ஓட்ட மழை பொழிந்தனர். இந்த அனுபவம் இவர்களுக்கு கைகொடுக்கலாம். ரோகித் சர்மா (28, 7) நல்ல ஆரம்பம் தர வேண்டும்.

பாண்டே கவனம்:

நான்காவது இடத்தில் களமிறங்கும் மணிஷ் பாண்டே (0, 3) முதலிரண்டு போட்டிகளில் சொதப்பினார். ஐந்தாவது இடத்தில் களமிறங்கும் கேதர் ஜாதவ் (40, 24) ஓரளவு ஆறுதல் தந்த போதிலும் இக்கட்டான நேரத்தில் அணியை காப்பாற்ற தவறுகிறார். பின் வரிசையில் களமிறங்கும் தோனி, பாண்ட்யா, புவனேஷ்வர் துடுப்பாட்டத்தில் நம்பிக்கை அளிப்பது கூடுதல் பலம்.

மந்துவீச்சாளர்கள் காரணம்

வேகப்பந்துவீச்சில் அசத்தும் புவனேஷ்வர் குமார், பும்ரா, ஹர்திக் பாண்ட்யா மீண்டும் விக்கெட் வேட்டை நடத்தலாம். இரண்டாவது போட்டியில் 'ஹட்ரிக்' விக்கெட் வீழ்த்திய 'சைனாமேன்' சுழற்பந்துவீச்சாளர் குல்தீப் யாதவ், மீண்டும் சாதிக்கலாம். இவருக்கு, யுவேந்திர சகால் ஒத்துழைப்பு தருவது சுழலின் பலத்தை அதிகரிக்கச் செய்கிறது.

அவுஸ்திரேலிய அணிக்கு ஹில்டன் கார்ட்ரைட் (1,1), டேவிட் வோர்னர் (25, 1) சிறப்பான ஆரம்பம் தர வேண்டும். இரண்டாவது போட்டியில் அரைசதம் கடந்த அணித் தலைவர் ஸ்டீவ் ஸ்மித், ஸ்டாய்னிஸ், மீண்டும் அசத்தலாம். டிராவிஸ் ஹெட், மக்ஸ்வெல், மத்யூ வேட் எழுச்சி பெற வேண்டும். வேகப்பந்துவீச்சில் நேதன் குல்டர்-நைல், இந்திய முன்வரிசை துடுப்பாட்ட வீரர்களுக்கு நெருக்கடி தருகிறார். இவருக்கு பட் கம்மின்ஸ், ஒத்துழைப்பு தந்தால் நல்லது. சிறந்த 'சுழல்' வீரர் இல்லாமல் தவிக்கும் அவுஸ்திரேலிய அணிக்கு ஆடம் ஷாம்பா, அஷ்டன் ஏகர் கைகொடுக்க வேண்டும்.

சாதனை நோக்கி ஹோலி

கடந்த ஜூலை 2ல் அன்டிகுவாவில் நடந்த ஒரு நாள் போட்டியில் இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகளிடம் வீழ்ந்தது. இதன் பின் நடந்த, 8 போட்டிகளிலும் (மே.தீவுகள்-1, இலங்கை-5, ஆஸி.,-2) வாகை சூடியது. இன்றும் இந்திய அணி அசத்தினால், ஒரு நாள் அரங்கில் தொடர்ந்து அதிக வெற்றி தேடித்தந்த இந்திய அணித் தலைவர் தோனியின் சாதனையை ஹோலி சமன் செய்யலாம். தோனி, நவ. 2008- பிப். 2009 வரை தொடர்ந்து 9 ஒரு நாள் போட்டிகளில் (இங்கிலாந்து- 5, இலங்கை-4) அணிக்கு வெற்றி பெற்றுத் தந்துள்ளார்.

முதல் முறை

இந்தூரில் உள்ள ஹோல்கர் கிரிக்கெட் மைதானத்தில் இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் முதல்முறையாக ஒருநாள் போட்டியில் மோதவுள்ளன.

இந்தூர், ஹோல்கர் மைதானத்தில் விளையாடிய 4 போட்டிகளிலும் (எதிர்: 2006, 2008ல் இங்கிலாந்து, 2011ல் மேற்கிந்தியத் தீவுகள், 2015ல் தென்னாபிரிக்கா) இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கை

கடந்த 2011ல் இந்தூர், ஹோல்கர் மைதானத்தில் நடந்த மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான ஒருநாள் போட்டியில், முதலில் துடுப்பாட்டம் செய்த இந்திய அணி 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 418 ஓட்டங்கள் குவித்தது. இது இம் மைதானத்தில் பதிவான அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாகும்.

மழை வருமா?

இன்றைய போட்டி நடக்கவுள்ள இந்தூரில் (ம.பி.,) வெப்பநிலை அதிகபட்சம் 31, குறைந்தபட்சம் 22 டிகிரி செல்சியசாக இருக்கும். வானம், மேகமூட்டத்துடன் காணப்படும். மழை வர 10 சதவீதம் வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

125

இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் இதுவரை 125 ஒருநாள் போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இந்தியா 43, அவுஸ்திரேலியா 72ல் வெற்றி பெற்றன. 10 போட்டிகளுக்கு முடிவு இல்லை.

வெற்றிடங்களுக்கு விண்ணப்பம் கோரல்

ஜெயந்திநகர், கிளிநொச்சியில் அமைந்துள்ள மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லத்தில் கீழ்வரும் பணிநிலை வெற்றிடங்கள் காணப்படுகின்றன. ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். தங்கள் விண்ணப்பங்களை 01.10.2017க்கு முன்பதாக தபால் மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பணிநிலை

- புவியியல் (பட்டதாரி)
- கணினி ஆசிரியர் (பட்டம்/டிப்ளோமா சான்றிதழ்)
- ஆரம்ப பிரிவு மாணவர்களுக்கான சகல பாடங்களும் கற்பிக்கக் கூடியவர். (க.பொ.த.உயர்தரத்தில் கலைப்பிரிவில் 3 பாடங்களும் சித்தியெய்தியவர்கள் விண்ணப்பிக்கலாம்)

குறிப்பு:

- ❖ ஆறுமாத காலத்திற்கு தகுதிகாண் காலத்துள் வைக்கப்படுவர். அதன் பின்பே நிரந்தரமாக்கப்படுவர்.
- ❖ இல்லத்தில் தங்கியிருந்து சேவை பயிற்றுவித்தல் வேண்டும்.
- ❖ உணவு, தங்குமிடம் என்பன இலவசமாக வழங்கப்படும்.
- ❖ சம்பளம் ரூபா 18000மும் மாதாந்தம் வழங்கப்படும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் எந்த பதவிக்கான விண்ணப்பம் என்பதைத் தவறாது குறிப்பிட்டு சகல சான்றுப் பத்திரங்களின் நிழற் பிரதிகளுடன் பதிவுத் தபாலில் எமக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலும் கிராமசேவையாளர் உதவி அரச அதிபர் குணநல நற்சான்றிதழ் வேறு இரு பிரமுகர்களது நற்சான்றிதழின் பிரதி இணைக்க வேண்டும்.

அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:-

தி.இராஜநாயகம், தலைவர்,
மகாதேவா சுவாமிகள் சிறுவர் இல்லம்
ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
தொலைபேசி இல: 077 0391 4930, 021 422 3113
மின்னஞ்சல் முகவரி: rasa43@yahoo.com

(C-9,35)

மரண அறிவித்தல்

திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்

பொன்னாவரசன் குளத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் சுப்பிரமணியம் அவர்கள் 22.09.2017 அன்று காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - கறுபாய் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தன் - சந்தானம் தம்பதியினரின் அன்பு மருமகளும் கந்தன் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மாரியாய், செல்லம்மா (பொன்னாவரசங்குளம்) கதிராய் (பொன்னாவரசங்குளம்) காலஞ்சென்ற மாரிமுத்து, காலஞ்சென்ற தர்மலிங்கம், லட்சுமி (பனிக்கன்குளம்) ராசம்மா (பொன்னாவரசங்குளம்), தங்கமுத்து (பொன்னாவரசங்குளம்) ஆகியோரின் சகோதரியும் வைத்திலிங்கம் (யோகா) (பொன்னாவரசங்குளம்) தவமலர் (மலர்) (வவுனியா), சோதிமலர் (சோதி) (இராசேந்திரங்குளம்), ஆனந்தகுமார் (ஆனந்தன்) (பொன்னாவரசங்குளம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரதி கயேந்தினி சின்னத்துரை இராசசேகரம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் சுசி நிதர்சிகா நிரோ கிசோர் டக்சி டிலக்சன் டயாளினி கீர்த்திகா யதுசன் கோபிசன் கிருஷன் அக்சனா ஆகியோரின் பாட்டியும் வேனுகிசனின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2017) காலை 10 மணிக்கு இராசேந்திரங்குளத்திலுள்ள சோதி மலர் (சோதி) அவர்களின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இராசேந்திரங்குளம் இந்து மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும்.

இவ் மரண அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:-

பனிக்கன்குளம்
077 3385295

கந்தன் சண்முகம்
குடும்பத்தினர்

(C-9736)

இலங்கைக்கு...

தண்டிக்கும் 21 நாடுகளின் பட்டியலை நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகளுக்கான செயற்பாட்டாளர்களை தண்டிக்கும் நாடுகள் பட்டியலில் இலங்கை சேர்க்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும் எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இது தொடர்பிலான பட்டியலை உதவி ஆணையாளர் அண்ட்ரூ கில்மோ நேற்றுமுன்தினம் மாலை வெளியிட்டுள்ளார். (மு-11)

பேரறிவாளனின்...

தந்தையின் உடல் நலத்தை கருத்திற்கொண்டு பேரறிவாளனுக்கு கடந்த மாதம் பிணை வழங்கப்பட்டது.

எனினும் பேரறிவாளனின் தந்தை மற்றும் சகோதரியின் உடல்நலத்தை கருத்திற்கொண்டு மேலும் ஒரு மாதத்திற்கு பிணையை நீடிக்குமாறு அவரின் தாயாரான அற்புதம்மாள் தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

இதனை பரிசீலனை செய்த தமிழக அரசு, பிணையை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்திருப்பதாக இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன. (மு-11)

அரசியல் அமைப்பு...

சில திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அதுவே சிறந்தது.

தற்போதைய அரசியல் அமைப்பில் கொண்டுவரப்பட்ட 13 ஆம் திருத்தம் 19 ஆம் திருத்தம் போன்றவையும் காணி அதிகாரம் பொலிஸ் அதிகாரம் என்பன நாட்டின் நலத்தை பாதிப்பதாகவே அமைந்துள்ளது.

இதேவேளை, மாகாண சபைகள் தொடர்பில் பாரிய சிக்கல்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ள தேரர், புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்படும் பட்சத்தில், அதற்கு மக்களின் அங்கீகாரம் பெறப்படுவது அவசியமானதென குறிப்பிட்டார். (மு-11)

மகாநாயக்கர்களை...

டிக்கு விஜயம் செய்யவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசியலமைப்பு உருவாக்க முயற்சிகளில் அரசியலமைப்புச் சபை மும்முரமாக ஈடுபட்டுவருகிறது.

எனினும் இந்த முயற்சிகளுக்கு எதிர்ப்பு வெளியிட்டுவரும் கடும்போக்குவாத மற்றும் இனவாத பிரிவினர் சமஷ்டி ஆட்சிமுறை, அதிகாரப் பகிர்வு, பௌத்த மதத்திற்குரிய இடம் வழங்கப்படாது என்ற வதந்திகளை பரப்பி வருகின்றனர்.

விசேடமாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் ஓரணி உருவாக்கப்பட்டு நாடு முழுவதிலும் புதிய அரசமைப்புக்கு எதிரான பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறியமுடிகின்றது.

அத்தோடு மகாநாயக்கர்களின் கவனமும் இது தொடர்பில் செலுத்தப்பட்டுள்ள நிலையில், அண்மையில் வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனும் மகாநாயக்கர்களை சந்தித்து கருத்துக்களை வினவியிருந்தார்.

இந்த நிலையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மகாநாயக்கர்களை நேரில் சந்தித்து தெளிவுபடுத்துதலை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (மு-11)

லொறி-முச்சக்கர...

சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது முச்சக்கர வண்டியில் பயணித்த திருக்கேதீஸ்வரத்தை சேர்ந்த 19 வயதுடைய சதுகரன், திருகோணமலையைச் சேர்ந்த 20 வயதான சதீஸ்குமார், கைதடியைச் சேர்ந்த 18 வயதுடைய எஸ்.தமிழ்வாணன் ஆகிய மூன்று இளைஞர்களும் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த மூன்று இளைஞர்களும் சிகிச்சைக்காக மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக குறித்த லொறியின் சாரதியைப் பொலிஸார் கைது செய்ததோடு, உயிரிழந்த இளைஞனின் சடலம் மன்னார் பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

விபத்துக்குறித்த மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

வாள்வெட்டு...

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் கோண்டாவில் காரைக்கால் சிவன்கோவில் அருகாமையில் இடம்பெற்றுள்ளது.

இதில் கோண்டாவிலைச் சேர்ந்த அமிர்தலிங்கம் உமாபிரபா (வயது-19) என்ற இளைஞனே படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (மு-30)

படையினர் வசமுள்ள...

டுள்ளார்.

அதற்கமைய 111 ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

64 பேருக்கு சொந்தமான காணியே இவ்வாறு விடுவிக்கப்படவுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

முகாம்களிலிருந்து படையினர் முழுமையாக வெளியேறியதன் பின்னர் கேப்பாப்பிலவு பகுதியிலுள்ள காணிகளை மாவட்ட செயலகம் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (மு-11)

காணாமல்போனோர்...

சின் செயலாளர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

இந்த அலுவலகம் ஊடாக காணாமல்போனவர்கள் தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்கப்படும் எனவும் ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேசமும் இந்த அலுவலகத்தை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சிக்கு வரவேற்பு தெரிவித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டில் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறும் பொறிமுறையை முன்னெடுப்பதற்கு தமக்கு கால அவகாசம் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் வழங்கப்பட்டுள்ள இரண்டு வருட கால அவகாசம் போதுமானதா என கூறமுடியாது எனவும் எனினும் தாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை ஐ.நா மனித உரிமை ஆணையாளர் இலங்கை மீது அதிருப்தி வெளியிட்டதாக தாம் கருதவில்லை எனவும் அவர் மனித உரிமை ஆணையாளர் என்ற வகையில் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் என்ன கூறினாலும் நாங்கள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையுடன் இணைந்து பயணிப்போம் எனவும் அவர் கூட்டிக்காட்டியுள்ளார். (மு-11)

மின் ஒழுக்கு...

புடவை கடையொன்றும் இலத்திரனியல் கடையொன்றும் மற்றும் நகை கடையொன்றும் இவ்வாறு தீக்கிரையாகியுள்ளன.

இலத்திரனியல் கடையில் ஏற்பட்ட மின் ஒழுக்கு காரணமாகவே குறித்த விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், தீயணைப்புப் படையினரும், பொலிஸாரும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இத் தீ விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (மு-11)

மாகாண சபையின்...

தெரிவித்துள்ளது.

இந்த அதிகாரப் பகிர்வினால் பிரிவினைவாதத்திற்கு சாதகமான நிலை தோன்றும் என தெற்கில் கருதுகின்றனர்.

எனவே தற்போதைய அரசியல் அமைப்பில் இல்லாத ஒரு காரணியை புதிய அரசியல் அமைப்பிற்குள் இணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபையின் செயற்பாடுகள் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும்பட்சத்தில் அதில் தலையிடுவதற்கு மத்திய அரசுக்கு அதிகாரம் இருப்பதாக ஜயம்பதி விக்கிரமரத்ன குறிப்பிட்டுள்ளார். (மு-11)

இலங்கையில்...

இது தொடர்பாக குழந்தைகள் மருத்துவ மனையின் இருதய நோய் சிகிச்சை பிரிவின் மருத்துவ சிறப்பு நிபுணர், துமிந்த சமரசிங்க வெளியிட்டுள்ள தகவலின்படி, சுமார் 3 ஆயிரம் குழந்தைகளுக்கு இயல்பாகவே இருதய நோய் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு விசேட மருத்துவ சிகிச்சை நடைமுறைகள் பின்பற்றப்படுவது அவசியம் என அவர் ஆலோசனை செய்துள்ளார். (மு-11)

நேபாளம் செல்கிறார் ஜனாதிபதி மைத்திரி

(கொழும்பு)

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஒக்டோபர் மாதம் நேபாளத்துக்கு பயணிக்கவுள்ளார்.

நேபாள ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பை ஏற்றே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேபாளத்துக்கு பயணிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபை கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் நேபாள பிரதமர் சர்பஹதுர் டியு பாவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதே இந்த தகவலை வெளியிட்டார்.

இதன்போது இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவை வலுப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தைகளில் ஜனாதிபதி ஈடுபடவுள்ளார். (மு-11)

சுவரைத் துளையிட்டுக் கொண்டு சினிமாப் பாணியில் தப்பியோடிய கைது

மீண்டும் கைது செய்த பொலிஸார்

(களுத்துறை)

களுத்துறை, புளத்சிங்கள பொலிஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சினிமாப்பாணியில் கழிவறை சுவரை துளையிட்டுக்கொண்டு நேற்றுமுன்தினம் இரவு தப்பியோடிய நிலையில் மீண்டும் பொலிஸாரால் மடக்கி பிடிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் மத்துகம பொலிஸாரால் போதைப் பொருள் விற்பனை தொடர்பில் கைது செய்யப்பட்டு பின்னர் புளத்சிங்கள பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டு விளக்கமறியலில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு விளக்கமறியலிலுள்ள கழிவறை சுவரின் ஒரு பகுதியை மிகவும் நூதனமான முறையில் துளையிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இதே வேளையில் குறித்த சந்தேக நபரை சந்திப்பதற்காக உறவினர்கள் பொலிஸ் நிலையத்திற்கு வந்துள்ளனர்

அதன்போது விளக்கமறியலில் குறித்த நபரை தேடியபோதே தப்பிச்சென்ற விடயம் பொலிஸாருக்கு தெரிய வந்துள்ளது.

அதன் பின்னர் பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு நேற்று நண்பகல் குறித்த நபரை மீண்டும் கைது செய்துள்ளனர். (மு-11)

இலங்கையின் முயற்சிகளுக்கு அனைத்து உதவிகளையும் வழங்க தயார்

ஐ.நா செயலாளர் நாயகம்

(நியூயோர்க்)

பலமான நல்லிணக்கத்துடன் சுபீட்சமான தேசமாக இலங்கையை கட்டியெழுப்புவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அனைத்து வகையான உதவிகளையும் வழங்க தயாராக உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டேரஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை தேசத்துடன் மிக நெருக்கமாக செயற்பட்டு அனைத்து இலங்கையர்களுக்கும் சுபீட்சம் மற்றும் சகவாழ்வு நிறைந்த, உலகின் முன்மாதிரி தேசமாக எழுந்திருப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை முழுமையாக உதவும் என்றும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 72-வது பொதுச் சபை கூட்டத்தொடரில் கலந்து கொள்வதற்காக அமெரிக்கா சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டேரஸுக்கும் இடையிலான சந்திப்பு இலங்கை நேரப்படி நேற்று பிற்பகல் நியூயோர்க் நகரில் நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போதே செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாரிஸ் மாநாட்டில் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனிப்பட்ட முறையில் மேற்கொண்டுவரும் முயற்சிகளை பாராட்டிய செயலாளர் நாயகம், அபிவிருத்தி இலக்குகளை அபிவிருத்தி நடைமுறைகளுடன் இணைத்துக் கொள்வதற்கு ஜனாதிபதி காட்டிவரும் கரிசனை குறித்தும் தனது பாராட்டுக்களை தெரிவித்தார்.

தான் 1978ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை தந்திருப்பதாகவும் சிகிரிய, தம்புள்ளை மற்றும் பொலநறுவை உள்ளிட்ட பிர

தேசங்களுக்கு விஜயம் செய்திருப்பதாகவும் குறிப்பிட்ட செயலாளர் நாயகம் அந்தோனியோ குட்டேரஸ், அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின்அகதிகள் தொடர்பான ஆணையாளராகவும் இலங்கைக்கு விஜயம் செய்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையுடனான ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை பலப்படுத்தி இலங்கை நாட்டுக்கும் மக்களுக்கும் முழுமையான உதவிகளை வழங்க தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கம் தொடர்பான செயற்பாடுகளில் இலங்கை அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

இதற்கு உலகின்அனைத்து நாடுகளினதும் ஒத்துழைப்பும் நட்புறவும் அவசியம் என்றும் தெரிவித்தார்.

அபிவிருத்தி இலக்குகளை வெற்றிகொண்டு நல்லிணக்க கொள்கையுடன் பயணிக்கும் இலங்கையின் தற்போதைய முன்னேற்றங்களை நேரில் கண்டறிவதற்காக தனிப்பட்ட முறையில் இலங்கைக்கு விஜயம் செய்யு மாறு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்திற்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்தார். (மு-11)

எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து கூட்டமைப்பின் தலைவரை நீக்குங்கள்

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை நீக்கிவிட்டு தங்களில் ஒருவரை நியமிக்குமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

நல்லாட்சி அரசில் உள்ள இருபெரும் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான ஒப்பந்தம் எதிர்வரும் டிசம்பர் மாதம் முடிவுக்கு வருகிறது.

இந்த நிலையில் அமெரிக்காவுக்கு சென்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாடு திரும்பியவுடன், ஒன்றிணைந்த எதிர்க்கட்சி அவரை சந்திப்பதற்கு தீர்மானித்துள்ளது.

இந்த சந்திப்பின்போது எதிர்க்கட்சித் தலைவர் பதவியை உத்தியோகபூர்வமாக ஜனாதிபதியிடம் கோருவதற்கும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி திட்டமிட்டுள்ளது. (மு-11)

SB Travels and Tours Pvt Ltd

இல. 212 கஸ்தூரியார் வீதியில் இயங்கி வரும் SB Travels and Tours Pvt Ltd இப்போது விசேட விலைக் கழிவுகளுடனான விமான பயணச் சீட்டுக்களை வழங்குகின்றது. விசா விண்ணப்பப்படிவம் 150/= நிரப்பி தரப்படும். Budjet Airlinesல் மதுரை சென்னை ரூ.23500 இலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
021 222 9555, 021 222 8555, 076 691 1080, 81,
076 691 1082, 83, 077 711 1228
(C-9717)

100% புலமைப் பரிசில்

முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிநெறி!

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?

அல்லது

ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

Apply Now For Batch 2

தகமை : க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளைப் பெற்றிருத்தல் (வயது எல்லை 23 வருடத்திற்குட்பட்டது)
பயிற்சி நிலையம் : யாழ்ப்பாணம்
பயிற்சிக் காலம் : 6 மாதங்கள் (நவம்பர் 2017 – மார்ச் 2018)
விண்ணப்பிக்கும் முறை : www.uki.life/apply
விண்ணப்ப இறுதித்திகதி : 06 October 2017

உள்ளடக்கம்
- Software Development
- Business English
- Business Management
- Personal Coaching

(381)

மேலதிக தகவல்களுக்கு
UK www.uki.life 0775694587 info@uki.life

கட்டார் முன்னணி போக்குவரத்து சேவை நிறுவனத்தில் சாரதி வெற்றிடங்கள்

Taxi Driver (300 பேர்)

QR 1200 (49,200 இலங்கை ரூபா) + கமிஷன்

இலங்கை, கட்டார், GCC சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கிலத்தில் ஓரளவு உரையாடக்கூடியவர்களுக்கு முன்னுரிமை

வயதெல்லை 21 – 45

Terms & Conditions
2 வருட ஒப்பந்தம் (6 மாத தகுதிகாண் காலம்) / தங்குமிடம், மருத்துவ வசதிகள் தொழில் தருநரால் வழங்கப்படும் / 8 மணித்தியால வேலை – வாரத்தில் 48 மணித்தியாலம் / சேவைக்கால முடிவில் நாடு திரும்புவதற்கான விமானப் பயணச் சீட்டு / கட்டார் தொழில் சட்டத்துக்கு அமைவான ஏனைய நிபந்தனைகள்

நேர்முகத் தேர்வு :
செப்டெம்பர் 28, வியாழக்கிழமை

உடன் பதிவுசெய்ய 0773616798

TGL SINCE 1990 Trans Gulf (Pvt) Ltd.,
SIKARAM ACADEMY Business • Hospitality • Media FAST TRACK to CAREERS

90, First Floor, Chatham Street, Colombo 1 T.P.: 0114426222
175, 1ம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி, யாழ்ப்பாணம் தொ.பே.: 021 - 222 00 11

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை

EXPRESS Courier Services (C-9699)

அண்ணா பொதிகள் சேவை
976,கே.கே.எஸ் வீதி, நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் 070 330 5500

பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும்,குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.

யாழ்ப்பாணம் | ஊர்காவத்துறை | சாவகச்சேரி | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மல்லாவி | வவுனியா | திருகோணமலை

காணி விற்பனைக்கு

மீனாட்சி அம்மன் வீதி கொட்டியில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (665)

தொடர்புகளுக்கு : 076 547 1308

வேலைவாய்ப்பு

- காசாளர்
- பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர்

மாலை 4 மணிக்கு பின் நேரில் வரவும் (561)

இடியப்பக்கடை
மானிப்பாய் வீதி, மருதனார்மடம்

வீடு வாடகைக்கு தேவை

யாழ். நல்லூர் கோவிலைஅண்டிய பகுதியில் 3 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத்தேவை. (665)

தொடர்புகளுக்கு : 076 547 1308

வேலையாட்கள் தேவை Abans

திருநெல்வேலியில் அமைந்துள்ள அபான்ஸ் காட்சியறைக்கு, காட்சியறை உதவியாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் தேவை.
வயதெல்லை :- 18-25 விண்ணப்ப முடிவுத் திகதி :- 30.09.2017
E-mail :- ab_tnv@abansgroup.com Abans
(637) அபான்ஸ் காட்சியறை
Vibar :- 0772544767 இல.136, பலாலி வீதி, திருநெல்வேலி

வேலை வாய்ப்பு

JOB

யாழ்ப்பாணம் வேம்படிச்சந்திக்கு அருகாமையில் அமைந்திருக்கும் எமது (KINGS ELECTRONICS(PVT) LTD) நிறுவனத்திற்கு

விற்பனை பிரதிநிதிகள்(பெண்)
கணக்கு உதவியாளர்(பெண்)
(கணனி அறிவு விரும்பத்தக்கது)

பணியாளர்கள் உடன் தேவை 01.10.2017 திகதிக்கு முன்னர் சுயவிபரக்கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும். (C-9716)

KINGS ELECTRONICS (PVT) LTD
12, Point Petro Road, Jaffna. TEL-021-4546699

வலம்புரி
விளம்பரம் 021 221 7603
தொடர்புகளுக்கு 021 567 1532

உடனடி வேலை வாய்ப்பு V2 TRAVELS

(C-9677)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை

நீண்ட காலமாக வேலை தேடுபவரா?
எமது அலுவலகத்தினூடாக இலகுவாக தற்போது வேலையும் தெரிந்தெடுக்கிறோம்
5,000/=(பயிற்சியின் போது) //15,000/=(பயிற்சியின் பின்னர்)
நேர்முகத் தேர்வின் வாடகைத் தெரிவு செய்யப்படும்
இதுவரை சரியான வாய்ப்புக்கள் மற்றும் தொழில் அனுபவங்கள் கிடைக்காத வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் கடின உழைப்பாளிகளை எதிர்பார்க்கின்றோம்.
தகுதி:- 30 வயதிற்குட்பட்டோர் (இருபாலரும்)
49A சப்பல்லேன்,யாழ்ப்பாணம் (யாழ் பொது நூலகம் முன்னால்) 0768226241

விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

- அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
- மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்து பெற்றுக்கொள்ளப்படும்
- விடுமுறை நாட்களிலும் குறிப்பிட்டிருக்கிறமைகளிலும் அலுவலகங்கள் உண்டு
- எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு [illegible]
- சைக்கிள்கள் மெல்லும் வாய்ப்பு

UK - 550/= (C-9678)

கப்பல் மூலம் கனடாவிற்குப்பொதிகள் அனுப்ப
CANADA - 400/= மட்டுமே
(மிகுந்தனைக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240
- யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • நெல்லியடி
- சாவகச்சேரி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

அனைவருக்கும் அதிர்ஷ்டம் உங்கள் கைகளில்.....

ஒரு முறை முயன்று பாருங்கள் பரிசுகளை வென்றிடுங்கள்.

மிகத் துல்லியமான, உயர் தரத்திலான

6 கலர்ஸ்

டிஜிற்றல் பனர்

குறிப்பு: (15 நாட்கள் மட்டுமே)
25/09/2017 தொடக்கம்
10/10/2017 வரை

15,000 - 30,000 ரூபா வரை
நீங்கள் எம்மிடம் மேற்கொள்ளும் வேலைக்கான பரிசுகள் காத்திருக்கின்றன.

Wedding Cards / Offset Printing / Banner, Sticker Printing / Vehicle Branding / Name Boards / Hoarding / Visiting Cards / T-Shirt / Caps & Tie / Key Tags / Butch / Awards / MDF Plaque / ID Cards / Bags / Mug / Frame Items / Pen Printing

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
JANA DIGITAL PRINTING

இல. 246, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டி சந்தி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 3233, 077 0731654, 071 2115533
E-mail : janadigitalprinting@yahoo.com

(C-9725)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்

வலம்புரி

சங்குநாதம்

நாதம் 135

வள்ளுவர் ஆண்டு 2048 | 24.09.2017 | தொலைபேசி : 021 222 3378

தீர்வோ தீர்வு

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

ஆலடி மாநாடு

நவராத்திரி தசராத்திரியாக மாறிய கதை கேட்டியளோ!

சாத்திரியார் சதாசிவம் ஆலடிப்பிள்ளையார் கோயிலில் தெய்வீக உரையாற்றுகிறார். ஆலடிப் பிள்ளையார் கோயில் மகோற்சவம் நிறைவுற்று நவராத்திரி விரத பூசை வழிபாடுகளையொட்டி பத்துநாளும் விசேட சொற்பொழிவுகள் இடம்பெறுவது வழக்கம்.

சாத்திரியார் சதாசிவத்தின் சொற்பொழிவைக் கேட்பதற்கென்றே கோயிலுக்கு ஆட்கள் வருவது வழக்கம். சாத்திரம், நகைச்சுவை என எல்லாம் கலந்து சதாசிவத்தார் உரையாற்றுவதில் அதனைக் கேட்பதில் மக்களுக்குப் பெரு விருப்பம். சாத்திரியாரின் உரையை ஒலிபெருக்கி தாங்கி வருகிறது.

அடியார் பெருமக்களே! இது நவராத்திரி காலம். ஒன்பது இரவுகள் தேவியை வழிபாடு செய்வது என்று கூறமுடியாமல் உள்ளது. இந்த வருடம் பத்து இரவுகள். அப்படியானால் ஒன்பது இரவுகள் என்று எப்படிக் கூறுவது. இரண்டு என்றால் எல்லாம் குழப்பம்தான். எங்களிடமுள்ள இரண்டு பஞ்சாங்கமும் இரண்டு விதமாகக் கூறுகின்றன. இதில் எது சரி எது பிழை என்பது தெரியாமல் உள்ளது.

ஒன்பது இரவைத்தான் நவராத்திரி என்கிறோம். ஆனால் இது தசராத்திரி. சைவமக்கள் திதி, நட்சத்திரத்திரம் இவற்றைப் பின்பற்றுபவர்கள். எனவே இரண்டு திதி வந்தால் முதல் நாளா? அல்லது மறு நாளா? கருமம் செய்வதற்கு உகந்தது என்பதை சாத்திரங்கள் தெளிவுபடக் கூறியுள்ளன. இருந்தும் எங்கட பஞ்சாங்கங்கள் தங்களுக்கு ஏற்றாற்போல் சொல்கின்றன.

பஞ்சாங்கங்கள் தவறு செய்தால் அது நாட்டையும் மக்களையும்தான் பாதிக்கும். எனவே சரியானதை சரியாகச் சொல்ல வேண்டும். இவ்வாறாக சாத்திரியார் சதாசிவத்தின் உரை நீண்டு சென்று நிறைவடைந்தது.

சாத்திரியாரின் தெய்வீக உரை நிறைவடைந்த கையோடு ஆலடிமாநாடும் கூடியது. வாத்தியார் வைத்திலிங்கம் ஆலடி மாநாட்டிற்குத் தலைமை வகித்தார். இறைவணக்கத்துடன் மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் சொல்ல அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

இறைவணக்கம் நிறைவடைய சாத்திரியாரும் ஆலடிக்கு வந்து அமர்ந்து கொண்டார்.

கங்காணி: சாத்திரியார் ஆற்றிய தெய்வீக உரை மிகச் சிறப்பாக இருந்தது. இரண்டு பஞ்சாங்கக் கதை அருமை.

விதானையார்: அது சரி பஞ்சாங்கமும் பல்லி சொற்பலனும்தானே எங்களைப் பாழாக்கினது.

வாத்தியார்: விதானையார் அப்படிச் சொல்லாதீங்கோ. எல்லாம் ஒரு மரபுதான் . என்ர தந்தை, தந்தையின் தந்தை பார்த்த பஞ்சாங்கமும் பல்லி சொற்பலனும் எங்களையும் பின்பற்றச் செய்யும்தானே!

விதானையார்: வாத்தியார் நான் சொல்லுறது பஞ்சாங்கம் எண்டாலும் ஒரு விளக்கத்தோட வெளி வரவேணும் என்பதைத்தான். பஞ்சாங்கம் வெளியிடுவோர் அது பற்றிச் சிந்திக்க வேணும். பஞ்சாங்கத்தில தீர்மானிக்கப்பட்டது சரி என்பதை நிரூபிக்க பஞ்சாங்கத்தின் பிற்பகுதியில் விளக்கம் இணைக்கப்படவேணும். இல்லையெண்டால் பஞ்சாங்கங்களின்ர ஆயுட்காலம் குறைவு எண்டுதான் சொல்ல முடியும்.

சாத்திரியார்: விதானையார் சொல்லுறது நூறு வீதம் உண்மை. இரண்டு விளக்கீடு, இரண்டுநாள் வருடப்பிறப்பு, பத்து நாள் நவராத்திரி இப்படியே வந்தால் பஞ்சாங்கங்களை யார்தான் நம்புவினம்.

பண்டிதர்: இந்த முறை நவராத்திரி ஆரம்பம் 50 இற்கு 50.

மூப்பர்: பண்டிதர் ஐயா என்ன சொல்லுறியள். முன்பு ஜி.ஜி. பொன்னம்பலம் ஐயா தான் 50 இற்கு 50 கேட்டவர். இந்த நவராத்திரி விரத ஆரம்பம் 50 இற்கு 50 என்கிறியள் எனக் கொண்டும் விளங்குதில்லை.

பண்டிதர்: மூப்பர் நவராத்திரி விரதம் இந்த முறை 20 ஆம் திகதியும் 21 ஆம் திகதியும் ஆரம்பிக்கப் பட்டிருக்குது. அதாவது ஐம்பது வீதமானவர்கள் 20 ஆம் திகதியும் மற்றைய ஐம்பது வீதமானவர்கள் 21 ஆம் திகதியும் நவராத்திரி ஆரம்ப நாளைப் பின்பற்றியிருக்கினம். இதில இருந்த மக்கள் மாறத் தொடங்கிற்றினம் என்பதைத்தான் சொல்ல வாறன்.

(பண்டிதரின் கருத்தை வேகமாக விளங்கிக் கொண்ட சாத்திரியார் அப்ப வாக்கியத்திற்கு ஆபத்து எண்டு சொல்லுறியள் என்றார்)

பண்டிதர்: சாத்திரியார் இதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணர்ந்து கொள்ளவேணும். நாங்கள் சொல்லுவம் நீங்கள் பின்பற்றுங்கள் எண்டில்லாமல் காரணத்தை தெளிவுபடுத்தி மக்களுக்கு விளக்கம் கொடுக்க வேணும். அப்பதான் மக்கள் அதை ஏற்றுக்கொள்ளுவினம்.

வாத்தியார்: அது சரி, ஐ.நா. சபை கூடியிருக்குது. தம்பி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஐ.நா. சபைக்கூட்டத்தில பங்கு பற்றி தமிழ் மக்களின்ர பிரச்சினையைக் கூறியிருக்கின்றார்.

விதானையார்: ஐ.நா. சபைக்கூட்டத்தில மட்டுமல்ல ஜெனிவாவில ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவைக் கூட்டத்திலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்டு எங்கட பிரச்சினைகளை சர்வ தேசத்திற்குத் தெளிவாக்கூறுகிறவர்.

கங்காணி: எங்கட மக்களும் இவற்றைக் கவனிக்க வேணும். தமிழ்மக்களின்ர பிரச்சினையை ஐ.நா. சபையில எடுத்துக்கூறுவதென்பது முக்கியமான விடயம். அதை தம்பி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேர்த்தியாகச் செய்கிறார்.

மூப்பர்: எங்களுக்கு நன்மை செய்கிறவர்களைப் பொதுவாக எங்களுக்குத் தெரிகிறதில்லைத்தானே!

வாத்தியார்: என்ன செய்யிறது. ஏமாற்றுக்காரர்கள் எங்களை ஏமாற்றிக் கொண்டிருக்கினம். எல்லாம் தாங்கள்தான் வெட்டி விழுத்துகிறதாகக் கதைப்பினம். அதைச் சனங்களும் நம்பிக் கொள்ளுகினம்.

விதானையார்: எங்கட மக்கள் எண்டைக்கு உண்மைகளை கண்டறிகினமோ அண்டைக்குத்தான் எங்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

சாத்திரியார்: உண்மைதான் விதானை யார். புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பில எங்கட சம்பந்தர் ஐயா அதீத நம்பிக்கை கொண்டுள்ளார்.

பண்டிதர்: புதிய அரசியலமைப்புச் சீர்திருத்தம் எங்களுக்கு ஏதேனும் தருமா? என்பதைக் காலம் சொல்லும்தானே. அதற்காக இலங்கை ஒரே நாடு, ஒற்றையாட்சி, ஒருமித்த நாடு என்று ஒன்றைப் பலவாறு வலியுறுத்திக்கூற வேண்டிய தேவையில்லை. போரால் பாதிக்கப்பட்டது நாங்கள். எங்களுக்கு தீர்வு தந்தே ஆகவேணும். தீர்வு இல்லை எண்டால் சர்வதேசத்திட்ட முறையீடு செய்வம் எண்டு அதட்டவேணும். இதை விட்டிட்டு...

வாத்தியார்: என்ன செய்வம் ஒரே நாடு, ஒற்றையாட்சி, ஒருமித்த நாடு என்று கூறினால் சிங்களவர் மசிவினம் எண்டு சம்பந்தர் ஐயா நினைக்கிறார் போல.

விதானையார்: வயது போன நேரத்தில இப்படியொரு கதி. இம்...

விதானையார் இவ்வாறு கூற ஆலடிப்பிள்ளையார் கோயில் மணியும் ஒலிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

அன்பு வாசகர்களே! ஆலடியில் அலசக் கூடிய சம்பவங்கள், விடயங்களை அனுப்பி வையுங்கள்.

கனதி உணர்ந்து இவ் விடத்தில் வெளியிடப்படும். (ஆ-ர்)

ஆதிநந்தன்

இல்லாத ஒன்றில் எல்லாம் இருக்குமா?

ஏமாற்றுப் பேர் வழிகளும் காட்டிக் கொடுப்பவர்களும் அன்றுமுதல் இன்று வரை இருக்கவே செய்கின்றனர்.

மனச்சாட்சி மரத்து விட்டதால் நீதி எது, அநீதி எது என்பது தெரியாமல் போய்விடும். மனச்சாட்சி மரத்துப்போனவர்கள் பொறுப்பான பதவிகளில் இருந்து விட்டால் எல்லாம் அம்போ தான்.

அறம் அவரை தண்டிக்கும் என்பதெல்லாம் பிரயோசனமற்றவைதான். அநீதி செய்பவர்களால் அப்பாவிகள் பாதிக்கப்பட்டு விடுகின்றனரல்லவா!

யேசு பிரானோடு கூட இருந்த யூதாஸ் யேசுபிரானைக் காட்டிக் கொடுத்தார். வெள்ளிக்காசுக்கு ஆசைப்பட்ட யூதாசால் தேவமகன் சிலுவையில் அறையப்பட்டார். வேதனையும் வலியும் அவரைத் தாக்கிக் கொண்டன.

தன் தவறுக்காக யூதாஸ் தன்னை வருத்திக் கொண்டாராயினும் அது யேசு பிரான் பட்ட வலிக்கு நிவாரணமாகாதல்லவா?

ஆக, கெடுதி செய்பவர்கள், பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மையாயினும் அந்தப் பாதிப்பு நல்லவர்களை வதைத்துவிடும் போது இழப்புகள், துன்பங்கள் தீரமுடியாதவையாகின்றன.

இந்த நிலைமைதான் ஈழத்தமிழ் மக்களுக்கும் உரியதாயிற்று. தமிழ்மக்களின் அரசியல் தலைமையாகட்டும் ஆயுதப் போராட்டக்குழுக்கள் ஆகட்டும் அனைவரும் தமிழ் மக்களின் விருப்புக்களை, தமிழ்மக்களின் கருத்துக்களை அறிந்து செயற்படவில்லை. தமிழ்மக்களின் விருப்புக்களை, அவர்களின் ஆலோசனைகளைக் கேட்டுச் செயற்படவில்லை. மாறாக தாம் தாம் என்ன நிலைப்பாட்டைக்

கொண்டிருந்தார்களோ அதுவே முற்று முழுவதுமாகச் சரி என்று கருதிச் செயற்பட்டனர்.

இதனால் இன்றைய நிலைமை எப்படியாகவுள்ளதென்பதை நாம் சொல்லி யாரும் தெரிந்து கொள்ளவேண்டிய தேவை இருக்காது எனலாம். தமிழ் மக்களின் அரசியல் தலைமை என்று தங்களை அடையாளப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது தமிழரசுக் கட்சியின் ஆதிக்கத்திற்குள் அகப்பட்டுள்ளது.

ஒரு கூட்டமைப்பாக- தமிழ்மக்களின் ஒற்றுமையின் பிரதிபலிப்பாகக் காட்டப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சின்னாபின்னப்படுத்திய போது நிலைமை மோசமாகிறது என்பதை தமிழ்மக்கள் உணர்ந்திருப்பர்.

தமிழ்மக்களுக்கான உரிமை விடயத்தில் உறுதியாகவும் இறுக்கமாகவும் இருக்க வேண்டுமாக இருந்தால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலமாக வைத்திருப்பது தவிர்க்கமுடியாததாக இருந்திருக்கும்.

ஆனால் கூட்டமைப்பின் பலம் என்பதைவிட, இலங்கைத் தமிழ்ரசுக் கட்சியை நிலைநிறுத்தி அதனூடாக தமது அரசியல் சீவியத்தை நடத்துவதே தமிழரசுக் கட்சித் தலைமையின் நோக்கமாக இருந்தது.

இதனைச் செய்வதற்காக அவர்கள் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர். இந்த இணைவு தமிழ்மக்களின் உரிமைக்கானது அல்ல. மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருக்கக்கூடிய ஏனைய கட்சிகளை ஓரங்கட்டவும் அந்தக் கட்சிகள் கூட்டமைப்பு என்று கூறினால் அவற்றை வலுக்குறைப்புச் செய்வதற்குமானது என்ற உண்மையை தமிழ்மக்கள் இப்போதாவது புரிந்து கொண்டிருப்பர்.

இனப்பிரச்சினைக்கான

புதிய அரசியல் சீர்திருத்தம் தமிழருக்கு தரப்போவது என்ன?

தீர்வு விடயத்தில் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன என்பது மறுக்க முடியாத உண்மை.

ஏலவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பில் பல தடைகளைப் போட்டவர். சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த போது கொண்டுவரப்பட்ட இடைக்கால அரசியல் தீர்வுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் வைத்து தீயிட்டுக் கொளுத்தி சண்டப் பிரசண்டம் செய்த தரப்போடு நின்றவர். எனவே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குரிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதெல்லாம் அதற்குக் குந்தகம் செய்த ஒருவர் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு உதவுவார் என எதிர்பார்ப்பது ஏற்புடையதன்று.

ஆக, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களே இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் எனக் கூறுகின்ற புதியவர். ஆகையால் அவருக்கொரு சந்தர்ப்பம் கொடுக்கவேண்டும் என்பதில் தமிழ்மக்கள் சாதகமான நினைப்பையே கொண்டுள்ளனர்.

இருந்தும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குள் இருக்கக்கூடிய ஒரு சிலர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைப் புறந்தள் ளினார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனான நட்பை மேம்படுத்துவதனூடாக எதிர்காலத்தில் ஒரு பலமான ஒரு அமைச்சுப் பதவியைப் பெறுவது நோக்கமாக இருக்கலாம்.

எது எவ்வாறாயினும் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உறவை ஓரங்கட்டியமை மிகமோசமான செயலாகும். இச்செயல் தமிழ்மக்களை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி மைத்திரிக்கு தீராத கோபத்தை ஏற்படுத்தியது என்று கூறுவதில் தவறில்லை.

தமிழ்மக்களின் உரிமையைப் பெறுவதற்காக ஆட்சியாளர்களுடன் இணைந்து செல்வதுதான் தமிழ் அரசியல் தலைமையின் நோக்கம் என்றால் அவர்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் சமமான முறையில் உறவுகளைப் பேணியிருக்கவேண்டும்.

இதைவிடுத்து பிரதமர் ரணிலுடன் மட்டும் நெருக்கமான உறவை ஏற்படுத்துவதென்பது அரசியல் சுய இலாபத்திற்கானதேயன்றி வேறில்லை.

எது எவ்வாறாயினும் 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நிறைவேற்ற முடியாமல் தத்தளித்துப் போன ஆட்சியாளர்களை காப்பாற்றுவதில் தமிழரசுக் கட்சித் தலைமை கடுமையாகப் பாடுபடுகிறது.

மாகாண சபைத் தேர்தல் திருத்த சட்டமூலத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றுவதன் பின்னணியில் தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் கடுமையாகப் பாடுபட்டதாகக் கேள்வி. பரவாயில்லை. ஆட்சியைக் காப்பாற்றுவதற்கு உதவி செய்தால், அதனால் தமிழர்களுக்கு என்ன நன்மை என்று கேட்பதும் அவசியமல்லவா? அட, என்ன நன்மையா? எதுவும் இல்லாத ஒன்றில் எல்லாம் இருப்பது போல காட்டிக் கொள்ளும் வகையில் அரசியலமைப்புத் திருத்தத்தின் இடைக்கால வரைவு வெளியாகியிருக்கிறதே இது போதாதா?

போதும் போதும் தொடர்ந்து என்ன நடக்கப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்த்தால் எல்லாம் தெரியவரும்.

ஹாய் குட்டீஸ்!
எமது சிறுவர் அரங்கம் பகுதியில் உங்கள் ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்றால் உங்கள் சுய ஆக்கங்களை அனுப்பி வையுங்கள்.

குழந்தையின் குறும்பு

அக்பர் சக்கரவர்த்தி சபையில் வந்து, தமது சிம்மாசனத்தில் அமர்ந்தார்.

அமைச்சர், பிரதானிகள் யாவரும் சக்கரவர்த்தியை வணங்கிவிட்டு அவரவர் இருக்கைகளில் அமர்ந்தனர்.

ஆனால் பீர்பால் மட்டும் வரவில்லை. அவருடைய ஆசனம் காலியாக இருந்தது. அக்பரின் பார்வை அங்கே சென்றது. பீர்பால் காணப்படாமையால் அக்பருக்கு உற்சாகம் இல்லை. சிறிது நேரம் பொறுத்திருந்தார். அப்போழுதும் பீர்பால் வரவில்லை.

ஒரு சேவகனை பீர்பால் இல்லத்துக்கு அனுப்பி அவரை அழைத்து வரும்படி உத்தரவிட்டார் அக்பர்.

'இதோ வருகிறேன்' எனச் சொல்லி அனுப்பினார் பீர்பால்.

நேரம் கடந்தது. ஆனால் அவரோ வரவில்லை.

மறுபடியும் சேவகனை அனுப்பிவைத்தார் அரசர்.

முதலில் கூறியபடியே, 'இதோ வருகிறேன்' எனக் கூறினார் பீர்பால்.

ஒரு மணி நேரம் கடந்தது!

சபையில் வீற்றிருந்தவர்கள் பலதிறத்தினர் பீர்பாலை விரும்பாத பொறாமைக்காரர்களும் அங்கே இருந்தனர். அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்.

சக்கரவர்த்தி இருமுறை கூப்பிட்டு அனுப்பியும்கூட அவர் வரவில்லையே, அவருக்கு எவ்வளவு கர்வம்' எனக் கூறி தூபம் போட்டு அக்பருக்குக் கோபத்தை உண்டாக்கத் தொடங்கினர்.

பலரும் சொன்னவுடன் உள்ளமையிலேயே அக்பருக்குக் கோபம் பொங்கியது.

பீர்பாலைக் கைது செய்து கொண்டு வரும்படி சேவகர்களை அனுப்பினார் அக்பர்.

(தொடரும்)

பொது அறிவு

1. இலங்கையில் மிகப் பெரிய காடு எது?
சிங்கராஜவனம்

2. கூடியளவு நெல் பயிரிடப்படும் மாவட்டம் எது?
குருநாகல்

3. இலங்கையில் உயரமான பள்ளத்தாக்கு எது?
ஹற்றன்

4. இலங்கையில் உயரமான மலை எது?
பீதுருதாலகால மலை

5. இலங்கையில் தொல்பொருள், புராதன பொருட்கள் காணப்படும் இடம் எது?
அநுராதபுரம்

6. இலங்கையில் நீளமான மாகாணம் எது?
வடக்கு

7. இலங்கையில் பெரிய தீவு எது?
தலை மன்னார்

8. கூடிய காலம் உயிர் வாழும் உயிரினம் எது?
ஆமை

9. இலங்கையில் பிறீமா மா தொழிற்சாலை எங்கு உள்ளது?
திருகோணமலை

10. இலங்கையில் கட்டிப்பால் தொழிற்சாலை எங்கு உள்ளது?
பொலநறுவை

வா.சாருஜா
ஒட்டுசுட்டான்.

சிகிரியா



இலங்கையின் இணையற்ற கலைப் பாரம்பரியத்தின் சின்னமாகக் கருதப்படுகிறது. இது மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ள நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ளது. 1144 அடி உயரமான இக்குன்றினுள் அழகிய வேலைப்பாடுகளுடன் கூடிய சித்திரங்கள் பல உள்ளன. இவை 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே இக்கோட்டையை முதலாம் காசியப்பன் (கி.பி. 477-495) அமைத்தான். கோட்டையை சுற்றி அகழியும் கட்டப்பட்டுள்ளது. சிகிரியா குன்றானது தொல்லியல் நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) பாதுகாக்கப்படவேண்டிய உலக பாரம்பரியக் களமாக அறிவிக்கப்பட்டுள்ளது

காசியப்பன் தாதுசேன மன்னனின் 2 ஆவது மனைவிக்கு பிறந்த மகனாவான். தாதுசேனனுக்குப் பின் பட்டத்து இராணிக்குப் பிறந்த மூத்தமகனுக்கே அரசுஉரிமையுண்டு. எனினும் காசியப்பன் தந்தையைக் கொன்று, சிகிரியாவில் கோட்டை அமைத்து அரசாட்சி எய்தினான். இக் குகையினுள் சுவரோவியங்கள் இயற்கை வர்ணங்கள் கொண்டு வரையப்பட்ட பல சித்திரங்கள் காணப்படுகின்றன. இவைகளில் பல இன்னும் அழியாமல் அழகாகக் காட்சி தருகின்றது. சிலர் கையில் தட்டை ஏந்தியவாறும், சிலர் மலர்க் கொத்தை ஏந்தியவாறும், தனித்தும், கூட்டமாகவும் இருக்குமாறு ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

விடுகதைகள்

1. இடி இடிக்கும், மின்னல் மின்னும், மழை பெய்யாது. அது என்ன?

2. உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம்- அது என்ன?

3. ஆயிரம் பேர் அணி வகுத்தாலும் ஆரவாரம் இராது. அவர்கள் யார்?

4. உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம். நான் யார்?

5. அடி மலர்ந்து நுனி மலராத பூ எது?

6. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன?

7. காக்கை போல கறுப்பானது, கையால் தொட்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் அது என்ன?

8. தாடிக்காரன், மீசைக்காரன், கோயிலுக்குப் போனால் வெள்ளைக்காரன். அது என்ன?

9. சிவப்புப் பைக்குள் சில்லறை கொட்டிக் கிடக்குது அது என்ன?

10. காற்றிலே பறக்கும் கண்ணாடி குண்டு, தொட்டுவிட்டால் பார்க்க முடியாது அது என்ன?

விடைகள்:
1. பட்டாசு. 2. தராசு. 3. எறும்புக்கூட்டம். 4. அஞ்சல் பெட்டி 5. வாழைப்பூ 6. பேனா 7. நாவல்பழம் 8. தேங்காய். 9. காய்ந்த மிளகாய் 10. நீர்க்குமிழி.

பழமொழிகள்

1. நீரில்லா நாடு நிலவில்லா முற்றம்
2. நீரும் கொல்லும், நெருப்பும் கொல்லும்
3. நீரும் பாசியும் கலந்தாற்போல
4. நீரை அடித்தால் நீர் விலகுமா?
5. நீரோட்டத்தில் தெப்பம் செல்லும் தன்மை போல
6. நீர் ஆழம் கண்டாலும் நெஞ்சு ஆழம் காணப்படாது
7. நீர் உயர நெல் உயரும்
8. நீர் உள்ள மட்டும் மீன் குஞ்சு துள்ளும்
9. நீர் உள்ள மட்டும் மீன் துள்ளும், நீர் போனால் மீன் என்ன துள்ளுமா?
10. நீர் என்று சொன்னால் நெருப்பு அவியுமா?
11. நீர் மேல் எழுத்துபோல தண்ணீரிலே விளைந்த உப்பு தண்ணீரிலே கரைய வேண்டும்.
12. தண்ணீரில் இருக்கிற தவளை நீர் குடித்ததைக் கண்டது யார்? குடியாததைக் கண்டது யார்?
13. தண்ணீரில் இருக்கிற தவளையை தரையில் விட்டாற் போல.

வியாசர் பதில்கள்

அரசியல், சினிமா, பொழுதுபோக்கு கேள்விகளை அனுப்பிவையுங்கள்

வியாசர் பதில்கள்,
இல.3,2 ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

SMS (குறுந்தகவல்)
021 567 1532

தேவதைகள் உண்மை என்றால் மோகினியும் உண்மை தானே?

புதிய அரசியல் அமைப்பிற்கு கூட்டமைப்பு ஆதரவாமே?

வியாசரே நீங்கள் ஒரு தொழிலதிபர் ஆனால்?

யுபா — கரவெட்டி

M தமிழர் எதிர்பார்க்கும் தீர்வுத் திட்டத்தை கூட்டமைப்பால் பெற்றுத்தர முடியுமா?

ஒரு படத்தில் வடிவேலு யாரிடமோ நல்ல அடிவாங்கி சட்டை எல்லாம் கிழிந்து இரத்தம் சொட்ட சொட்ட சோர்ந்து போய் இருப்பார்.

அந்த நேரம் வீதியால் சென்றவர்களில் ஒருவர் கூறுவார் "அடி கொடுத்த கைப்பிள்ளைக்கே இவ்வளவு சேதமென்றால் அடிவாங்கினவன் நிலை எண்ணிப் பார்த்தாயா?"என அதிர்ந்து போன வடிவேலு தன் சகபாடிகளிடம் கேட்பார் "இன்னுமாடா இந்த உலகம் நம்மள நம்பிட்டிருக்கு?'' சும்மா போங்கைய்யா கடுப்பேத்தாமல்.

நந்தா — விசுவமடு

M வியாசரே நீங்கள் ஒரு தொழிலதிபர் ஆனால்?

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வரும் வாகனப் போமிற்றை குறைந்த விலைக்கு அதாவது ஒரு கோடிக்கு வாங்கி பத்து கோடி மதிப்புள்ள அதி உயர் சொகுசு வாகனம் ஒன்றை கொள்வனவு செய்து அதில் பந்தா காட்டுவேன்.

சுதன் — குப்பிளான்

M புதிய அரசியல் அமைப்பிற்கு கூட்டமைப்பு ஆதரவாமே?

புதிய அரசு அமைந்தபிறகு எதற்கு கூட்டமைப்பு எதிர்த்தது என்று கூற முடியுமா? பெயரளவில் எதிர்க்கட்சி அவ்வளவுதான்.

பரமன் — இயக்கச்சி

M தாகம் தீர தண்ணீர் குடித்தபின் மறுபடியும் தண்ணீர் விடாய்கிறதே?

அப்படியென்றால் அது சலரோகப் பிளான். உடனடியாக வைத்தியரை நாடவும்.

நித்தி — அச்சுவேலி

M வியாசரே உங்கள் பதில்கள் ஒரு விதமாக இருக்கின்றதே?

வித்மானவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு ஒரு விதமாக பதில் எழுதினால் தானே நல்ல பதமாக இருக்கும். என்ன நான் சொல்லுறது சரி தானே நித்தி.

நிலக்ஷ் — இருபாலை

M தேவதைகள் உண்மை என்றால் மோகினியும் உண்மை தானே?

உண்மை. மோகினிகள் தான் முகப்பூச்சுப் பூசி தேவதைகளாய்த் திரிகின்றனர்.

கவனம். எதற்கும் கொஞ்சம் சுரண்டிப் பார்த்து விட்டு அடுத்த கட்டத்துக்குச் செல்லுங்கள்.

இந்து — யாழ்ப்பாணம்

M இப்போதைய காலகட்டத்தில் பெண்களின் பாதுகாப்பு என்பது?

என்னைப் பொறுத்தவரை பெண்களுக்கான பாதுகாப்பு என்பது பெண்கள் கைகளில் தான் உண்டு என்பதில் உறுதியாக உள்ளேன். எல்லாத் துறைகளிலும் சாதிக்கும் பெண்கள் இன்னும் தாம் பாதுகாப்பு இல்லாமல் வாழ்கின்றோம் என்ற எண்ணத்தை தூக்கி எறிந்து விட்டு எழுந்தால் எல்லாம் சரி வரும்.

தமிழ் — இளவாலை

M வியாசகர நீங்கள் எப்போதாவது கஷ்டப் பட்டதுண்டா?

தெல்லிப்பழை வைத்தியசாலையில் மருந்தெடுக்க நின்ற சுமார் 65 வயது மதிக்கத்தக்க ஒரு முதியவர் சொன்ன வார்த்தைகள்.

7 மணிக்கு டொக்டர் பார்த்துவிட்டார். 8 மணிக்குத் தான் மருந்து கொடுக்க வருவினம். வருத்தக்கார மனிசரை இன்னும் வருத்தக்காரர் ஆக்கிற வேலை இது.

ஒரு மணித்தியாலம் நிண்டான் நிலையில வரிசையில நிண்டால் இருக்கிற வருத்தம் கூடுமோ? குறையுமோ? எல்லாம் கடவுளுக்குத் தான் வெளிச்சம் (பெருமூச்சு).

மாலா — கோண்டாவில்

M எதற்கெடுத்தாலும் கோபப்படுவது சரியா?

எதை எடுத்தாலும் கோபப்படும் படி நடந்து விட்டு எதற்கெடுத்தாலும் கோபப்படுகிறார் என்பது சரியில்லை. ஆனால் அதிக கோபம் மனிதன் ஆயுளைக் குறைக்கும் என்கிறார்கள். கோபம் வரும் போது தண்ணீர் குடியுங்கள் என்கிறார்கள். அந்தத் தண்ணீருக்குள்ளேயே ஒயில் மிதந்தால் என்ன செய்ய முடியும்.

கதிர் — கொடிகாமம்

M எப்படி இருக்கிறது புதிய அரசியல் அமைப்பு?

எப்படி இருக்கிறது என்பதைவிட என்ன இருக்கிறது என்று கேளுங்கள். 2015,2016, 2017இல் இந்தா வருகிறது, அந்தா வருகிறது தீர்வு என்று கூக்குரல் போட்டவர்களிடம் ஐயா அதில் என்ன இருக்கிறது? என்று கேட்க வேண்டிய கேள்வி இது.

தனு — அல்வாய்

M வியாசரே கல்யாணமாகிய ஜோடிகளைப் பார்த்து கண்கலங்கியதுண்டா?

நிறையத் தடவை கண்கலங்கி இருக்கிறேன். ஆழம்தெரியாமல் காலை விடுகிறான் ஒரு அப்பாவி. இனி அவன் கதி அந்தோ கதிதான் என்று.

சொந்தச் செலவில் சூனியம் வைப்பதற்குப் பேர்தான் திருமணம்.

ஜைன் — யாழ்ப்பாணம்

M அன்பு-காதல் இரண்டிற்கும் இடையில் உள்ள ஒற்றுமை?

இரண்டுமே இருப்பதைவிட அதிகமாக எதிர் பார்க்கும். இருந்தாலும் இறுதியில் துரோகத்தால் தோற்றுப்போகும்.

ரஞ்சன் — சுண்டுக்குளி

M கடன் வாங்கிவிட்டு தராமல் ஏமாற்றுகிறார்களே?

கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கி நின்றான் இலங்கை வேந்தன் என்பது பழைய கதை. கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கி நின்றான் இலங்கை வேந்தன் என்பது புதுக்கதை.

நளாஜினி — சுழிபுரம்

M நீங்கள் ஜனாதிபதியானால்?

இந்தக் கொமடிக்கெல்லாம் நான் சிரிக்க மாட்டேன். என்னை சிரிக்க வைக்க வேண்டும் என்றால் புதிதாக ஏதும் நகைச்சுவைக் கதைகளைச் சொல்ல முயற்சி சொல்லுங்கள்.

ராஜ் – கம்பர்மலை கலையரசன் – யாழ்ப்பாணம்

M விஜயின் மெர்சல் டீசர் பற்றி?

விஜய், அஜித் ரசிகர்களின் சண்டை இணையத்தில் தான் பலமாக நடக்கிறது. அந்தவகையில் ஒருவரை ஒருவர் முந்த அவர்களின் ரசிகர்கள் முண்டியடித்துக் கொள்கிறார்கள். அதிகம் பேர் பார்த்த சாதனையாக விவேகம் இருக்க, அதை சர்வசாதரணமாக மெர்சல் தகர்த்தெறிந்துவிட்டது. இதை முறியடிக்க அஜித் ரசிகர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். எது எப்படியோ Youtube ற்கு நல்ல இலாபம்.

கவிதைக் கலசம்

அன்புச் சகோதரன் திலீபனுக்கு

தமிழ் மக்களுக்காக
நீதிகேட்டு போராடி– தன்
உயிரை மாய்த்துக்கொண்ட
தியாகத் திலீபனே
தியாகத் தீபமாய்– தமிழ்
மக்களின் மனதிலே
அணையாத தீபத்தை ஏற்றிவிட்டாய்– தமிழ்
மண்ணின் மைந்தனாகவும்
மாறிவிட்டாய்– தமிழ்
மக்களின் விடிவுக்காக
நீர் கூட அருந்தாது
பன்னிரெண்டு நாட்கள் போராடிய– உன்
உயிரை மாய்த்துக்கொண்டாய்– உன்
வீரச்செயலை மக்களின்
மனமாகிய கல்வெட்டில் அழியாது
பதித்துவிட்டாய்
மீண்டும் ஒரு அகிம்சைப் போராட்டம்
தமிழ் மக்களின் விடிவுக்காக
காத்துள்ளது

பி.கஜதாரணி
யா.இ.ம.க

தலைவன் வேண்டும்!

போர் வடுக்கள் பேர்த்திய மண்ணில்
வேர் விடுத்த விடுதலை விருட்சம்
வீறுகொண்டு விண்ணுற ஓங்க
வீர மைந்தன் விரைவில் வேண்டும்!
நாளைய மண்ணில் நந்தமிழ் தழைக்க
கலைத்த மனங்கள் களிப்பினில் மூழ்க
கனவு தேசம் கண்களில் விரியக்
காட்டிச் செல்லும் தலைவன் வேண்டும்!
தீமை தடுக்கும் தீர்க்க தரிசனம்
தூய்மையே கொண்ட தாய்மை யிதயம்
பிளவுகள் போக்கிப் பிணித்து வைக்கும்
வித்தகத் தலைவன் விளங்கிட வேண்டும்!
நலிந்த மனங்களில் நம்பிக்கையொளி பாய்ச்சி
விரிந்த உலகின் விருப்பையும் பெற்று
அகிம்சை வழியில் ஆணை தொடர
தியாகத் தலைலவன் விளங்கிட வேண்டும்!

இரா.ஜெயக்குமார்

சுதந்திரப் பயணத்தை நோக்கி...

சுதந்திரக் காற்றினை
சுவாசியுங்கள் என்று
சுற்றிவேலித் தடை போடுதல்
சுதந்திரமா?
கருவறைதான் தொடங்கி
கல்லறை வரை
சுதந்திரப் பேச்சு
ஜனநாயக நாட்டினில்
ஜனங்களின் பயனற்ற பேச்சாப்
ஜனனமாகுதல் சுதந்திரமா?
சிறகை விரித்துப் பறக்கும்
சின்னஞ்சிறிய சிட்டுக்களும் நம்மை
சிறகினை ஒடித்து
சிறைப்படுத்துதல் சுதந்திரமா?
பெண் கல்வியை வெறுத்து
பேதமை காட்டி
மேதைகளாய் வளரவிடாது
பேதைகளாக்குவது சுதந்திரமா?
சுதந்திரத்தைத் தேடும்
சுதந்திரப் பறவைகளாய்
சுபீட்சமான வாழ்வின்
சுதந்திரப் பயணத்தை நோக்கி

பீ.மேரிசிந்துஜா
மிருசுவில்

வரும் ஆனால் வராது

அது ஒரு தனித்த காடு
அங்கு ஒருவன்
நிர்க்கதியாய் அலைகின்றான்

பார்க்கும் இடமெங்கும்
பச்சைப் பசேல்– ஆனால்
பரிதவிக்கிறான் அவன்

நாக்கு வரள்கிறது
நாற்திசையும் ஓடுகிறான்
தாகம் தீர்க்க நீரில்லை

காக்கும் கடவுளை
கத்தி அழைக்கிறான்
காடு அதிர்கிறது

கடவுள் வரவில்லை
அவன் ஓலக்குரல் கேட்டு
கொடிய மிருகங்கள் கூடின

ஊளைகள் உறுமல்கள்
கத்தல்கள் கர்ச்சிப்புக்கள்
அவன் காதைப் பிளந்தன

தேகம் நடுங்குகிறான்
தேம்பி அழுகிறான்
பாவம் அவன்...

காப்பில் விட்டவன் போல்தான்
பாவித்தமிழினமும்
பதைபதைக்கிறது

ஒன்றும் இல்லாததை
எல்லாம் இருக்கென்று
எமக்கு நாசமறுத்தவர் யார்?

இப்போ கண்டும் காணததாய்
கதை அளக்கிறார்
வடிவேலு பாணியில்

மாவை. நா.கஜேந்திரன்

மௌனத்தின் தேடல்– 369

வாலிபக் கிழவி

முற்பிறப்பு நினைவு
இப்பிறப்பில் தொடர
மண்டையோட்டுடன்
மகிழும் மூதாட்டியே!
கடந்த கால நினைவு
கண்ணிலே வந்து மின்ன
மண்டையோடு– என்
மணாளனுடையது என்ற
தோற்ற மாயையால்
நாக்கை நீட்டி
நளினம் செய்கிறாய்
வயது கடந்த
வாலிபக் கிழவி

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி.

தாய்மை

பெற்ற தாய் மறந்தா
போனாய் பிள்ளாய்
அம்மை பிதிர்க்கடன்
முடித்தா போனாய்
உற்றவர் மறந்தா
போனாய் குழந்தாய்
ஊரதே கலைத்தா
போனாய் மகனே
மற்றவர் பார்வைக்கெல்லாம்
நானோர் மனநோயாளி
பெற்ற என் பிள்ளைச் செல்வ
பைத்தியம் தான்டா நானே!

யாழ் வாகீஷ்
ஒட்டுசுட்டான்

நீங்காத நினைவுகளுடன்

போரின் வடுக்களினால்
போம் பொழுதினில்
தன் தலை மகவை
இழந்த அன்னை
தரணி முழுவதும்
தன் மகவின்
நீங்காத நினைவுகளுடன்
எலும்புக்கூட்டினை
ஏக்கத்துடன் தழுவுகின்ற
தருணமதில்...

பீ.மேரிசிந்துஜா
மிருசுவில்

பணமும் பிணமும்

பணம் என்றால்
பிணமும் வாயைத் திறக்கும்
பசி வந்தால்
பிணத்தையும் வாய் நனைக்கும்
பசியைப் பாராத மனிதன்
பணத்தைச் சேமிக்கிறான்
பசியைப் பார்த்த மனிதனே
பணத்தை யாசிக்கிறான்
பணத்தை நேசிக்கும் மனிதன்
பிறர் பசியை யோசிப்பதில்லை
பசியை யோசிக்கும் மனிதன்
பணம் என யோசிப்பதில்லை

சி.அபிராமி
கந்தரோடை

அடையாளம் தெரிந்ததே

பல காலம் உன்னைத் தேடி
பல வருடம் காத்திருந்து
விசரியாய் பைத்தியக்காரியாய்
தான் அலைந்து திரிந்தேன்
இன்று உன் மண்டை
ஓட்டில் அடையாளம்
கண்டு கொண்டேன்
இனி என்ன செய்வது?
மண்டை ஓட்டை வருடுகின்றேன்

பா.கலாதேவி
சண்டிலிப்பாய் மேற்கு

கள்ளக்குழி

காணாமல் போன மகனை
இன்றுதான் தந்நார்கள்
நாவின் பரிசத்தால்
முத்தமிடு யார்க்கிறேன்–அவன்
கள்ளக்குழிதானா என்று

இணுவில் வாகீசன்

மண்டையோடு

இந்தத் தமிழ்த்தாய் காணாமல் போன
தன் அன்பு மகனை கண்ணீரோடு
எங்கெங்கோ தேடி அலைந்தாள்
இறுதியில் அவளுக்கு கிடைத்தது
செம்மணி மனிதப்புதைகுழியிலிருந்து
அவனின் இந்த மண்டையோடு மட்டுமே

ஈ.ஜெயரூபன், பருத்தித்துறை

வேடதாரியாகாதீர்கள்

நம்பிக்கைதான் வாழ்க்கை
என்பதை அறிந்து தானே!
நம்பிக்கையோடு...
உங்களோடு இணைந்தேன்
நம்பிக்கையோடு இருக்கும்
என்னையேன் மாற்று
வேடம்பூண்டு பயமுறுத்த
வந்தீர்கள், என் அன்பானவரே!
சோதனை வேதனையை
விதைத்தாலும் விதைத்துவிடும்
என்பதைப் புரிந்து...
நம்பிக்கையோடு எம்
வாழ்வில் என்றும்
இனிமை பூத்துக்குலுங்க...
ஒருநாளும் வேடதாரியாகாதீர்கள்

வ.ச.செல்வராசா
திருநாவலூர்

மௌனத்தின் தேடல் –370

அன்பு வாசகர்களே !

உங்கள் எண்ணத்தில் தோன்றும் கவிதைகள் மற்றும் வியாசர் பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 27.09.2017ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

புதுக்கதை



சிறுகதை

பஞ்சுக் கூட்டங்களாக வானத்தில் முகில் கூட்டங்கள் அணிவகுத்துக் காட்சி தருவது போல் மாணவர்களின் காலை நேரப் பிரார்த்தனைக்கான அணி வகுப்புக் காணப்பட்டது. காலை நேரச் சூரியனின் கதிர்கள் உடலை மென்மை ாகவும் இதமாகவும் வருடிச் செல்லும் நேரம் அந்த நேரம் மனதிற்கு ஒருவித இன்ப உணர்வை புத்துயிராய் வழங்கியது. தேவாரம் இசைக்க வழமைபோல் மயூரனுடன் சந்தோஷ், விமல் மற்றும் மாணவர்கள் ஒருசிலர். இவர்களில் மயூரன் ஒருவனே தானாக முன்வந்து எதனையும் செய்யும் விருப்பமுடையவன். மற்றவர்கள் அரை குறை மனங்களுடன் அதிபர், ஆசிரியர்களின் வற்புறுத்தலுக்குப் பணிந்து தேவாரம்பாட முன்வருவார்கள் மயூரன்சங்கீதத்தில் திறமையானவன். மற்றவர்களை வசீகரிக்கக்கூடிய இனிமையான குரலுடையவன்.

மாணவர்கள் அங்கு ஒலிபரப்பப்பட்ட இசைக்கேற்றவாறு அங்கங்களை அசைத்து வளைத்துக்கொண்டனர். அவர்களது நிகழ்வு முடிந்ததும் அதிபர் தனது உரையை கண்டிப்பான சில அறிவுறுத்தல்களோடு வழங்கினார்.

"பிள்ளையளை நாங்கள் எல்லாத்துக்கும் அடிபோட்டுத்தான் திருத்தவேணுமெண்டில்லை" அருந்தவநாதன் சேர்.

"உங்கடை சித்தாந்தங்களை வேறை எங்கையும் வைச்சுக்கொள்ளுங்கோ! அடி உதவுமாப்போல் அண்ணன் தம்பி உதவமாட்டான். குடுக்கிறமாதிரி குடுத்தாத்தான் திருந்துங்கள்..." மன வெப்பியாரத்தை வார்த்தைகளாக்கினார் தயாபரன் சேர்.

தானுண்டு தன் வேலையுண்டு என எப்போதும் ஒருவித ஒதுங்கல் போக்கில் செயற்படும் மாலினி ரீச்சர் ஒரு இளவயது விதவை. கொடுமையிலும் கொடுமை. இளவயதில் வறுமை, விதவைக் கோலமும் கொடுமையானதே. திருமணமாகி நான்கு தினங்களில் கடைசியாக ஒரு இரவு ஏற்பட்ட மாரடைப்பு கணவனின் உயிரைக் காவு கொண்டது. அந்தகாரமாகியது அவள் எதிர்பார்த்த விடிகாலை. அன்றிலிருந்து அவன் நினைப்பில் அவள் சூன்யப் பிரபஞ்ச பிரஜை.

வள்ளிநாயகிக்கும் தணிகாசலம்பிள்ளைக்கும் ஏகபுத்திரன் அருந்தவநாதன். நீண்ட காலமாக பிள்ளையில்லா ஊழித்தீயில் அலைந்துலைந்து மனம் நொந்திருந்த போது கிடைத்த பிள்ளைச் செல்வம் அருந்தவநாதன்.

அம்மா போட்ட கோட்டிற்குள் உலகம் என்பதில் முழு நம்பிக்கையுடன் வாழ்பவன் அருந்தவநாதன். அப்பா தணிகாசலம்பிள்ளையும் அவரின் மனைவிக்கு அளவிட முடியாத விசுவாசத்துடன் கூடிய அடக்கம். சில சந்தர்ப்பங்களில் தனது இருப்பை இவர் வெளிப்படுத்தத் தயங்குவதில்லை.

" எவ்வளவு காலத்துக்கு பெடியனை வைக்க உழைப்பிக்கப்போறியள்? அவன்ரை மனதுக்குள்ளையும் எவ்வளவு சங்கதியள் அடங்கி முடங்கிப் போய்க் கிடக்குமி?'

வீட்டுக்கு வெளியே போகும்போது இதைப் போல் இன்னும் எத்தனை கேள்விகள் தணிகாசலம்பிள்ளையை துளைத்தெடுக்கும்.

" இஞ்சரும் வெளியிலே வெளிக்கிட்டால் பெடியன்ரை கல்யாணத்தைப் பற்றி ஒருவித்துருவி கேள்வி கேட்பினம். இனிமேல் என்னாட்டை சொல்லப் பதிலில்லை..."

தணிகாசலம்பிள்ளை தயங்கித் தயங்கிச் சொல்லி முடித்தார்.

"அவையாரும் கேட்டால்கேட்டுப் போட்டிருக்கட்டும். எங்களுக்கு எங்கடை காரியம் உரிய நேரத்திலை பாக்கத் தெரியுமெண்டு முகத்திலை படிச்சாப்போல உங்களால் சொல்லேலாதே? உங்களுக்கென்ன மண்டேக்கை ஒண்டுமில்லையே?"சீறிப்பாய்ந்தாள் அவள்.

வள்ளி நாயகிக்கும் மகனின் திருமணத்தை எப்படியாவது நடத்தி முடிக்க வேண்டுமென்ற ஆவலே இருந்தது. ஆனாலும் தனக்குள்ளிருந்த பேராசைகளின் நிமித்தம் சில நிபந்தனைகளின் பட்டியலையும் கொண்டிருந்தாள். கொழுத்த சீதனம், ஆளணி, நிலபுலம் கூடிய குடும்பம், பெண் பேரழகியாகவும் தன் வீட்டோடேயே குடித்தனமும் அமைந்து விட வேண்டுமென்பதுதான் வள்ளிநாயகி யின் நிபந்தனைப்பட்டியல்.

பாடசாலையில் அருந்தவநாதனது வயதை ஒத்தவர்களும் அவர் வயதிற்குக் குறைந்தவர்களும் திருமணமானவர்கள், இடையிடை இவர்களது திருமண நாட்கள் சிற்றுண்டி உபசரிப்புக்கள் மூலம் நடந்தேறும்.

இந்த உபசரிப்புக்களில் பங்குகொள்வது ஆரம்பத்தில் அருந்தவநாதனுக்கு சாதாரணமான விடயமாக இருந்தது. எனினும் காலப் போக்கில் அவைகளில் பங்குகொள்ளும் போது தான் ஏதோவொரு சங்கடத்தில் மாட்டிக் கொண்ட உணர்வில் அகப்பட்டுத் தவிப்பார்.

இந்த நிலைதான் இவனுக்கும். ஸ்ரெலா ரீச்சரின் திருமண விருந்துபசாரம் அன்று பாடசாலை முடிந்ததும் நடந்தது. விருந்துபசாரத்தில் பங்குபற்றியதால் வீட்டிற்குச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது.

" அம்மா இண்டைக்கெனக்கு சாப்பாடு வேண்டாம்"

" ஏன் தம்பி அப்படிச் சொல்றாய்"

"பசிக்கேல்லை"

" ஏன் ஐயா பசிக்கேலை? இண்டைக்கு நல்ல மீன்கறி உனக்குப் பிடிச்ச அரையல் கறி"

" எனக்கொரு அரையலும் வேண்டாம், துவையலும் வேண்டாம்"

" ஏனப்பன் சலிப்போட கதைக்கிறாய்"

"எனக்கு சலிப்புமில்லை வலிப்புமில்லை. உண்மையென்னண்டால் பசிக்கேல்லை. ஸ்கூல்ல ஒரு ரீச்சரின்ரை வெடிங் பார்ட்டி"

இதனைக் கேட்டதும் வள்ளிநாயகி மனதுக்குள் மனச்சாட்சியின் நெருடல்கள். அவளுக்குள் அவளை அறிந்து குற்ற உணர்வொன்று எழுந்து விழுந்து கொண்டது.

கேணியடி தங்கராசா தானே தன் மகளுக்கு மாப்பிள்ளை கேட்டு வந்திருந்தார். மீண்டும் மீண்டும் தன் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார். அவள் இணங்கவில்லை. எந்த வகையிலாவது அவரை அவ்விடத்திலிருந்து பிடுங்க வைக்கவேண்டுமென்று குறியாகவிருந்தாள். பல பொய்க்காரணங்களை முன் வைத்தாள். அவற்றில் ஒன்று தனது மனச்சாட்சிக்கு அப்பாலானது என்று தெரிந்தும் சொல்லிவிட்டாள். அது அவனுக்கு செவ்வாய்க் குற்றம் உள்ளது என்பதே. தங்கராசா வந்த பாதைக்கே திரும்பிவிட்டார்.

"எடியே நீ தாயா? அல்லது பேராசை பிடிச்ச பேயா?

மனக்குமுறலை கொட்டித் தீர்த்தார் தணிகாசலம்பிள்ளை.

தங்கராசா உள்ளூர் புரோக்கர்களில் ஒருவர். அவரின் வாய் வெளியாடாக இன்றுபலருக்கு அருந்தவநாதனின் சாதகம் செவ்வாய்க்குற்றமுடையது எனப் பரவத் தொடங்கியது. இதனால் வள்ளிநாயகி மற்றவர்களிடம் கொடுக்கும் ஜாதகம் பொய்யானது என்ற கதை பரவத் தொடங்கியது. ஆம்! வள்ளியம்மை இன்று ஒரு இரந்த அழுத்த நோயாளி. நோய் அவளைக் கொஞ்சம் கொஞ்சமாக வாட்டி வதைத்தது.

அருந்தவநாதனை அருகில் அழைத்த வாறே பெருமூச்செறிந்து அவன் தலையை வருடி விட்டாள்.

" தம்பி நினைச்சதெல்லாம் உன்ரை நம்மைக்காகத்தான். ஆனால் நிலைமை இப்படியாகுமெண்டு கனவிலையும் நினைக்கேல்லை" கூறிக்கொண்டே விம்மி விம்மி அழுதாள்.

" அம்மா அழாதையுங்கோ. என்ரை அம்மாவை எனக்குத் தெரியும்"தாயின் கண்ணீரைத் துடைத்து முத்தமிட்டான்.

"நான் எப்பவும் உங்கடை விருப்பப்படி தான் நடப்பன்"

"அப்பிடியெண்டால் தான் கேட்கிறதுக்கு நீ சம்மதிப்பியே?"

"நிச்சயமா அதிலையென்ன சந்தேகம்"

" தம்பி உனக்கு ஆரையெண்டாலும் பிடிச்சா கூட்டிக்கொண்டு வா"

வீட்டிலிருப்பதை விட பாடசாலையில் செலவிடுகின்ற வேளைப் பொழுதுகள் அருந்தவநாதனின் கவலையைக் களைகின்ற பொழுதுகளாகவிருந்தது. ஓய்வான நேரங்களில் ஸ்ராப் ரூமை இருக்கும் போது வழமையாக அடுத்த பாடத்திற்கான முன்னாயத்த வேலைகளில் காணப்படுவார். ஆனால் அன்று வழமைக்கு மாறாக ஆழமாக சிந்தனையில் காணப்பட்டார். சோக ரேகைகள் அவரது முகத்தை சூழ்ந்திருந்தன. ஸ்ராப் ரூமைச் சடுதியாகத் தாண்டிய மாலினி ரீச்சரின் பார்வை அருந்தவநாதனின் பக்கம் சாய்ந்தது. எப்போதுமே ஒதுங்கிக் காணப்படுகின்ற மாலினி ரீச்சருக்கு அவரை எதையோ கேட்க வேண்டும் போலிருந்தது.

"என்ன சேர் உலகத்துக் கவலை முழுக்க உங்கடை தலையிலை போல?" எனப் புரிந்தும் புரியாதது போல் கேட்டாள்.

" ஒண்டுமில்லை ரீச்சர்... அது வந்து... அது வந்து... ஒண்டுமில்லை ரீச்சர்"

"நீங்கள் ஒண்டுமில்லை எண்டதிலை கனக்க கிடக்குது சேர்"

"உங்கடை வெடிங் பார்ட்டியை எப்ப தரப் போறியள்?"

"எல்லாம் நடக்கிற நேரத்திலை நடக்கும். இல்லாட்டி இந்த ஜென்மத்திலை அதில்லையாக்கும்"

"உப்பிடி அபசகுணமாய் கதைக்காதையுங்கோ. உங்களுக்கெண்டு ஒரு அதிர்ஷ்டக்காரி எங்கையோ இருப்பாள்"

அடுத்த பாடவேளைக்கான மணி அடித்தது. மாலினி ரீச்சர் அவ்விடத்திலிருந்து விலக எத்தனித்தபோது.

"மாலினி மிஸ் வண் மினிற். பிளீஸ் நான் ஒண்டு கேக்க உங்கடை பெமிசன் கிடைக்குமா?"

வை நொட் தாராளமா கேட்கலாம்.

"நீங்கள் உங்கடை மனசை மாத்திக் கொண்டு புதிசா இன்னொரு வாழ்க்கை வாழலாந்தானே?"

"இனி எனக்கென்ன புதிசா ஒரு வாழ்க்கை நல்லா யோசிச்சுப் பாருங்கோ சேர். இப்ப நான் வாழுற வாழ்க்கையும் ஒரு புது வாழ்க்கை தானே?"

மெதுவாகச் சிரித்தாள். அவளின் சிரிப்பு மனவரட்சியின் சாரீரமாக தெரித்தது.

அவருக்கு மனக்கஷ்டத்தை கொடுத்து விட்டதாக அவள் வேதனைப்பட்டாள். மாலினி தன் கணவனையே நினைத்து வாழ்ந்து கொண்டிருக்கலாம் அல்லது ஊர் வழமைக்கு பயந்து தனது உணர்வுகளுக்கு தானே விலங்கிட்டவளாக இருக்கலாம். அப்படியானால் அவளின் மனதினது ஒரு மூலைக்குள்ளாவது அவளின் ஏக்கம் வெந்தணலாய் வேகிக் கொண்டிருக்கலாம். இப்படி எத்தனை கேள்விகளை தனக்குள் தானே கேட்டுக் கொண்டான்.

அம்மா கூட்டிக்கொண்டு வரச் சொன்ன எனக்குப் பிடிச்ச பெண் ஏன் மாலினி ரீச்சராக இருக்கக்கூடாது?" தனக்குள் தானே கேட்டுக் கொள்கிறான். வெட்கம், பயம், என்பவைகள் அவள் மீது வைத்திருக்கும் பக்தி காரணமாக ஒழிந்து கொண்டது. மனதைத் திடப்படுத்திக்கொண்டு அவளிடம் தன் விருப்பத்தை சொல்ல முற்பட்டான்.

"மாலினி! எனக்கு ஒரு கெல்ப் உங்களிட்டை எதிர்பார்க்கிறன்"

" வை நொட் என்னால முடிஞ்சால் நிச்சயம் செய்வன்"

" நான் ஒருத்தியை நேசிக்கிறன். நீங்கள் அவவிட்டை என்ரை விருப்பத்தை சொல்லி அவ எனக்கு கிடைக்க உதவவேணும்"

"எங்கை இருக்கிறா? சொல்லுங்கோ"

"உங்களுக்குள்ள உங்கடை மனச்சாட்சியா"

அவளுக்கு ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாத தடுமாற்றம். அவளின் மௌனத்திற்குள் ஒரு பெரிய பூகம்பத்தின் அடக்கம். மறுபக்கம் அவன் மீது ஏதோவொரு பச்சாதாபம். நீண்ட நேரமாக தலைகுனிந்தவளாகக் காணப்பட்டவள் இப்பொழுது தலையை நிமிர்த்திப் பார்க்கிறாள். அவன் எங்கோ எங்கோ வெறித் துப் பார்த்தபடியிருந்தான்.

" மிஸ்ரர் அருந்தவநாதன்!" அடக்கமாக அழைத்தாள். ஆனால் அவனுக்கு அந்தரமாகவிருந்தது. அவளின் பார்வை தெளிவானதாகவும் உறுதியாகவும் அவன் மீது வீழ்ந்தது. " நான் வீட்டிலை உங்கடை விருப்பத்தை சொல் றன். அதேவேளை எனக்கும் இதிலை சம்மதம் எண்டதையும் சொல்லுவன்"

இரசனையும் ஏக்கமும் தவிப்பும் பின்னிப் பிணைந்த கதையொன்று மகிழ்ச்சிகரமான முடிவாக முற்றுப்பெற்றது போன்ற ஏக்கப் பெருமூச்சோடு அவளைப் பார்க்கிறான்.

கணபதிப்பிள்ளை ஞானசீலன்
வல்வெட்டித்துறை

“நூற்றாண்டு கடந்து வாழும்

அந்திசாயும் அழகிய மாலைப்பொழுது இருமருங்கிலும் சோலையான மரங்கள் நிறைந்த அந்த ஒற்றையடி மணல் பாதையில் கிராமத்தின் அழகையெல்லாம் இரசித்தபடி நான் நடந்து சென்று கொண்டிருந்தேன். நீர்வளமும் நிலவளமும் நிறைந்து இயற்கை வளம் செறிந்த ஓர் அற்புதமான அழகிய கிராமம் அது. மெல்ல வீசிய இளங் காற்று காவி வந்தது. அந்த இதமான தாலாட்டுப் பாடலை என் மனம் அதில் லயத்துப்போனது. பாடல் வந்த

திசையை நோக்கி என் கால்கள் கட்டளை இடாமலேயே தானாக நகர்ந்தது. பாடல் வந்த படலையைத் திறந்தேன். அங்கே ஒரு பாட்டி பாக்கு இடித்தபடி கால்களை நீட்டி அமர்ந்திருந்தாள். சுற்றிவர பாட்டியின் பேரன், பேர்த்தி, பூட்டன், பூட்டி, கொள்ளுப்பேரன் எனப் பலர் என்னைக் கண்டதும் தாலாட்டு தாமதித்து விட்டது ஏனம்மா? என்று கேட்டேன். உங்கள் தாலாட்டு கேட்கத்தானே வந்தேன் என்றேன். இது வென்ன தாலாட்டு என்ற அம்மாச்சி இவாதான். இவா பாடினா பக்கத்து வீட்டுக் குந்தையும் தானாக கண்ணயரும் என்றார். பாட்டியைப் பார்த்தேன். என்னைப் பார்த்துச் சிரித்தாள். மெல்லக் கூன் விழுந்த முதுகு வயதின் வரம்பை அறிவித்தது. பாட்டிக்கு என்ன வயது என்றேன். 116 என்றார். அதிர்ந்து விட்டேன். அற்புதமான அந்தப் பொக்கிசத்துடன் உரையாடியதை உங்களுடனும் பகிர்ந்து கொள்கின்றேன்

திருமதி கிறிஸ்தோமரியையின் பிறப்பு முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 14 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள ஊரே மந்துவில் கிராமம். 2.7 சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவுடைய இக்கிராமத்தில் 609 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 833 அங்கத்தவர்கள் வாழ்கின்றார்கள். எம் 38 கிராம சேவகர் பிரிவுக்குள் உள்ளடங்குகின்றது. மந்துவில் கிராமத்தில் 1901 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 08 ஆம் திகதி பிறந்தார். 13 பிள்ளைகளின் தாயாரான இவர் ஒரு கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். இதுவரைக்கும் இவர் 13 பிள்ளைகளையும் 53 பேரப்பிள்ளைகளையும் 114 பூட்டப் பிள்ளைகளையும் 49 கொப்பூட்டப் பிள்ளைகளையும் கண்டுள்ளார்.

தொழில்

தனது இளமைக்காலத்தில் தனது வீட்டிலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திலுள்ள வயலுக்குச் சென்று விதைத்தல், அறுவடை செய்தல், சாறுதல் போன்ற வேலைகளோடு சிறுபோகம், பெரும் போகம், மிளகாய்க்கன்று, மரக்கறித் தோட்டம் எனச் செய்து வந்தார். இவ் வேலைகளை இளமையோடு நிறுத்தி விடாது 80 வயதைத் தாண்டியும் செய்து வந்தார். அந்நாட்களில் கணவரோடும் பிள்ளைகயோடும் கால்நடையாக அதிகாலை ஐந்து மணிக்குச் சென்று விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுவார். ஆண்களுக்கு நிகராக அழகாகவும் வேகமாகவும் வயல் வேலைகளைச் செய்து வந்தார். களைப்பாக இருக்கும் போதும் மற்றவர்களை உற்சாகப்படுத்தவும் இடையிடையே விவசாய நாட்டார் பாடல்களை பாடிமகிழ்விப்பார். பண்ணை வேலைகளையும் செய்தல் அந்தக் காலத்தில் தொடர்ச்சியான உழைப்புத்தான் இன்று ஆரோக்கியமாக இருப்பதற்கு காரணம் என்கிறார்.

உணவு முறை

முன்னைய காலங்களில் இவரின் காலை- மாலை உணவாக குரக்கன் பிட்டு, ஒடியல் பிட்டு என்பனவற்றை நேரம் தவறாது உட்கொண்டு வந்தார்.

ஞாயிற்றுக்கிழமைகளில் கூழ் காய்ச்சிக் குடிப்பதும் இடையிடையே பனாட்டுச் சாப்பிடுதல் போன்ற உணவுப் பழக்கங்களை இவரின் 116 வயதின் இரகசியம் என்கிறார்.

தயிர், மோர், ஆட்டுப்பால், பசுப்பால் ஆகியவற்றை அளவோடு குடித்துத் தேறினார். மாம்பழம், பலாப்பழம், பப்பாப்பழம், வாழைப்பழம் ஆகிய பழவகைகளைப் சாப்பாட்டுக்குப் பின்னர் உட்கொண்டார். ஒரு நாளைக்கு மூன்று லீற்றர் குடி தண்ணீர் குடித்து வந்தார். பசிக்கின்ற வேளைகளில் மாத்திரமே புசித்து வந்தார். எந்த உணவையும் பற்களால் நன்கு அரைத்துத்தான் உண்பார். கீழே இருந்து சப்பாணி (சாப்பாட்டு ஆசனம், சுகாசனம்) போட்டுத்தான் சாப்பிடுவார். அவதிப்பட்டோ விரைவாகவோ சாப்பிடாமல் உணவுக்குரிய மரியாதை கொடுத்து இரசித்து ருசித்துச் சாப்பிடுவார். சாப்பாட்டுக்கு முன்னர் சாப்பாட்டுக்கு சிலுவை அடையாளம் போட்டு இறைவனுக்கு நன்றி கூறிச்

> “ **கடந்து வந்த பாதையில் கிடந்தெடுத்த பொக்கிஷங்கள்**
>
> கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த குடி தமிழ்க்குடி என்பார்கள்.
>
> அன்று தொட்டு எமது பண்பாடு, கலாசாரங்கள் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தது. இருப்பினும் தற்போதைய அதி நவீன உலகில் எமது கலாசாரம் சிதைவடையும் நிலையில் உள்ளது மறுக்க முடியாத உண்மை.
>
> நூற்றாண்டு கடந்து வாழ்தல் என்பது வியப்பிற்குரிய விடயம். இந்த வரிசையில் முறையே 116, 106 வயதுகளில் தற்போதும் எமது சமூகத்தில் ஆரோக்கியமாக வாழ்ந்து கொண்டிருக்கும் முதுசங்களிடம் அன்றைய எமது கலாசார விழிமியங்களின் நிலை பற்றியும் வாழ்வு முறை பற்றியும் தகவலறிந்து கொள்வதுடன் அவர்களை கௌரவப்படுத்த வேண்டியதும் எம் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும். ”

சாப்பிடுவார். இவை இளமைக் காலத்திலிருந்து கடைப்பிடித்து வந்தார்.

ஆன்மீகம்

சிறுவயதில் இருந்தே கோவிலுக்குப் புனித சூசையப்பர் ஆலயத்திற்குச் சென்று வழிபடுவார். இறைபக்தி நிறைந்த இவருக்கு அன்னை மரியாளின் நாம த்தையொட்டி இவருக்கும் இவரது பெற்றோர்கள் மரியை என்று சூட்டினார்கள்.

இந்த 116 வயதிலும் தினந்தோறும் செபமாலை ஓதுபவராகவுள்ளார். இவரின் பெற்றோர்கள் சிறுவயதில் இட்ட ஆன்மீக வழிகாட்டலே இதற்குக் காரணமாகும்.

மருத்துவம்

இவர் நோய்கள் வராதவண்ணம் முற்காப்பு நடவடிக்கைகள் செய்து கொள்வார். இத்தனை வயதிற்கும் இந்த மூதாட்டி நோய் என்று வைத்திய சாலைக்குப் போனதில்லையாம். அவ்வாறு காய்ச்சல், தடிமன் வந்தால்கூட மருந்து, மாத்திரைகள் பாவிப்பதில்லை. மாறாக மூலிகை களைக் கொண்டு சித்த வைத்திய முறைப்படி குணப்படுத்துவார். சித்த வைத்தியத்தையும் அறிந்திருக்கின்றார். தனக்கும் பிள்ளைகளுக்கும் சித்த வைத்தியத்தைப் பயன்படுத்தியுள்ளார். உடல் நலக் குறைவு என்றால் கூட வைத்தியசாலைக்கு போக விரும்பமாட்டார். ஒவ்வொரு நாளும் மதள் குளிப்பாட்டி முகப்பவுடர் பூசி சுத்தமான ஆடைகளை அணிவிப்பார். மூதாட்டியின் கட்டளையும் அதுதான்.

பாராட்டுக்களும் விருதுகளும்

2012 - இல் இடம்பெயர்ந்து வவுனியாவில் இருந்தபோது மாவட்டச் செயலகத்தினால் அதிகூடிய வயதினருக்கான கௌரவிப்பில் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். 2017 இல் புதுக்குடியிருப்பு யோகாப் பயிற்சிக் கல்லூரியின் கலை இலக்கியப் பெருமன்றத்தினால் வாழ்நாள் சாதனையாளர் விருதையும் 2017 - மல்லிகைத்தீவு இளைஞர் கழகத்தினால் பொக்கிசம் என்ற விருதையும் 2017 - மல்லிகைத்தீவு கிராம அபிவிருத்தி சங்கத்தினால் முதுசம் என்ற விருதையும் பெற்றார். இவருடைய பெயரால் மரியாள் தோட்டமும் மரியா பெர்னா கல்வி நிதியமும் இயங்குகிறது.

இவருடைய பரம்பரை ஆயுள் கூடிய பரம்பரை. இந்த மூதாட்டியின் தாயார் 106 வயதிலும் கணவர் 99 வயதிலும் அமரத்துவம் ஆனார்கள்.

நான்கு தலைமுறைகளைக் கண்டு நூலகமாகத் திகழும் இந்த மூதாட்டியை வாழும்போதே வாழ்த்துவோம்.

மெல்லிய மழைச்சாரல் என்னை
கிடந்தது. பாதையின் இருமருங்கையி
களை தழுவி வந்த இளம் காற்று கில்
கரவண்டி அந்தச் செம்மண் தரையில்
மந்தை வீதியின் குறுக்கே என் சைக்கிளை
தேன். அங்கே ஒரு சைவப் பழத்தைக் க
னப் பொட்டு. நரை திரை வயது 80 இரு
விட்டு தாத்தாவின் அருகே சென்றேன்
இருக்கிறீர்களே! எப்படி? மோனே என
பிட்டும் மனத்திடமும் இருந்தால் இ
ஆரோக்கியத்தின் இரகசியத்தைப் பகிர

மு.ஆறுமுக
முல்லைத
வில் அமை

சதுரக்கிலோ
ம்பங்களைச்
கின்றார்கள்.
குகின்றது. 19
பளையில் பி
நிரந்தர வதிவி
தந்தையாரா

தொழில்

ஆரம்ப
மாவட்டத்தில்
பெற்றார். பல
யாகப் பணி
காலை 4 ம
வாசலையும்
வயதிலும்
லிகள் பழுதா
துக் கொள்வ
விடமாட்டார்
தொட்டிகளுள்
வேலை செய்

உணவு

குறிப்பிட்
பிட்டு என்பன
சுட்டுச் சாப்பிடு
மையப்படுத்தி
தும் இயற்கை
மருந்தடிக்கா
வினை
அவசரப்பட்
சாப்பிட
த்தேஉண்பார்
உண வினை
தாக அறிமுக
நடக்கும் போ
செய்தால் உ
தைரியமாகப்
க்கம் தான்

சிறுவயதி

” நூலகங்கள்”

ன்னை நனைத்தது. வானத்தை இருள் கௌவித்தான் ங்கையும் தனதாக்கிச் செழித்து நின்ற கனிச்சோலை று சில்லென்று என் மேனியைத் தழுவ எனது துவிச்சக் துரையில் மெல்ல ஊர்ந்தது. எங்கிருந்தோ ஓர் ஆட்டு சக்கிளை நிறுத்தியது. ஆடுகள் வந்த பக்கம் திரும்பிப் பார்த் த்தைக் கண்டேன். நெற்றி நிறைந்த விபூதி. நடுவில் சந்த 80 இருக்குமென நினைத்தேன். சைக்கிளை ஓரங்கட்டி ன்றேன். தாத்தா இந்த வயதிலும் இப்படி இளமையாக னே எனக்கு இப்ப 106 வயது. குரக்கன் பிட்டும் ஒடியல் தால் இளமை தானாக வருமப்பு என்றார். அவரின் தப் பகிர உங்களையும் அழைக் கின்றேன் வாருங்கள்.

ஆறுமுகம் அவர்களின் பிறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 19 கிலோ மீற்றர் தொலை அமைந்துள்ள ஊரே வள்ளிபுனக்கிராமம். 55.9

க்கிலோமீற்றர் பரப்பளவுடைய இக்கிராமத்தில் 629 குடு களைச் சேர்ந்த ஆயிரத்து 902 அங்கத் தவர்கள் வாழ் றார்கள். எம் 45 கிராம சேவகர் பிரிவுக்குள் உள்ளடங் ன்றது. 1911 ஆம் ஆண்டு 9 ஆம் மாதம் 22 ஆம் திகதி ளயில் பிறந்தார். தற்போது மகளுடன் வள்ளிபுனத்தில் தர வதிவிடமாக வசித்து வருகிறார். ஐந்து பிள்ளைகளின் தயாரான இவர் ஓர் இந்து மதத்தினைச் சேர்ந்தவர்.

தொழில்

ஆரம்ப காலங்களில் பல வருடங்களாக மன்னார் ட்டத்தில் மிருக வைத்தியராகப் பணிபுரிந்து ஓய்வு றார். பணிக்காலங்களில் விடுமுறை எடுக்காது நேர்த்தி ப் பணி செய்ததாகக் குறிப்பிடுகின்றார். தற்போது அதி ல 4 மணிக்கு எழுந்து கால் ஏக்கர் வளவினையும் வீடு லையும் கூட்டித் துப்புரவு செய்து கொள்ளுவார். இந்த லும் எந்தவிதச் சோர்வுமின்றி இயங்குகிறார். ஓலைவே ர் பழுதடைந்தால் அவற்றினைப் பிடுங்கி திரும்ப அடைத் கொள்வார். தனது முற்றத்தில் ஓரிரு இலைகளைக் கூட ாட்டார். குனிந்து பொறுக்கி அதனைக் குப்பைத் ட்டிக்குள் போடுவார். இந்த வயதிலும் தொடர்ச்சியாக ல செய்யும் ஆற்றல் இவரிடம் உண்டு.

உணவு முறை

தறிப்பிட்ட காலங்களில் இவரும் ஒடியல் பிட்டு, குரக்கன் என்பனவற்றை சாப்பிட்டு வந்தார். அத்தோடு பனங் காய் சாப்பிடுதல், பனாட்டு சாப்பிடுதல் போன்ற கற்பக தருவை ப்படுத்திய உணவு வகைகளை உண்டு வந்தார். எப்போ இயற்கையான உணவு வகைகளை விரும்பி உண்பார். தடிக்காத வீட்டுப் பழங்களை விரும்பி உண்பார். உண ன மெல்லமாகவும் நன்கு அரைத்தும் தான் உண்பார். ரப்பட்டோ இன்னொ ருவருடன் கதைத்துக் கொண்டோ ிட மாட்டார். உண விற்கு சில தகுந்த மரியாதை கொடு உண்பார். இந்த 106வயதிலும்மற்றவரின்துணையின்றிதனது வினைத் தனது கைகளால் எடுத்துச் சாப்பிடுவார். புதி அறிமுகமானவர்கள் இவரின் வயதைக் கண்டு இவர் தும் போது இரக்கப்பட்டு இவரின் கையைப் பிடித்து உதவி தால் உடனே கையை விடுங்கள். நான் நடப் பன் என்று யமாகப் பதில் கூறுவார். இவரின் உணவுப் பழக்கவழ தான் இவரின் ஆரோக்கியத்திற்கு காரணம் என்கிறார்.

ஆன்மீகம்

றுவயதிலிருந்தே இந்து ஆலயங் களுக்குச் சென்று தேவாரங்கள், திருவாசகங்கள், பஜனை கள் பாடித் தனது ஆன்மீகத்தை வளர்த் துக் கொண்டார். இன்னும் அருகில் இருக்கின்ற ஆலயத்திற்கு நடந்து சென்று வழிபடுவார். எப்போதும் வெறும் மேனியு டனே காட்சிதருவார். நெற்றி நிறைய விபூதி தரித்து நெஞ்சிலும் கைகளிலும் விபூதி தரித்துக் கொள்வார். சிவசின்னங்களைத் தரித் துக் கொள்வதில் அவ்வளவு பிரியம் இவருக்கு. தான் 106வயதிலும் நடமாடி இய ங்குவதற்கு முதற் காரணம் இறை வனே என்கிறார். எந்தச் செயலைச் செய் தாலும் இறைவனின் ஆணையுடனேயே செய்வார்.

மருத்துவம்

இவருக்கு வருத்தம் வருவதில்லை யாம். அவ்வாறு காய்ச்சல், தடிமன் வந் தாலும் வைத்தியசாலைக்குப் போய் மருந்து எடுப்பத்தில்லையாம். வருத்தத் திற்கு ஏற்ற இயற்கை முறையிலான சிகிச் சைகளைச் செய்து கொள்வார். மிருக வைத்தியராக இருந்த காரணத் தினால் மருத்துவம் சார்ந்த அனுபவங் கள் தாரா ளம். தனது உடலில் இன்னும் சரியான அக்கறையுடன் இருக்கிறார்.

கோழி வளர்ப்பு

இந்த 106 வயதிலும் வீட்டில் 140 ஊர் க்கோழிகளை வளர்க்கின்றார். கோழி களுக்குரிய தீனிகளையும் நீரையும் அவ்வப்போது எடுத்து வைப்பார். ஒவ் வொரு கோழிகளையும் கண்காணித்த வண்ணம் இருப்பார். இந்தக் கோழி வளர்ப்பு பொழுதுபோக்கையும் மகிழ் வையும் தருகின்றது என்று கூறுகின் றார். கடின முயற்சியாளர் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இயங்குபவர். இவரது வீட்டுச் சேவல்கள் கூவி எழுப்ப முன்னரே துயிலெழுந்து விடுவார்.

பத்திரிகை வாசிக்கும் பழக்கம்

இவரது கண்கள் மிகத் தெளிவா னவை. இவருடைய கண்கள் ஓர் இளை ஞனின் கண்கள் போலவே எப்பொழு தும் இருக்கும். இன்றும் பத்திரிகை வாசி க்கும் பழக்கத்தை விடாது செயற்படுத்தி வருகிறார். இத்தகைய பொக்கிசங்களை பிரதேச கலாசாரத் திணைக்களம் அடை யாளம் கண்டு இவர்களைக் கௌரவப் படுத்த வேண்டும். இவர்களை இளம் தலைமுறையினருக்கு அடையாளப்படு த்தி இவர்கள் தொடர்பான இறுவெட்டு கள், நூல்கள் என்பனவற்றின் ஊடாக இவர்களை ஆவணப்படுத்தி எதிர்காலச் சந்ததியினருக்கு கையளிக்க வேண்டும்.

ஜெயம் ஜெகன்

என்னைப் பெத்த ஆத்தா கண்ணீரைத்தான் பார்த்தா

பேரறிவாளன்

26 ஆண்டுகள் சிறை வாழ்க்கை. சுமார் பத் தாயிரம் இரவுகள், பகல்கள்! ஒவ்வொரு நாளும் எத்தனை கொடூரமானதாய் நகர்ந்திருக்கும்?

19 வயதில் இழுத்துச் செல்லப்பட்ட அறிவு, 45 வயதில் பரோலில் வந்துள்ளார். கால் நூற் றாண்டு காலம் என்பது மனித இனத்தின் வர லாற்றில் மிக நீண்டதுதான். 26 ஆண்டுக ளுக்கு முன், கைபேசி கிடையாது; இணை யம் கிடையாது; நால்வழிச் சாலைகள் கிடை யாது; வானளாவிய கட்டடங்கள் கிடையாது. இவை எதையுமே அறிவு பார்த்ததில்லை. அறி ந்திருக்கலாம். ஆனால், அனுபவித்ததில்லை.

வெளியில் வாழ்ந்த 19 ஆண்டு காலத்தில், தான் பார்த்த, அனுபவித்த பலவற்றையும் கடந்த 26 ஆண்டுகளில் அவர் பார்க்க வில்லை. அந்தப் பட்டியலில் முதன்மையாக வருவது இரவு வானும், நிலவும், நட்சத்திர ங்களும்தான். சிறைக்குள் மாலை ஆறு மணிக்குப் பிறகு, அவர் கண்டதெல்லாம் மூன்று சுவர்களும் ஒரு கம்பிக் கதவும்தான். ஓகஸ்ட் 24 ஆம் திகதி, பரோலில் வீட்டுக்கு வந்த நாளில், ஆசை ஆசையாக நிலாவைப் பார்த் தார் அறிவு. ஒளிரும் அமைதியுடன் அப்ப டியே இருந்தது. நிலா. ஆனால், மனிதர் களின் முகங்கள் மாறிப்போயிருந்தன.

தினந்தோறும் அறிவு எதிர்கொள்ளும் கேள்வி, “என்னை அடையாளம் தெரிகி றதா?” என்பதுதான். தான் பழகிய அத்தனை முகங்களுடனும் ஒப்பிட்டு ஒப்பிட்டுக் களை த்துப்போகிறது அறிவின் மூளை. யாரென அடையாளப்படுத்திக்கொண்ட அடுத்த கணம் கட்டித் தழுவி, “என்னை மறந்துவிட்டாயா அறிவு?” என்று கண்ணீர் விடுகின்றனர். அறிவுடன் பள்ளியில் படித்த நண்பர் ஒருவர், தன் மனைவி மற்றும் இரு குழந்தைக ளுடன் வருகிறார். அனைவரையும் அறிமு கப்படுத்திய அவர், தன் மகனை மட்டும் அறிமுகப்படுத்தவில்லை. அந்தச் சிறுவ னைப் பார்த்து, “உன் பெயர் என்ன?” என்று அறிவு கேட்கிறார். “பேரறிவாளன்” என்று சொன்னதும், அவனை கண்ணீர்மல்கக் கட்டியணைத்துக்கொள்கிறார் அறிவு.

முன்பின் அறிவைச் சந்தித்திராத எத்த னையோ பேர், அறிவின் கையைப் பிடித்துக் கொண்டு, “அண்ணா உங்களைப் பார்க்கத் தான் வெகுதொலைவிலிருந்து வந்துள் ளோம்” என்று நெகிழ்கின்றனர். அந்தத் தருணத்தில், அற்புதம் - குயில்தாசனின் மகனாக மட்டுமல்ல... உலகெங்கும் உள்ள பல தமிழ்க் குடும்பங்களுக்கு உறவாகி நின்றார், அறிவு.

அத்தனை பேரின் அன்பையும் ஒரே மாதிரியாக வாஞ்சையுடன் அங்கீகரித்து ஏற் றுக்கொள்ளும் அறிவின் பக்குவம் வியப் பூட்டுகிறது. மரண தண்டனை சிறைவா சியாக தனிமைச் சிறையில் இருந்தபோது, பல முறை தூக்கிலிடுவத ற்கான நாள் குறிக்கப்பட்ட ஒரு சிறைவாசி யாக, பொலிஸாரின் கொடூர மான சித்திரவதைகளை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அனுபவித்த ஒருவராக இருந்த போதும், அறிவிடமிருந்து அந்தப் புன்ன கையை மட்டும் எவராலும் பறிக்க முடியவில்லை.

அவருக்குப் பிடித்த உண வைச் சமைத்துத் தருவதில் உறவுகளுக்குள் போட்டி. பக்கத்து வீட்டு இஸ்லாமிய குடும்பத்தினர், வீட்டுக்கே வந்து பிரியாணி சமைத்துக் கொடுக்கிறார்கள். அறிவுக்கு மிகவும் பிடித்தது மீன் உணவு. ஆனால், சிறைச் சட்டங் களின்படி, சிறைக்குள் மீன் சமைப்பதில்லை. 26 ஆண் டுகளுக்குப்பின் மீன் உண வைச் சாப்பிட்டார். “அம்மா... இது நீங்க செஞ்சதுதானே? அதே சுவை...” என்றதும், தாயின் கண்களில் கண் ணீர் கசிகிறது.

தந்தையின் சிகிச்சைக்காக வந்த மகன், படுத்தப் படுக்கையாக இருக்கும் தந்தையை இந்த ஒரு மாத காலத்தில் எழுந்து அமரும் நிலை ககுக் கொண்டு வந்துள்ளார். ஆனால், மகனை மீண்டும் சிறைக்கு அனுப்புவது என்பது அந்தத் தந்தையின் மனநிலையையும் உடல் நிலையையும் எப்படி பாதிக்கப்போகிறதோ

தெரியவில்லை.

இரவு நேரத்தில் மட்டுமே குடும்பத்தி னருடன் உரையாட அவருக்கு நேரம் கிடை க்கிறது. அந்த நேரத்தில், சிறுவயது நிகழ்வு களை நினைவு கூர்வதும், சகோதரிகளுட னும் அவர்களின் குழந்தைகளுடனும் கேலி பேசி சிரிப்பதும் எனப் பொழுதுபோகிறது. அறிவு நன்றாகப் பாடுவார். இளையராஜா வின் குரல், அறிவுக்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். அறிவின் அக்கா மகன் ஒரு குண் டானைக் கவிழ்த்துப்போட்டுத் தாளம்போட, பாட்டுக் கச்சேரி இரவில் தொடங்குகிறது. அப்போது, இளையராஜாவின் குரலில் அறிவு பாடிய பாடல்களில் ஒன்று...

பொன்னப் போல ஆத்தா
என்னப் பெத்து போட்டா...
என்னப் பெத்த ஆத்தா
கண்ணீரதான் பார்த்தா...
சொல்லி சொல்லி ஆறாது
சொன்னா துயர் தீராது...

எத்தனை பொருத்தமானப்பாடல் அந்தத்தாய்-மகன் உறவு நம்மை கலங்க வைக் கிறது.

‘அவ்வளவுதான். எல்லாம் முடிந்தது’ என முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட தன் கதைக்கு, வலிக்க வலிக்க அடுத்தடுத்த அத்தியாய ங்களை எழுதி உயிர் கொடுத்தார் பேரறிவா ளன். சிறையின் கொடூரங்களுக்கு மத்தியி லும், நீதியைத் தேடியடையும் துடிப்பு அவரை நகர்த்திச் சென்றது. நடுக்கடலில் மூழ்கிவிட்ட நீதி எனும் கப்பலை, சிறிது சிறிதாய் நகர்த்தி, கரைக்கு மிக அருகில் நிறுத்தியிருக்கிறார். அது கரையேற வேண்டும். பேரறிவாளன், 30 நாட்கள் கண்ட இந்த நிலா, பேரொளி மிக்க சூரியனாய், அவர் வாழ்வின் நிரந்தர விடியலாய் மாற வேண்டும்.

ஜுனியர் விகடன்



செப்டம்பர் பயங்கரம்!

ஒரு பொல்லாத யானையைப் போல் தடதடவென்று புளோரிடாவுக்குள் புகுந்து கண்ணில்பட்ட அனைத்தையும் சீற்றத்துடன் மிதித்துப் போட்டு விட்டுச் சென்றிருக்கிறது இர்மா புயல்.

இர்மா புயலின் நீள அகலமும் புளோரிடாவின் நீள அகலமும் கிட்டத்தட்ட ஒன்றே என்பதால் அழிவும் பெரிதாகவே இருந்திருக்கிறது. இப்படியெல்லாம் நடக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கவேயில்லை என்று புளோரிடா நிச்சயம் சொல்ல முடியாது. வெகு தூரத்தில் முதல் மணியோசை கேட்கும்போதே வருவது யானை என்று வானியல் நிபுணர்கள் எச்சரித்து விட்டார்கள். முடிந்தவரை எல்லோரும் வெளியேறி விடுங்கள் என்றும் அறிவித்து விட்டார்கள்.

இர்மா தொடங்கியது என்னவோ ஆபிரிக்காவில்தான். மேகக் கூட்டங்களாகவும் சிறு துளி மழையாகவும் தொடங்கிய இர்மா அமைதியாகத் தவழ்ந்தபடியே அட்லாண்டிக் பெருங்கடலைத் தொட்டது. ஓகஸ்ட் 27 ஆம் திகதி அது புயலாக மாற்றமடைந்தது. பாதி அட்லாண்டிக் கடலிலேயே காட்டுத் தீபோல வளர்ந்துவிட்ட இர்மா மேற்கில் நகர நகர, ஐந்தாம்எண் அபாயம் கொண்ட ஒரு பெரும் புயலாக முழு வளர்ச்சி கண்டு விட்டது. அடுத்து புளோரிடா தான் என்று அப்போதே திட்டவட்டமாகச் சொல்லி விட்டார்கள். அவசர நிலைப் பிரகடனமும் அறிவித்து விட்டார்கள். புளோரிடாவின் ஒட்டு மொத்த மக்கள் தொகையில் குறைந்தது 25 சதவிகிதம் பேராவது உடனடியாக வெளியேறிச் செல்ல வேண்டும் என்று அறிவிக்கப்பட்டது.

செப்டெம்பர் 8 ஆம் திகதி மழை பெய்திருக்கிறது. மழையா அல்லது கூரையில் ஏதாவது சத்தமா என்று கேட்கும்படியான சிக்கனமான மழை. பிறகு பலத்த மழை. சனிக்கிழமை மிதமான புயல் ஆரம்பமாகிவிட்டது. காற்று சுழற்றியடிப்பது வீட்டுக்குள் கேட்கும் என்றாலும், ஒருவரும் அச்சப்படவில்லை. புயல் அவர்களுக்குப் புதிதல்ல என்பதால், பாப்கார்ன் கொரித்துக் கொண்டே டி.வி பார்த்துக் கொண்டிருந்தனர். மதிய அளவில் காற்று வீசுவதும் நின்றுவிட்டது. தரையில் விழுந்துகிடக்கும் மரங்களை வேடிக்கை பார்க்க மக்கள் வீதிகளில் நடக்கத் தொடங்கினர். பொழுது விடிந்தால் எல்லாம் சரியாகி விடும் என்று சொல்லிக் கொண்டார்கள். தேவையில்லாமல் பிரிட்ஜ் முழுக்கத் தின்பண்டங்களை வாங்கி அடுக்கி வைத்தது குறித்து ஓரளவு வெட்கமும் அடைந்தார்கள். ஆனால், பொழுது விடிவதற்குள் இர்மாவின் பலம் பிடிபட்டுவிட்டது.

அட்டைப்பெட்டிபோல் தன் வீடு அக்குஅக்காகப் பிரிந்து வெள்ளத்தில் மிதந்து செல்வதைக் கண்ணீருடன் பார்த்து நிற்பதைத் தவிர வேறு வழி தெரியவில்லை பலருக்கு. பெரும்பாலான வீடுகளில் மேற்கூரை இல்லை. கிட்டத்தட்ட எல்லா ஆங்கிலத் திரைப் படங்களிலும் காட்டப்படும் ஹொலிவுட் என்னும் வெள்ளை எழுத்துகொண்ட மலையடி வாரத்தில் உள்ள ஹொலிவுட் ஹில்ஸ் பகுதியிலுள்ள ஒரு வைத்தியசாலையில் குளிர்சாதனப் பெட்டிகள் இயங்காததால், வெப்பத்தில் கருகி எட்டுப்பேர் இறந்து போயிருக்கிறார்கள். மிச்சமிருந்த நூற்றுக்கு மேற்பட்ட நோயாளிகளை வேறு வைத்தியசாலைக்கு மாற்றிக்கொண்டு செல்வதற்குள் பெரும் பாடாகிவிட்டது. மொத்தமுள்ள 700 வைத்தியசாலைகளில் கிட்டத்தட்ட 150 வைத்தியசாலைகளில் மின்சாரம் இல்லை. மின்சார வசதி ஓரளவு இருக்கும்,வைத்தியசாலைகளில் நோயாளிகளை அனுமதிக்க இடமில்லை.

புளோரிடாவின் இன்னொரு பெயர் ஓய்வு பெற்றவர்களின் சொர்க்காபுரி. பரபரப்பான அமெரிக்க வாழ்விலிருந்து ஒரு வழியாக மீண்டு, காலை நீட்டி அமர்ந்து கடலைப் பார்த்து ரசிக்கும் முதியோர்களின் எண்ணிக்கை அங்கே அதிகம். ஐந்து பேரில் ஒருவர், 65 வயதுக்கு மேற்பட்டோர். இர்மா இவர்களுடைய சொர்க்கத்தை நரகமாக மாற்றியிருக்கிறது. புயலில் இருந்து தப்பியே ஆக வேண்டும். ஆனால், கைத்தடியோ தள்ளுவண்டியோ இல்லாமல் ஓரடி கூட எடுத்து வைக்கமுடியாத இவர்களால் என்ன செய்ய முடியும்?

புளோரிடாவை ஒரு நோட்டம் விட்டுவிட்டு டொனால்ட் ட்ரம்ப் வெளியிட்ட கருத்தை இன்னொரு குட்டிப்புயல் என்றுதான் அழைக்க வேண்டும். 'புயலின் அளவைப் பார்த்துவிட்டு; ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் வாழ்வைத் தொலைத்திருப்பார்கள் என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். ஆனால், நிஜத்தில் வெகு சிலரே இறந்து போயிருக்கிறார்கள்' இறந்தவர்களின் குடும்பங்களை நேரில் சந்தித்து இப்படித்தான் ஆறுதல் சொல்லியிருக்கிறார் ட்ரம்ப். அதிகாரபூர்வக் குறிப்புகளின்படி, அமெரிக்காவில் மட்டும் முப்பதுக்கும் மேற்பட்டோர் புயலால் இறந்திருக்கிறார்கள். கரீபியன் தீவுகளையும் சேர்த்துக் கொண்டால் எண்ணிக்கை எழுபதைத் தாண்டிவிடும். 2005ஆம் ஆண்டு ஏற்பட்ட காட்ரீனா புயலில் 1,800 பேர் கொல்லப்பட்டனர் என்பதாலேயே இர்மாவில் இறந்தவர்களை 'வெகு சிலர்' என்று ட்ரம்ப் குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லை.

அடித்தது என்னவோ ஒரே புயல்தான் என்றாலும், அதன் பாதிப்பிலிருந்து மீண்டுவர ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு விதமான போராட்டத்தைச் சந்திக்க வேண்டியிருக்கும். உதாரணத்துக்கு, புளோரிடாவில் ஐந்து இலட்சத்துக்கும் அதிகமான வீடு களில் மின்சாரம் துண்டிக்கப் பட்டு விட்டது. ஆனால், புயல் கடந்து சென்ற சில தினங்களில் மெல்ல மெல்ல இணைப்புச் சரி செய்யப் பட்டு விட்டது. ஆனால், பியூரிட்டோ ரிகோவில் இருப்பவர்களுக்கு மின்சார இணைப்புக் கிடைக்க அநேகமாகச் சில மாதங்கள்வரை ஆகலாம். புளோரிடா சில தினங்கள் பட்ட துயரங்களை இவர்கள் மாதக்கணக்கில் பட வேண்டியிருக்கும்.

திங்கள் காலை சூரியன் உதித்ததைக் கண்ட பிறகுதான் புளோரிடாவுக்கு உயிரே வந்திருக்கிறது. 'தெருக்களில் நடந்தோம். திரும்பும் பக்கமெல்லாம் குப்பை மலை. நீர் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டிருந்தது. அழிவின் தடங்கள் எல்லா இடங்களிலும் இருக்கின்றன. புளோரிடாவிலிருந்து வெளியேறியவர்கள் அனைவரும் திரும்பிவருவதற்குக் காலமாகும். உடைந்த வீடுகளைச் சரிசெய்ய நேரமாகும். நிறைய வேலை இருக்கிறது. புளோரிடா அனைத்தையும் கடந்து மேலேறிவரும் என்பது மட்டும் தெரிகிறது. அது போதும்" என்கிறார்கள் உள்ளூர்வாசிகள்.

இர்மா விடைபெற்றுக்கொண்டு வெளிச்சத்தை அனுப்பிவைத்த தினம் செப்டெம்பர் 11. அமெரிக்காவால் ஒருபோதும் மறக்க முடியாத தினம்.

ஜூனியர் விகடன்



ஒரே ஆண்டில் தேசிய சாதனையை நான்கு தடவைகள் முறியடித்து வரலாற்றில் இடம்பிடித்தார் அனித்தா

விளையாட்டுத்துறை அமைச்சுடன் இணைந்து விளையாட்டுத்துறைத் திணைக்களம் ஏற்பாடு செய்துள்ள வருடத்தின் மிகப் பெரிய விளையாட்டு திருவிழாவான 43ஆவது தேசிய விளையாட்டு பெருவிழாவின் மெய்வல்லுநர் போட்டிகள் மாத்தறை, கொடவில விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

போட்டிகளின் முதல் நாளான நடைபெற்ற பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தைச் சேர்ந்த அனித்தா ஜெகதீஸ்வரன் 3.48 மீற்றர் உயரத்தைத் தாவி மீண்டும் தேசிய சாதனை படைத்து, இவ்வருடத்தில் தொடர்ச்சியாக 4ஆவது முறையாகவும் தேசிய சாதனையை முறியடித்த வீராங்கனையாக வரலாற்றில் இடம் பிடித்தார்.

போட்டிகளின் ஆரம்பத்தில் 3.42 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து 2016ஆம் ஆண்டு அவரால் நிலைநாட்டப்பட்ட (3.41 மீற்றர்) போட்டிச் சாதனையை முறியடித்த அனித்தா, 2ஆவது முயற்சியாக 3.48 மீற்றர் உயரத்தைத் தாவி புதிய தேசிய சாதனை படைத்தார். எனினும் 3.50 மீற்றருக்காக அவர் மேற்கொண்ட முயற்சி மைதானத்தில் திடீரென பெய்த மழையால் தடைப்பட்டது.

அனித்தாவின் வேண்டுகோளுக்கு இணங்க போட்டிகளை ஆரம்பிக்க நடுவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். எனினும், புற்றரையைக் கொண்ட மைதானத்தில் பெய்த மழையினால் ஏற்பட்ட வழுக்கும் தன்மை காரணமாக ஆசிய போட்டிகளில் பங்குபற்றுவதற்கான அடைவுமட்டமாக அமைந்த 3.50 மீற்றருக்காக அவரால் மேற்கொண்ட 3 முயற்சிகளும் தோல்வியில் முடிந்தன.

இதன்படி, கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தேசிய விளையாட்டு விழாவின் முதல்நாளில் தேசிய சாதனை படைத்த அனித்தா, இவ்வருடமும் போட்டிகளின் முதல் நாளில் தேசிய சாதனை படைத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

முன்னதாக கடந்த ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதி தியகம மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நடைபெற்ற 95ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டிகளில் யாழ். மெய்வல்லுநர் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் கலந்து கொண்ட அனித்தா ஜெகதீஸ்வரன், 3.46 மீற்றர் உயரத்தைத் தாவி புதிய தேசிய சாதனை படைத்தார்.

அத்துடன், இவ்வருடம் நடைபெற்ற தேசிய மெய்வல்லுநர் தகுதிகாண் போட்டிகளில் 3.47 மீற்றர் உயரம் தாவி புதிய தேசிய சாதனை படைத்த அவர், ஒரு வருட காலப்பகுதியில் அதே சாதனையை 4ஆவது தடவையாகவும் முறியடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2013ஆம் ஆண்டிலிருந்து கோலூன்றிப் பாய்தலுக்கான முன்னணி பயிற்றுநர் சுபாஸ்கரனின் பயிற்றுவிப்பின் கீழ் தனது பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்ற அனித்தா, கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தாய்லாந்து திறந்த மெய்வல்லுநர் போட்டித் தொடரில் முதற் தடவையாக இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய சாதனை படைத்த அனித்தா வழங்கிய விசேட செவ்வியில்,

தேசிய சாதனையை 2 வருட காலப்பகுதியில் மீண்டும் புதுப்பிக்க முடிந்தமை மகிழ்ச்சியளிக்கிறது. எனது வெற்றிக்கு முக்கிய காரணமாக இருந்து வருகின்ற எனது பயிற்சியாளர் பாஸ்கரன் ஆசிரியருக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றார்.

எப்படியாவது 3.50 மீற்றர் உயரத்தைத் தாவி ஆசிய போட்டிகளுக்கான அடைவு மட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு எடுத்த முயற்சி நிறைவேறவில்லை.

எனவே இவ்வருடத்துக்கான அனைத்து தேசிய மட்டப் போட்டிகளும் நிறைவுக்கு வந்துள்ள காரணத்தால் அடுத்த வருடம் நடைபெறவுள்ள ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் தகுதிபெறுவதற்கான பயிற்சிகளை தற்போது முதல் நான் முன்னெடுத்துள்ளேன். எனவே 3.50 மீற்றராக உள்ள ஆசிய அடைவு மட்டத்தை விரைவில் எட்டுவதற்கு எண்ணியுள்ளேன். அதற்கான எதிர்வரும் காலங்களில் நடைபெறவுள்ள போட்டித் தொடர்களில் சிறப்பாக விளையாடுவதற்கு எதிர்பார்த்துள்ளேன் எனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை இப்போட்டியில், கிழக்கு மகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட ஏ.ஏ. கருணாவன்ச, 3.10 மீற்றர் உயரம் தாவி 2ஆவது இடத்தையும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த கே.எஸ். பெரேரா 3.00 மீற்றர் உயரம் தாவி 3ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், கோலூன்றிப் பாய்தலில் வட மாகாணத்தைச் சேர்ந்த 2 வீராங்கனைகள் கலந்துகொண்டதுடன், அதில் சீ. ஹெரீனா 5ஆவது இடத்தையும், வி.சத்விகா 6 ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர். (க)

facebook

ஒரு எழுத்தாளன் உருவாகிறான்

என் செல்ல மகளுக்கு நான் அதிக சுதந்திரம்கொடுத்து வளர்த்து விட்டேன். அது என் பிழை அவள் என்னை ஏமாற்றி விட்டாள்.

கடவுளே என்னை மேலும் சோதிக்காதே என்று தன் மனதுக்குள் சொல்லிக் கொண்டார். கடவுள் நம்பிக்கை இல்லாதவர் கோவிலுக்கு போகத் தொடங்கினார்.

பவித்ராவுக்கு கணவனின் போக்கில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்டு மனதுக்குள் சந்தோஷம். டிவி பார்ப்பதை நிறுத்தி விட்டார். யாரோடும் அதிகம் பேசுவதில்லை. ஒரு மூலையில் கதிரையில் அமர்ந்தவாறு சிந்தித்தபடியே இருப்பார். எது வாழ்வில் நடக்க வேண்டுமோ அது நடந்தே தீரும்.

அன்று கையில் ஒரு கடிதத்தோடு சோகமான முகத்தோடு வேலையில் இருந்து ரவீந்திரன் வீட்டுக்கு வந்தார்.

அவரின் நிலை கண்டு பவித்திரா அவரைப் பார்த்து கேட்டாள் என்ன அத்தான் சோகத்தோடு கையில் கடிதத்தோடு வந்திருக்கிறீர்கள்?

கடவுள் என்னை இன்னும் சோதிக்கிறார். நான் வேலை செய்த கம்பனியை ஆதாயம் இல்லை என்பதால் மூடி விட்டார்கள். எனக்கு வேலை போய் விட்டது என்றார் கவலையோடு.

இந்த வேலை போனால்என்ன? உங்கள் அனுபவத்துக்கும் படிப்புக்கும் வேறு வேலை கிடைக்கும் தானே அத்தான். எங்களுக்கு இருக்கும் செல்வம் போதும் எங்கள்குடும்பம்வாழ. எனக்கு வேலை இருக்குது என்று கணவனைத் தேற்றினாள் பவித்திரா.

முப்பது வருடங்கள் வேலை செய்த 60 வயதான எனக்கு இனி யார் வேலை தரப் போகிறார்கள். இனி என்ன வாழ்க்கை எனக்கு? தன் டயரியில் எழுதினார் ரவீந்திரன்.

ஒருநாள் ரவீந்திரன் தனது பழைய டயரிகளைப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அப்படி என்ன அத்தான் டயரியில் பார்க்கிறீர்கள்? பவித்ரா கணவனைக் கேட்டாள்.

எல்லாம் நான் வாழ்ந்த கடந்த கால வாழ்க்கையும் இப்பொது என் நிலையையும் பற்றி யோசித்துக் கொண்டு இருக்கிறேன். என் அம்மா இன்னும் சில காலம் வாழ்ந்திருக்கலாம். எனது மகன் சிறு வயதிலேயே முடமாகி விட்டான். என் ஆசை மகள் என்னை ஏமாற்றி விட்டுப் போய் விட்டாள். எனக்கு இருந்த நல்ல உத்தியோகமும் போய்விட்டது. இனி என்ன வாழ்க்கை என்று எனக்கு ஆகிவிட்டது பவித்திரா என்றார் அலுப்போடு ரவீந்திரன்.

அத்தான். நான் ஒன்று சொல்லுகிறன் கேட்பியலா? சொல்லு அப்படி என்னத்தை சொல்ல வருகிறாய்.

பல வருடங்களாக டயரியில் உங்கள் வாழ்க்கையில் நடந்த சம்பவங்களை குறித்து வைத்திருக்கிறீர்கள். அவற்றை கருவாக வைத்து கற்பனையும் சேர்த்து சிறு கதைகள் எழுத தொடங்குங்கள். அது உங்களுக்கு மன நிம்மதியைத் தரும். நான் அக்கதைகளில் பிழைகள் இருந் தால் திருத்தித் தருகிறேன்.

நான் சிறு கதை எழுதுவதா? எனக்கு அந்தத் திறமை உண்டா பவித்திரா? ஏன் உங்களுக்கு இல்லை?. பொசிட்டிவ்வாக சிந்தியுங்கள். பல காலமாக டயரிகளில் குறிப்பு எழுதி வருகிறீர்களே. அந்த எழுதும் அனுபவம் போதும் என்றாள் பவித்திரா.

எத்தனையோ சம்பவங்கள் என் வாழ்க்கையில் நடந்திருக்கு எதை வைத்து எழுதுவது?

ஏன் உங்களின் மகள் ஒருவனோடு ஓடிப் போனதை கருவாக வைத்து கற்பனையும் கலந்து எழுதுங்கள். பெயரை விஜயா என்று மட்டும் எழுத வேண்டாம்.

அப்ப என்ன பெயர் வைக்க? ஏன் என்னை நீங்கள் திருமணம் செய்ய முன் நீங்கள் காதலித்த ஜமுனாவின் பெயரை வையுங்களேன். அவள் தான் இப்பொது திருமணமாகி அமெரிக்காவுக்குப் போய்விட்டாளே. அவளைப் பற்றிய முழு விபரமும் அவளை வர்ணித்து டயரியில் நிச்சயம் எழுதி இருப்பியளே என்றாள் சிரித்தபடி பவித்திரா. நீ பொல்லாதவள். அவளை நீ இன்னும் மறக்கவில்லை. அது சரி என்ன தலைப்பு கதைக்கு வைப்பது? என்று கேட்டார் ரவீந்திரன்.

சில விநாடிகள் சிந்தித்து விட்டு "ஓடிப்போய்விட்டாள்" என்று வையுங்களேன். பொருத்தமாக இருக்கும்" பவித்திரா சொன்னாள்.

மனைவியின்ஆலோசனைக்கு பின் ரவந்திரனின் முழு நேரமும் எழுதுவதில் இருந்தது. அவரின் மனக்கவலைகள் ஓடி மறைந்தது. நூல்கள் வாசிக்கத் தொடங்கினர். ஒரு பிரபல மாதாந்த சஞ்சிகை நடத்திய சிறு கதைப் போட்டியில் "ஓடிப்போய்விட்டாள்" சிறு கதைக்கு இரண்டாம் பரிசு' 1000 ரூபாய் கிடைத்தது. அதை அவர் எதிர்பார்க்கவில்லை. ரவீந்திரன் கவலைகள் மறந்து, ரவி என்ற புனைபெயரில் சிறுகதை எழுத்தாளனாக மாறினான்.

(முற்றும்)

facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1199

Search for people, places and things — Nagendram Home

அபிநயா அபி

#அழகு என்பது
#நிறத்தில் இல்லை
#யார்மனதையும்
#காயப்படுத்தாத
#குணத்தில்தான்
#இருக்கிறது.....

கேதா ஒலிவண்ணன்

தேங்கி கிடக்கும் குட்டை தான் கல்லெறிந்தால் கலங்கும்
ஓடும் நதி கலங்குவதில்லை,,

இயங்கி கொண்டே இரு ...

கிருஷ்ணமூர்த்தி ஜெசிந்தா

தன்னைவிட ஒருபடி உயர்ந்துவிட்டான் என்றால் அதற்கு மிகவும் மகிழ்ச்சியும், பெருமையும், அடைவது தந்தை மட்டுமே.

நாகா சதீஸ்

காதலிக்கிற
பொண்ணு தான்
பசங்களுக்கு
எப்போதுமே உலக
"அழகி" தான்

விஜிதரன்

சூழ்ச்சியின் முழு உருவம்
இருப்பினும் இக்கால மனிதர்களை



காட்டிலும் உத்தமன் சகுனி....

பிரணவன்

அன்றாடம் அறம் பேசுவோர்
என்ற போர்வைக்குள் இருப்போரின்
அகம் கண்டால் தான் தெரியும்..

அவர்கள் கூறுவதெல்லாம்
அறம் தானா என்று !!

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ்.மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

சுகமான வீடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 102

பற் சுகாதாரம்

கர்ப்பகாலத்தில் வாய் ஆரோக்கியம்

கர்ப்பகாலத்தில் சிறந்த வாய் ஆரோக்கியத்தை பேணுவது ஏன் முக்கியமானது?

- கர்ப்ப காலத்தில் பல் நோய்களினால் உருவாகும் சிக்கல்களை குறைக்க
- சிறுவரிடையே பற்சூத்தை அபாயத்தைக் குறைக்க (தீய பக்றீரியாக்கள், தாயிடம் இருந்து பிறந்த சிசுவிற்குதொற்றும் அபாயத்தை குறைப்பதற்கு)
- பற்சூத்தையுள்ள தாய்மாருக்கு பிறப்பு நிறை குறைந்த பிள்ளைகள் பிறப்பது ஆய்வு மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

கர்ப்பிணிகள் வாய் நோய்களுக்கு அதிக வாய்ப்புள்ளவர்களாக இருப்பது ஏன்?

- உடலில் ஓமோன்களில் ஏற்படும் மாற்றம் காரணமாக முரசு நோயினால் பாதிக்கப்பட வாய்ப்புண்டு. (குருதி வெளியேற்றுகின்ற வீங்கிய முரசு)
- கர்ப்பகாலத்தில் அடிக்கடி சத்தி எடுப்பதால் இரைப்பையிலுள்ள அமிலம் சத்தியுடன் வெளியேறி பற்களை அடிக்கடி தாக்குவதாலும் கர்ப்ப காலத்தில் உணவு விருப்புக்கள் மாறுவதன் காரணமாக இனிப்பு, புளிப்பு உணவுகளை அதிகம் எடுப்பதாலும் பல் மிளிரி அரிப்புக்குள்ளாகும். (வாயினுள் அமிலச் சூழல் ஏற்படுத்துவதன் மூலம்)
- அடிக்கடி உண்பதாலும் ஓங்காளம் அல்லது சத்தியால் பல்துலக்குவதில் ஏற்படும் சிரமத்தாலும் பற் சுகாதாரம் பாதிக்கப்பட்டு பற்களுக்கிடையே உணவு தேக்கம் அடைவதாலும் பல் நோய்கள் துரிதமாக உருவாகும்.

பற்கள் பாதிக்கப்படும் அபாயத்தை எப்படி குறைத்துக்கொள்வது?

- நிறையுணவை உண்ணுங்கள். அமில இனிப்பு உணவுகளை உண்பதைக் கட்டுப்படுத்துங்கள்.
- முடியுமான வேளைகளில் உணவை உண்ட பின் சிறிதளவாவது நீரை அருந்துவதுடன் சத்தியின் பின் வாயைக் கழுவுங்கள்.
- தினமும்இரு தடவைகளாவது(காலை, இரவு நித்திரைக்கு முன்) புளோரைட் உள்ள பற்பசையால் பற்தூரிகை கொண்டு முறையாக பல் துலக்குங்கள்.
- பல் மருத்துவரிடம் கட்டாயம் பரிசோதனை செய்து அவர் விதந்துரைத்த சிகிச்சை முறைகளையும் ஆலோசனைகளையும் கடைப்பிடியுங்கள்.
- பற்சூத்தை உள்ள கர்ப்பவதிக்கு பற்சிதைவு அபாயமும் பிறப்புநிறை குறைந்த குழந்தை பிறப்பதற்கான அபாயமும் அதிகம். பற்சூத்தையிருப்பதால் அப்பல்லைப் பிடுங்க வேண்டும் என பல் வைத்தியர் சிபாரிசு செய்தால் அவற்றை பிடுங்கிக் கொள்ள வேணடும். பலரும் நம்புவது போல கர்ப்பகாலத்தில் சூத்தைப்பற்களைப் பிடுங்குவதால் எந்த ஆபத்தும் ஏற்படாது. சூத்தைப் பல்லை பிடுங்காது வைத்திருப்பதே ஆபத்தானது.

குழந்தையின் பற்கள், வாயின் சுகாதாரம்

பல் முளைத்தல்

- முதற் பற்பல் 6 - 12 மாதத்தில் (வழமையாக 9 மாதமளவில் முளைக்கும். 30 மாத அளவில் (இரண்டரை வயதில்) அனைத்துப் பாற்பற்களும் (இருபது - 20) முழுமையாக முளைத்து விடும்.
- 12 மாத வயதின் பின்னரும் பற்கள் தோன்றாவிட்டால் பல் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளைப் பல் வைத்தியரிடமிருந்து பெறுவது அவசியம்.
- பற்கள் முளைக்கும் காலத்தில் குழந்தைக்கு மெல்லிய காய்ச்சல் வரக்கூடும். இக் காய்ச்சல் நீண்ட நாட்களுக்கு தொடர்ந்திருந்தால் மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- இக்காலத்தில் குழந்தை கையில் கிடைக்கும் பொருட்கள் எதையும் வாயினுள் வைக்கும். இவற்றிலிருந்து நோய்க்கிருமிகள் பிள்ளைக்குத் தொற்றி நோய்கள் ஏற்படலாம். ஆகவே பிள்ளை வாயில் வைக்கக்கூடிய பொருட்கள் அனைத்தும் பாதுகாப்பானதாகவும் சுத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்யுங்கள்.
- பல் முளைக்கும் போது பற்களுக்கிடையே இடைவெளிகள் இருப்பது சாதாரணமானது. இவ் இடைவெளிகள் எல்லாப் பற்களிற்கிடையிலும் இருப்பது சாதாரணமானது. இந்த இடைவெளிகள் எல்லாப் பற்களும் முளைத்த பின் குறைவடையும்.
- குழந்தையால் பற்களில்லாமல் கூட அரைத் திண்ம ஆகாரங்களை உண்ண முடியும். எனவே மேலதிக உணவூட்டலில் வழங்கப்பட்ட ஆலோசனைகளைப் பற்களில்லை என்ற காரணத்துக்காக மாற்ற வேண்டாம்.
- அரிதாக சில குழந்தைகளுக்கு பிறக்கும் போதே பற்கள் இருக்கக்கூடும். இந்தப் பற்கள் ஆடுமாயின் கழன்று விழுந்து சுவாசப்பாதையை அடைக்கக்கூடும். வைத்திய சாலையில் பிள்ளை பிறந்தவுடன் பரிசோதிக்கும் வைத்தியர் இவற்றை அவதானித்தால் அதற்குரிய நடவடிக்கையை எடுப்பார். இவ்வகைப் பற்கள் இருந்து அவை வைத்தியர் கவனிக்கத் தவறிவிட்டால் உடனே வைத்தியரிடம் ஆலோசனை பெறுங்கள்.

குழந்தையின் வாய்ச் சுகாதாரத்தை பேணுவதில் விடப்படும் தவறுகள்

- பற் சூத்தையே குழந்தைகளிடையே பொதுவாகக் காணப்படுகின்ற வாய் சம்பந்தமான நோயாகும். இது முறையான வாய்ச் சுகாதாரத்தைப் பேணாமையினாலேயே பெரும்பானும் உருவாகிறது. இதை பிரதானமாக உணவுகளிலுள்ள சீனி ஊக்குவிக்கிறது.
- பலரும் சிறு குழந்தைகளுக்கு பல் துலக்குவதில்லை. அல்லது புளோரைட் கொண்ட பற்பசையையோ பற்தூரிகையையோ பாவிப்பதில்லை.
- தாயின் பற்சூத்தைக்கு உரிய சிகிச்சை பெறாவிட்டால் அவர் வாயிலுள்ள கிருமி பிள்ளைக்குத் தொற்றிவிடும்.
- நமது பற்களின் மிளிரியில் ஏற்படும் ஆரம்பப் பாதிப்புகள் கண்ணுக்குத் தெரியாதவை. ஒரு பல் வைத்தியரால்லேயே கண்டு பிடிக்க முடியும். பற் சூத்தையானது ஆரம்பத்திலே எந்தவித அசௌகரியங்களையும் தராது.
- எமது கண்ணுக்குப் பற்சூத்தை தெரிகின்றது அல்லது பல் வலி ஏற்படுகின்றது என்றால் பற்சூத்தை மிளிரியைத் தாண்டிச் சென்று விட்டது என்பதே அர்த்தமாகும். அதன் பின் பற்கள் முழுவதுமாகப் பழுதாவதைத் தடுப்பது மிகக் கடினமாகும்
- புளோரைட்டானது பற்களை வலிமையாக்குவதுடன் பற்சூத்தையையும் தடுக்கும். பரிந்துரைக்கப்பட்ட புளோரைட் பற்பசைப் பாவனையானது பல் மிளிரிக்கு நேரடியாக அதாவது மேற்பரப்பிற்கு சரியான அளவிலான புளோரைட்டை வழங்கும்.

எனவே குழந்தைக்கு சிறந்த வாய்ச் சுகாதாரத்தைப் பேண பின்வரும் 3 அடிப்படை பழக்கங்களைப் பின்பற்றுங்கள்.

1. சிறுவயது முதல் ஆரோக்கியமான உணவுகளை அறிமுகப்படுத்துங்கள்.

- பழங்கள்,மரக்கறிகள்,தானியங்கள் என்பவற்றை உணவில் முடியுமான வரை சேருங்கள்.
- இனிப்பு, இனிப்பான உணவுகள், பணிஸ், பிஸ்கட் போன்ற ஒட்டுத்தன்மையான மாப்பொருள் நிறைந்த உணவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

2. குழந்தையின் உணவிற்கும் பானங்களிற்கும் சீனி சேர்க்காதீர்கள்.

- உணவு உண்ட பின்னர் எப்போதும் சிறிதளவு நீரைப் பருகக் கொடுத்தால் வாயினுள் உணவின் மீதிகள் அவற்றின் அமிலத்தன்மை மீதமிருக்காது.

3. முறையாகப் பல்துலக்குங்கள்

4. குழந்தையின் பற்களை ஒழுங்காக நீங்களே சோதியுங்கள்.

- **எதை அவதானிக்க வேண்டும்?**
- அனைத்துப் பற்களையும் முரசுகளையும் பரிசோதனை செய்ய வேண்டும்.
- **எவ்வளவு கால இடைவெளியில் அவதானிக்க வேண்டும்?**
- பல் துலக்கும் போது கிழமைக்கு ஒரு தடவை
- **ஏதாவது மாற்றத்தினை கண்டால் செய்ய வேண்டியது?**
- புளோரைட் உள்ள பற்பசையைப் பாவித்து தொடர்ந்து முறையாகப் பல்துலக்குவதால் நோயானது கட்டுப்படுத்தப்படும்.
- அத்துடன் பற்சுகாதார ஆலோசனையையும் சிகிச்சையையும் பெறுங்கள்.

குழந்தைக்குப் பல் துலக்குதல்

- **எப்போது எதைக்கொண்டு தொடங்க வேண்டும்?**
- முதலாவது பல் முளைத்தவுடனேயே தூரிகை கொண்டு பல்துலக்கத் தொடங்க வேண்டும். ஆனால் முரசுகளையும் நாக்கையும் அதற்கு முன்பிருந்தே சுத்தமான ஈரத்துணித்துண்டை பயன்படுத்தி துடைத்து வர வேண்டும்.
- நாலுக்கும் அதிகமான பற்கள் காணப்படின் குழந்தைகளிற்கான பற்தூரிகையைப் பயன்படுத்துவது கட்டாயமானதாகும்.
- குழந்தை ஒரு வயதை அடைந்தவுடன் புளோரைட்டுள்ள பற்பசையைப் பயன்படுத்துவது கட்டாயமாகும்.

பற்தூரிகையில் பற்பசை எடுக்கும் முறை

பல் துலக்க ஆரம்பிக்கும் போது :-

பற்பசை கொண்ட ரியூப்பை திறந்து நிமிர்த்திப் பிடிக்கவும். இப்போது பற்தூரிகையினால் திறந்த நிலையில் உள்ள ரியூப்பின் மேற் பகுதியை தொடவும். தொடும் போது பற்தூரிகையில் படும் பற்பசையின் அளவு போதுமான தாகும்.

3 வயதளவில் :-

பற்பசை கொண்ட ரியூப்பின் பின்பக்கத்தில் அழுத்தும் போது பற்பசை வெளிவரும். மீண்டும் பற்பசை கொண்ட ரியூப்பில் இருந்து கையினை எடுத்து அழுத்தத்தினைக் குறைக்கும் போது வெளிவந்த பற்பசையில் ஒரு பகுதி ரியூப்பினுள் செல்ல மிகுதியாக வெளியே உள்ள அளவு போதுமானதாகும்.

வளர்ந்தவர்களுக்கு :-

பற்பசை கொண்ட ரியூப்பை அழுத்தும் போது வெளிவரும் கச்சான் கொட்டையளவு பற்பசை போதுமானதாகும்.

எவ்வாறு பல் துலக்குவது?

குழந்தை மகிழ்ச்சியாக இருக்கும் போது (குளிக்கும் நேரம் விரும்பத்தக்கது) பல் துலக்குவதை ஒரு விளையாட்டாக அறிமுகப் படுத்துங்கள். குழந்தை வளரும் போது காலையிலும் இரவில் நித்திரைக்கு முன் பாகவும் தினமும் இரு தடவைகள் பல்துலக்குவது கட்டாயமாகும். ஒவ்வொரு பல்லினதும் அனைத்து மேற்பரப்புகளையும் தொடும் வண்ணம் ஒழுங்காக பல்துலக்கவும்.

குழந்தைக்கு தானாகவே பல்துலக்க முடியுமாயிருந்தாலும் 8 வயது வரை பெற்றோர் கண்காணிப்பது மிகவும் முக்கியமானதாகும். குடும்ப அங்கத்தவர்களோடு சேர்ந்து பல்துலக்கி வந்தால் குழந்தை தானும் பல் துலக்க ஊக்கம் பெறும்.

பற் தூரிகையினை பல் துலக்கிய பின் வைத்திருக்க வேண்டிய முறை :-

பற்தூரிகையினை சரியான முறையில் வைத்திருப்பது அவசியமாகும். ஒவ்வொரு தரமும் பல்துலக்கி முடிந்த பின்பு நன்றாகக் கழுவி மூடியினால் மூடிய பின்னர் பற்தூரிகை நிமிர்ந்திருக்கக்கூடிய நிலையில் வைத்திருத்தல் வேண்டும். இதனால் அடுத்த தடவை பல்துலக்குவதற்காக பற்தூரிகையினை எடுக்கும் போது பற்தூரிகையை பாவிக்க முன் கழுவத் தேவையில்லை. இதனால் பற்பசையானது அதிகளவு நுரைக்காது. பற்பசை நுரைக்காத போது பற்பசை வீணாக்கப்படாது பல்லின் அனைத்து மேற்பரப்புகளுடனும் தொடுகையுறும்.

பல் துலக்குதலை ஆரம்பிக்க வேண்டிய சரியான மருவம்

முதலாவது பாற்பல்
அரும்பிய காலம் முதல்
பல் துலக்க

- பற் தூரிகை (Tooth Brush)
- புளோரைட்டு அடங்கிய

பற்பசை (Tooth Paste) என்பன அவசியம்

உரிய காலத்தில் பல் துலக்குவதை ஆரம்பிப்பதன் மூலம் பற்சூத்தை ஏற்படுவதைத் தடுப்போம்.

நன்றி
சுகாதார திணைக்களம்
யாழ்ப்பாணம்.

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (0764685555) என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

ஜெனிவாவில் 2009 ஆம் ஆண்டு இலங்கை வெற்றி பெற்றது எப்படி?

வெளிவராத தகவல்களைக் கூறும் நூல்

நான்காம் கட்ட ஈழப்போர் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் முடிவடைந்த பின்னர், முதற் தடவையாக மே 27, 2009இல் ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை பெற்றுக்கொண்ட இராஜதந்திர வெற்றி தொடர்பாக சன்ஜ டீ சில்வா ஜயதிலக எழுதிய "Mission Impossible: Geneva" என்ற நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மே 19, 2009இல் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர், இலங்கை அரசாங்கத்தால் வெற்றி கொள்ளப்பட்டதானது இலங்கையைப் பொறுத்தளவிலும் பிராந்திய மற்றும் அனைத்துலக சமூகத்தைப் பொறுத்தளவிலும் ஒரு வரலாற்று முக்கியத்துவம் மிக்க இராணுவ வெற்றியாகவே தற்போதும் நோக்கப்படுகின்றது. ஆனால் இந்த வெற்றியானது ஜெனிவாவில் மேற்குலக சக்திகள் மீது பதிவுசெய்யப்பட்ட ஒரு இராஜதந்திர வெற்றியாக இன்னமும் அடையாளங் காணப்படவில்லை.

இலங்கை ஜெனிவாவில் இராஜதந்திர வெற்றியைப் பெற்றுக் கொள்வதற்கு அப்போதைய இலங்கைக்கான ஐ.நா. தூதுவர் தயான் ஜயதிலக மற்றும் கொழும்பு மற்றும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இடம்பெற்ற கோட்பாட்டு மாற்றங்கள் போன்றன காரணமாக இருந்தன.

சன்ஜ டீ சில்வா ஜயதிலகவினால் தற்போது வெளியிடப்பட்டுள்ள நூலானது, இவருடைய கணவர் தயான் ஜயதிலக, ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு எத்தகைய நகர்வுகளை முன்னெடுத்தார் என்பதை வெளிப்படுத்துகிறது.

குறிப்பாக இலங்கையில் இடம்பெறும் யுத்தத்தை நிறுத்துமாறும் போர்க் குற்றங்கள் தொடர்பாக இலங்கை பொறுப்புக்கூற வேண்டும் எனவும் மேற்குலக நாடுகளால் இலங்கை மீது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதற்காக முன்னெடுக்கப்பட்ட அதேவேளையில் இத்தீர்மானத்தை இலங்கைக்குச் சாதகமான தீர்மானமாக மாற்றுவதற்கு தயான் ஜயதிலக எத்தகைய நடவடிக்கைகளைக் கைக்கொண்டிருந்தார் என்பது "Mission Impossible: Geneva" எனும் நூலின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. Mission Geneva - PAPERBACK

மேற்குலக நாடுகள், அனைத்துலக மனித உரிமை அமைப்புக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அமைப்புக்கள் போன்றவற்றுக்கு அதிர்ச்சியளிக்கும் வகையில், இலங்கைக்குச் சார்பான தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனித்வுரிமைகள் பேரவை நிறைவேற்றியது. அதாவது இலங்கையானது பயங்கரவாதம் மற்றும் பிரிவினைவாதத்திற்கு எதிரான யுத்தத்தை வெற்றி கொண்டுள்ளதாகவும் போருக்குப் பின்னான நிவாரணம் மற்றும் புன்ர்வாழ்வு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு இலங்கை அரசாங்கமானது அனைத்துலக சமூகத்தின் உதவியை நாடி நிற்பதாகவும் சுட்டிக் காட்டி ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அமெரிக்கா, பிரித்தானியா, ஐரோப்பிய ஒன்றியம், பிரான்ஸ் போன்ற சக்தி வாய்ந்த நாடுகள் இலங்கைக்கு ஆதரவான தீர்மானத்தை எதிர்த்த போதிலும் 29 நாடுகள் இதற்கு ஆதரவாகவும் 12 நாடுகள் இதற்கு எதிராகவும் ஆறு நாடுகள் வாக்குகளை அளிக்காத நிலையிலும் இலங்கைக்கு ஆதரவான தீர்மானம் ஒன்றை ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை நிறைவேற்றியது.

இத்தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு தயான் ஜயதிலகவின் மனவுறுதி, வலிமை மற்றும் ஆக்கத்திறன் போன்றவையே காரணமாகும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஜயதிலக இடதுசாரி அரசியல் பின்னணியைக் கொண்டிருந்த போதிலும் இலங்கைக்குச் சார்பாக ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு காரணமாக இருந்ததன் மூலம் உலக வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

இவ்வாறானதொரு இடதுசாரி அரசியல் பின்னணியைக் கொண்டிருந்த ஜயதிலக தனது இராஜதந்திர எண்ணங்களை வெற்றிகரமாக அமுல்படுத்தியிருந்தார். இவரால் அமுல்படுத்தப்பட்ட மூலோபாயங்களின் மூலம் சிறிய நாடுகள் கூட உலகின் சக்தி வாய்ந்த நாடுகளை எதிர்த்து ஐ.நா. பேரவையில் இலங்கைக்கு ஆதரவாக வாக்குகளை அளித்தன என்கின்ற விடயத்தை 'சமச்சீரற்ற இராஜதந்திரம்' என்கின்ற பாடவிதானத்தின் கீழ் சில பல்கலைக்கழகங்களில் தற்போது கற்பிக்கப்படுவதாக திருமதி தயான் ஜயதிலக எழுதிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏப்ரல் 2009இல் இறுதிக் கட்ட யுத்தம் இடம்பெற்ற போது, பாதுகாப்புச் சபையின் செயற்பாட்டிற்காக மேற்குலக நாடுகள் நியூயோர்க்கில் கூட முயற்சித்தன. ஆனால் ரஷ்யா, சீனா போன்ற வீட்டோ அதிகாரத்தைக் கொண்ட நாடுகள் இதற்கு அனுமதிக்கவில்லை.

இதன் பின்னர் மேற்குலக நாடுகள் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தொடர்பாகவும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கான சிறப்புக் கூட்டத்தொடர் ஒன்றை ஏற்பாடு செய்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் தலை மையை மீட்டெடுப்பதற்கான முயற்சி மற்றும் இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கு பங்களிப்புச் செய்தல் போன்ற விடயங்கள் இச்சிறப்புக் கூட்டத்தொடரில் விவாதிக்கப்பட்டது.

இச்சிறப்பு விவாதத்தின் போது இந்தியா, இலங்கைக்கு ஆதரவாக இருந்தது. பூகோள கால மீளாய்வு செயற்றிட்டத்திற்கு அப்பால் குறித்த நாடொன்றின் பெயரிலும் குறித்த நாடொன்றின் மீது தீர்மானம் இயற்றுவது தொடர்பில் இந்தியா தனது எதிர்ப்பை வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் மேற்குலக நாடுகளால் இலங்கைக்கு எதிராக முன்னெடுக்கப்படவிருந்த தீர்மானத்தை தோல்வியடையச் செய்வதற்கான மூலோபாயம் ஒன்றை கலாநிதி ஜயதிலக வகுத்துக்கொண்டார்.

ஜயதிலக தனது அணுகுமுறையில் வெற்றி பெற்றார் எனவும் இவரது அணுகுமுறையானது உணர்ச்சிமிக்கதாகவோ அல்லது அரசியல் நோக்கம் மிக்கதாகவோ இருக்கவில்லை எனவும் ஆனால் இது 'புலமைசார்ந்ததாக' இருந்ததாக திருமதி ஜயதிலக எழுதிய நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சமத்துவம், வெளிப்படைத்தன்மை, ஜனநாயகம் மற்றும் நடைமுறைவாதம் போன்ற உலகளாவிய கோட்பாடுகளுக்கு ஜயதிலக ஆதரவைத் தேடிக்கொண்டார். பொதுமக்களின் உயிர் தொடர்பாகக் கருத்திற் கொள்ளாத பயங்கரவாத அமைப்பொன்றுடன் சட்ட ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஜனநாயக நாடொன்றை சமமாகக் கருதமுடியாது என ஜயதிலக வாதிட்டார். உலகெங்கும் இடம்பெற்ற மற்றும் இடம்பெறும் பல்வேறு யுத்தங்கள் தொடர்பாக ஜயதிலக பெற்றுக்கொண்ட அறிவானது இலங்கை தொடர்பில் ஏற்பட்ட பிரச்சினைகளை விவாதிப்பதற்கு இவருக்கு உதவியது.

நாடுகளின் இறையாண்மை மதிக்கப்பட வேண்டியதன் தேவை தொடர்பாகவும் ஆபத்திலிருக்கும் அதிகாரிகள் 'பாது காப்பதற்கான உரிமை' என்கின்ற கோட் பாட்டின் கீழ் வெளிநாட்டுத் தலையீடுக ளின் மூலம் பாதுகாக்கப்படுவது தொடர் பாகவும் ஜயதிலக வாதிட்டார். அனைத்துலகச் சட்டங்கள் உன்னதமானவையும் புனிதமானவையும். ஆனால் நிறுவக ரீதியான கட்ட மைப்புக்களைக் கொண்டிருக்கவில்லை (சாசனங்கள் தவிர) என மைக்கேல் சாவேஜ் தெரிவித்த கருத்தை ஜயதிலக குறிப் பிட்டிருந்தார். ஆகவே அனைத்துலக நெறிமுறைகளுக்கு ஆதரவாக இறையாண்மை நாடுகள் செயற்படும் போது ஏற்படும் வெற்றிடத்தை அனைத்துலகச் சட்டங்களால் நிரப்பீடு செய்யமுடியாது.

ஜயதிலக தனது இராஜதந்திர சாணாக்கியமானது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளினதும் ஆசியாவின் பலம் பொருந்திய நாடுகளான இந்தியா, பாகிஸ்தஏன் மற்றும் சீனா போன்ற நாடுகளினதும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தக்க வைத்துக் கொண்டது. தமிழ்நாட்டின் அரசியல் அழுத்தத்தையும் பொருட்படுத்தாது இந்தியாவானது இலங்கைக்கு ஆதரவளித்தது.

இந்தியா மற்றும் பாகிஸ்தான் போன்றன காஷ்மீர் மற்றும் ஏனைய பிரச்சினைகளில் முரண்பாட்டைக் கொண்டிருந்த போதிலும் இலங்கை மீதான தீர்மானத்தில் மட்டும் ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தன. நாட்டின் இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும் எனக் கோரி அணிசேரா நாடுகளின் ஆதரவை ஜயதிலக பெற்றுக்கொண்டார். உள்ளக நிலைத்தன்மையானது சட்ட ஒழுங்கைக் கடைப்பிடிப்பதற்கு மட்டும் ன்றி, சமூக, அரசியல், பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களின் வெற்றிக்கும் முக்கியமானதாகும்.

2011இல் ஐ.நா. பொதுச் சபையில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஆற்றிய உரையில் தேசிய இறையாண்மையைப் பாதுகாப்பதும் உறுதிப்படுத்துவதும் அடிப்படை அவசியமாகும் எனக் குறிப்பிட்டிருந்தார். இதையே ஜயதிலகவும் வலியுறுத்தியிருந்தார்.

'சட்ட ஆட்சியைக் கடைப்பிடிப்பதென்பது அனைத்துலக விவகாரங்களிலும் நாடுகளிற்கிடையிலும் மிகவும் முக்கியமானதாகும். இராணுவப் படைகளைப் பயன்படுத்தி மக்களின் ஆதரவைப் பெற்றுக் கொள்ள முடியாது. ஒவ்வொரு நாடுகளிலும் உள்ள மக்கள் தமது சொந்தத் தலைவிதியைத் தாமே தெரிவு செய்ய வேண்டிய மற்றும் தமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்ற உரிமையைக் கொண்டுள்ளனர்' என மன்மோகன் சிங் குறிப்பிட்டிருந்தார்.

ஆங்கிலத்தில் :
பி.கே. பாலச்சந்திரன்
மொழியாக்கம் : நித்தியபாரதி

காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: வியட்நாம் வீடு
இசை: எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



உன் கண்ணில் நீர் வழிந்தால்
என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி
என் கண்ணில் பாவை அன்றோ
கண்ணம்மா என்னுயிர் நின்னதன்றோ

உன்னை கரம் பிடித்தேன்
வாழ்க்கை ஒளிமயம் ஆனதடி
பொன்னை மணந்ததனால் சபையில்
சபையில் புகழும் வளர்ந்ததடி

கால சுமைதாங்கி போலே
மார்பில் எனை தாங்கி
வீழும் கண்ணீர் துடிப்பை
அதில் என் இன்னல் தணியுமடி
ஆழும் விழுதுகள் போல்
உறவு ஆயிரம் வந்தும் என்ன
வேர் என நீ இருந்தாய்
அதில் நான் வீழ்ந்து விடாதிருந்தேன்

முள்ளில் படுக்கையிட்டு
இமையை மூடவிடதிருக்கும்
பிள்ளை குலமடியோ என்ன மை பேதைமை செய்ததடி
பேருக்கு பிள்ளை உண்டு
பேசும் பேச்சுக்கு சொந்தமுண்டு
என் தேவையை யார் அறிவார் உன்னை போல்
தெய்வம் ஒன்றே அறியும்

உங்கள் மாதப்பலன் எப்படி?

(கடந்த வார தொடர்ச்சி)

இந்த மாதத்தில் பிறந்தவர்கள் கலைத்திறமையுடனும் சுறுசுறுப்புடனும் இருந்தாலும் எந்த நடு நிலையிலும் தொடர்ந்து தமது ஊக்கத்தைச் செலுத்த மாட்டார்கள்.

பிறருடன் பழகும் விதம்

இவர்களைப் புரிந்து கொள்வதே கடினம். திடீர் என்று கோபம் கொள்ளுவார்கள். மறு விநாடியே கோபம் தணிந்து அன்புடன் பேசுவார்கள். மீண்டும் மாறிவிடுவார்கள். ஒரு பக்கம் அளவு கடந்த அன்பு செலுத்துவார்கள் மற்றொரு பக்கம் ஏதாவது குறை சொல்லிக் கொண்டே இருப்பார்கள். பொதுவில் இவர்கள் இரட்டை மனம் படைத்தவர்களாகவே இருப்பார்கள். எந்த விடயத்திலும் என்ன முடிவு எடுப்பார்கள் என்பதை இவர்களுடன் நெருங்கிப் பழகுபவர்களால் கூடச் சொல்ல முடியாது.

எந்த ஒரு செயலிலும் விரைந்து ஒரு முடிவுக்கு வருவார்கள். கலைத்திறனுடன் ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டுமென்றால் இவர்களுக்கு ஈடாக மற்றவர்கள் நிற்க முடியாது.

எப்போதும் அளவுடன் பேசுவார்கள். வேடிக்கையாகவும் அதேநேரத்தில் பொருள் செறிந்த சொற்களாகவும் பேசி மற்றவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைப்பார்கள். ஆனால் தொடக்கத்தில் இவர்களிடம் இருக்கும் வேகம் கடைசியில் குறைந்துவிடும்.

மே 21 - ஜூன் 20 ஆம் திகதிக்குள் பிறந்தவர்களுக்கான குண பலன்கள்

மாறுபட்ட மனநிலை

வாழ்க்கையில் இவர்களுக்குத் தேவையானது எது என்று இவர்களுக்கே புரியாது. சமுதாயத்தில் ஒரு நல்ல நிலையில் இருக்க வேண்டும் என்று முதலில் எண்ணுவார்கள். அவர்கள் எண்ணும் நிலையை அடைந்து விட்டாலோ உடனே தமது சலிப்பைக் காட்டுவார்கள். உடனே அதை உதறித் தள்ளிவிட்டு முற்றிலும் வேறுபட்ட மற்றொரு பதவியைத் தேடிச் செல்கிறார்கள். பின்னர் அதே கதைதான்.

நல்ல மனநிலையில் இருக்கும்போது ஒருவர் சொல்லுவதை அப்படியே ஏற்றுக் கொள்வார்கள். ஆனால் எல்லா நேரங்களிலும் தொடர்ந்து ஒருவர் கருத்தை அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்க முடியாது.

நேற்றுப் பேசியதை இன்று தலைகீழாகப் புரட்டத் தயங்க மாட்டார்கள். சுட்டிக் காட்டினால் அவர்கள் மிகுந்த சினம் கொண்டு தாம் அப்படிச் செய்யவேயில்லை என்றும் அவர்கள் பேசியதைக் கேட்டவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்றும் சாதிப்பார்கள்.

இவர்கள் நம்பிக்கையுடனும் உண்மையாகவும் ஒரேமாதிரியாகவும் நடந்து கொள்வதாகத் தங்களுக்குள் எண்ணுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு விநாடியும் அவர்கள் மாறுவது அவர்களுக்கே தெரியாது.

(தொடரும்)

அறியாப் பருவம்

(நிமிடக்கதை)

அன்பானவர்களே... இனிய ஞாயிறு வணக்கங்கள்.

நான் தான் ஜிம்மிக்குட்டி கதைக்கிறன். காலை வேளை சூரியனும் எட்டிப் பார்க்கிறார். கையிலை தேத்தண்ணி முன்னாலை வலம்புரி சங்குநாதம். கண்ணாடியைத் தூக்கி விட்டுக் கொண்டு பெரியவையும் படிச்ச தாய், தேப்பனும் படிப்பிக்கிறவையும் நான் சொல்லுறதை நாய்ப்பிறப்பு எண்டு தள்ளி விடாமை வாசிக்கினை போல கிடக்கு. ஆனா... இளையவர்கள் இதை எட்டிக் கூடப் பாக்கிறேல்லைப்போல கிடக்கு. ஓடிஓடிப் பள்ளிக்கூடம் எண்டும் ரியூசன் ரியூசன் எண்டும் வீட்டை வந்தால் பிரத்தியேக வகுப்பு எண்டும் ம்...ம்... அதுகளுக்கு நேரம் எங்கை கிடக்கு...என்ன ஒருமாதிரிச் சிரிக்கிற மாதிரிக் கிடக்கு. இப்பத்தைக் காலத்திலை வாசிப்பு எண்ட விசயமே காணாமல் போய்க் கொண்டிருக்கெண்டு பெரியவர் நேற்றுக் கவலைப்பட்டவர். சரஸ்வதி பூசைக் காலம் தொடங்கி விட்டுது. சுண் டல்; அவலுக்காக எண்டாலும் இளம் பிள்ளையள் வருமெண்டு பாத்தால்...ம்... வருதுகள் தான்...தூரத்திலை மணலுக்காக தனித்தனியா இருந்து கொண்டு கையிலை டப்பா போனும் காதுக்குள்ளை வயரும் செருகிக் கொண்டு தலையும் ஆட்டிக் கொண்டு தங்கடை பாட்டிலை சிரிச்சுக் கொண்டு இருக்குதுகள். ஆரும் பாத்தால் மூளை சுகமில்லாதவை எண்டுதான் நினைப்பினம்...ம்...தாய், தேப்பனும் கவனிக்கிறேல்லை. வாத்தியாரும் ஏனெண்டும் கேக்கிறேல்லை. கண்டும் காணாமல் போகினம். பெரியவர் மனம் நொந்து கோயில் பிரசங்கத்திலையும் இதைப்பற்றிச் சொன்னவர்...ம்...ஆரோ வருகினம். பார்ப்பம்...

பாலாண்ணை தான் வாறார். ஓ...பாவக்காய் கொண்டு வாறார். ஐஞ்சாறு கிலோ போல கிடக்கு...வத்தல் போடப் போகினமோ...ம்... மழை கும்பம் சரிக்க ஒருக்கா வரும். பிறகு தீவாளி கந்த சட்டிக்கு வரும். இடையிலை காயப் போடலாம். நான்தானே காவலுக்கு இருக்கிறன். ம்... லதாக்குட்டி இலைக்கஞ்சி கொண்டு வாறா... எல்லாருக்கும் குடுக்கிறா...

பாலாண்ணை வாங்கிக் கொண்டு முதுகைத் தட்டிப் பாராட்டிறார். லதாக்குட்டி தாத்தாவுக்குப் பக்கத்திலை போய் நிக்கிறா...முகம் சரியில்லை. ஏதோ தயங்கிறா...பெரியவர் உத்துப் பாக்கிறார்...

"என்னடா...கஞ்சி குடிச்சிட்டாய் தானே...ஏன் ஒரு மாதிரி தயங்கிறாய்...அது பாலா மாமா தானே... சொல்லடா..."

மகன் ஏதோ சொல்லத் தொடங்க பெரியவர் தலையை ஆட்டிறார். பிள்ளை சொல்லட்டும் எண்டு சைகை காட்டிறார்... பிள்ளை அண்ணாந்து தாத்தாவைப் பாக்கிறா.

''தாத்தா...அண்டைக்கு ஒரு டொக்டர் அன்ரி பள்ளிக்கூடம் வந்தவா...அவா முதுகிலை எல்லாம் தொடக்கூடாது ...தலையிலை மட்டும் தொடலாம் எண்டு சொன்னவை... பாலா மாமாவுக்குத் தெரியாது தானே... அதுதான் சொல்லுறதோ எண்டு யோசிச்சுக் கொண்டு நிண்டனான்...''

கடவுளே...!கெட்டிக்காரி தான். நாசுக்காக சொல்லிப் போட்டுது பிள்ளை...பாலாண்ணை அவசரமா ... "சொறியம்மா...எங்கடை மகளும் உதைப்பற்றிச் சொன்னவ தான். நான் உங்களையும் மகளா அப்பிடி நினைச்சுப் போட்டன்...சொறியடா..." பெரியவர் விறைச்சுப் போனார்... லதாக்குட்டி சிரிச்சுக் கொண்டு பரவாயில்லை எண்டு சொல்லுறா. லதாக்குட்டி தொடர்ந்து சொல்லுறா...

"ஓம் தாத்தா "தொடுகை" எண்டுதான் அதைச் சொல்லி விளங்கப்படுத்தினவை. யாரும் யாரையும் அனுமதியில்லாம தொடக்கூடாது. பாராட்டவோ ஆறுதல்படுத்தவோ மட்டும் தலையை வருடலாமாம். உடம்பைத் தொட விடக்கூடாது எண்டும் வைத்தியசாலைக்கு பெண் பிள்ளைகள் அம்மா, சித்தி, அம்மம்மா எண்டு பெண்களுடன்தான் போகட்டாம். தனிய எங்கையும் போக வேண்டாமாம். ஏதாவது நடந்தால் உடனே அம்மாவுக்குச் சொல்லிப் போட வேணுமாம். இன்னும் பெரிய அக்காவைக்குச் சொல்லேக்கை எங்களை வகுப்புக்கு அனுப்பிப் போட்டினம். எங்கடை உடம்பு எங்களுக்கு மட்டும்தானாம். அதைப் பாதுகாக்க வேணுமாம். இவ்வளவும் தான் தாத்தா எனக்கு விளங்கினது.

பெரியவர் கைதட்டி ஆரவாரப்படுகிறார்...

"கெட்டிக்காரி...நான் ஏதோ சின்னப்பிள்ளை. அறியாப் பருவம் குழந்தைதானே எண்டு நினைச்சுக் கொண்டிருக்கிறன். ம்...இந்தக் கால கட்டத்திலை இப்பிடியெல்லாம் அறிவுறுத்த வேண்டிய கட்டாயம் வந்து நெருக்கடிப்படுத்திறது பெரிய துன்பம் தான்...ம்...லதாக்குட்டி என்ன வடிவா விளங்கப்படுத்திப் போட்டியள். எனக்குப் பெருமையா இருக்கு..."

ம்...அம்மாடியோவ்...எவ்வளவு பெரிய விசயம்...இனிக் காவலுக்கு நானும் பின்னாலையே திரிய வேண்டியதுதான். எல்லாரும் எழும்பி வெளிக்கிடினம்...நானும் சாப்பிடப் போறன்.

பாரதி கணேஷ்
சுன்னாகம்

வல்லதேசம்

திரைவிமர்சனம்

அக்ஷன் கதைகளில் பல படங்கள் தமிழ் சினிமாவில் வருகிறது. பெண்களை மையப் படுத்திய படங்களும் சில வந்துள்ளன. கமர்ஷியல் படங்களுக்கு நடுவில் ஒரு சில சின்ன பட்ஜெட் படம் போல வந்திருக்கிறது இந்த வல்லதேசம். இந்த தேசம் எப்படியான தேசம், என்ன சொல்கிறது என பார்க்கலாம்.

வித்தியாசமான பெண்ணான அனுஹாசன், கணவர், தன் குழந்தை அஞ்சலி என சந்தோஷமாய் வாழ்ந்து வருகிறார். மேஜர் ஆதிலிங்கமாக வரும் நாசரின் தலைமையின் கீழ் இராணுவத்தில் நன்கு பயிற்சி பெறுகிறார். தமிழ்நாட்டில் ஏதோ பெரிய சதி நடக்கிறது என்பதை தெரிந்து கொண்ட பொலிஸார் இராணுவத்தின் உதவியை நாடுகின்றனர்.

அப்போது படை வீரர்களுடன் அனுப்பப்படும் அனு டாஸ்கை வெற்றிகரமாக முடிக்கிறார். ஆனால் எதிர்பாராத விளைவால் இவருக்கு கிடைக்கும் பரிசு சஸ்பெண்ட் ஓடர். பின் தன் கணவர், மகளுடன் லண்டன் செல்கிறார். அங்கு செல்லும் இவரின் வாழ்நாள் பெரும் சவாலாகி விடுகிறது.



இந்திய வம்சாவளியை சேர்ந்த வில்லன் டேவிட் லண்டனில் மட்டுமல்ல, சர்வதேச அளவில் வியாபாரம் மூலம் ஆதிக்கம் செலுத்துகிறார். இவர் யார், எதற்காக இப்படி செய்கிறார், இவரின் பின்புலம் என்ன என்பது டுவிஸ்ட்.

திடீரென மர்ம கும்பல் ஒன்று அனுஹாசனை நோட்டம் விட்டு, அவரின் கணவரை கொலை செய்துவிடுகிறது. இவரையும் துப்பாக்கியால் சுட, மகள் அஞ்சலி காணாமல் போகிறாள். பொலிஸாரால வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அனு மீண்டும் எழுந்து மகளை காணாது தவிக்கிறார். ரகசியமாக இருந்து வரும் அவர் விஸ்வரூபம் எடுக்கிறார்.

இவ்விடயம் இந்தியா, லண்டன் என பெரும் பரபரப்பை ஏற்படுத்த கதை சூடுபிடிக்கிறது. அஞ்சலி என்ன ஆனாள், யார் அந்த மர்மக்கும்பல், அனுவின் திட்டம் நிறைவேறியதா என்பது தான் மீதிக்கதை.

அனுஹாசன் கதையின் ஹீரோ. நீண்ட நாட்களுக்கு பிறகு ஒரு முழுமையான ரோலில், அதிலும் அக்ஷனில் தைரியமாக இறங்கியுள்ளார். குடும்பம் என்று வந்த போது மென்மையான மனதும், ஆர்மி என வந்தால் தில்லு என இரட்டை ரோல் போல ஸ்கிரீன் பிளே செய்திருக்கிறார். என்ன இன்னும் கொஞ்சம் இளமை கூடியிருந்தால் அவருக்கும், ரோலுக்கும் இன்னும் அழகாக இருந்திருக்குமோ என தோன்றும். நாசர் வழக்கம் போல என்ன கதாபாத்திரம் கொடுத்தாலும் சிறப்பாக நடிப்பேன் என நிரூபித்துள்ளார். அவருக்கு என்னவோ எல்லா கெட்டப்பும் பொருந்தி விடுகிறது.

இப்படத்தில் சிறு ரோல் என்றாலும் கடைசி வரை இவரின் அழுத்தம் கதையில் இருக்கிறது. இயக்குநர் நந்தா கதையின் நீளத்தை இன்னும் சுருக்கியிருக்கலாம் என சின்னதாக ஒரு பீல். கதையில் கொஞ்சம் கூடுதலாகவே டுவிஸ்ட். ஆனால் முதல் பாதியில் வில்லனின் பின்னணி என்ன என்பதை யூகித்து விடலாம்.

ஆனால் சஸ்பென்ஸ் வைத்து படத்தை நிரப்பிவிட்டார்கள். முதலில் சில நிமிடங்கள் வேகமான காட்சி நகர்வுகள் இருப்பதால் இயற்கையாகவே இப்படி அமைத்திருக்கிறார்களா இல்லை கதையின் நீளத்தை சுருக்குவதற்காகவா என சற்று யோசிக்க வைக்கிறது.

டேட்டா பேஸ் மேனேஜ்மண்ட், சாட்டிலைட் கம்யூனிகேஷன் என பல கான்செப்டைச் செய்து இப்போதைய டெக்னாலஜிக்கு படத்தை பொருத்தியிருக்கிறார்கள். அனுஹாசனின் நடிப்பை பாராட்டலாம். அவர் வசனங்கள் டெலிவரி, இயல்பாக நடித்திருப்பது ஓகே.

அஞ்சலி பாப்பாவின் நடிப்பு ஓகே. கன்னத்தில் முத்தமிட்டால் கீர்த்தனாவின் பிளாஷ் வந்து போகும்.

படத்தில் சூழ் நிலைக்கு ஏற்ப ஒரு பாடல், போதுமான பின்னணி இசை வழக்கமாக இருக்கும் விடயங்களில் ஒன்றாக ட்விஸ்ட், ட்விஸ்ட் என ஒரு சில இடங்களில் குழப்பமடைய செய்வதுதான்.

அம்பானி போன்ற தோற்றத்தில் இருப்பவரை உடனே வில்லனாக பார்க்க சிறு தயக்கம்.

இயக்குநர் இன்னும் வேகப் படுத்தியிருந்தால் கதை ரியல் அக்ஷன் ஃபிலிம் போல மாறியிருக்கும்.

மொத்தத்தில் பெண்ணிற்கு வீட்டில் மட்டுமல்ல, ஆணுக்கும் நிகராக நாட்டிலும் பொறுப்பு இருக்கிறது என சொல்லும் வல்லதேசம். பெண்ணியம் பேசும் தேசம்.